

# ஆர். மணிமாலா

# கண்கள் சொல்லும் ரகசியம்

(முழு நாவல்)

பவுர்ணமி நிலவின் வெளிச்சம் தென்னங்கீற்றுகளின் நுனிகளில் பாலாய் சொட்டிக் கொண்டிருந்தது.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி டேபிள் மீது வைத்த கார்த்திகேயன் ஜன்னல் வழியே தெரிந்த கவிதையை ரசனையுடன் நோக்கினான்.

இயற்கையை விட சிறந்த கவிதை எதுவுமில்லை. இறைவனை விட சிறந்த கவிஞனுமில்லை.


அமைதி தழுவிக் கிடந்த அந்த பிரதேசத்தில் சில வண்டுகளின் கீச் கீச் சத்தம் மட்டும் தாலாட்டாய் கேட்டது.

நிலவு வராத நாட்களில் மலைகளும், மரங்களும் இரவு நேரங்களில் ஆஜானுபாகு குண்டர் மனிதர்களாய் பயமுறுத்தும். ஆனால், இன்று நிலவின் வெளிச்சம் அந்தப் பகுதி முழுவதையும் தழுவி கிளுகிளுக்க வைத்திருந்தது.

இங்கிருந்து சற்று தூரத்தில் கம்பீரமாய் நின்றிருந்தது 'பத்மாவதி பவனம்' அகன்று உயர்ந்திருந்த மாளிகை. பத்மாவதியின் அறையில் இன்னும் விளக்கு எரிந்துக் கொண்டிருக்க.. துணுக்குற்று கடிகாரத்தைப் பார்த்தான் கார்த்திகேயன்.

*11.10.*

'இன்னுமா விழித்திருக்கிறார்கள்?'



# கண்கள் சொல்லும் ரகசியம்

## ஆர்.மணிமாலா



கதவைத் திறந்து வெளியேறி வந்தான் கார்த்திகேயன். அந்த அரைகுறை வெளிச்சத்திலும் அவனின் திமிறிய ஆண்மையும், கம்பீரமும் தெரிந்தது. தோட்டத்தை தாண்டி நுழைவாயில் அருகே சென்றதும், சுருண்டுப் படுத்திருந்த வேல்பாண்டியன் அரவம் கேட்டு உஷாரானான்.

"யாரது?" என்றான் கனமான குரலில்.

"நான்தான்!"

"கார்த்தி ஐயாங்களா? என்னங்கய்யா இந்த நேரத்திலே?"

"கதவைத் திற!"

"சரிங்கய்யா!"

கனமான தேக்கில் கலை நுணுக்கத்துடன் செதுக்கியிருந்த ஒற்றைக் கதவு. பித்தளை வளையங்கள் இடைவெளி



விட்டு இணைக்கப்பட்டிருக்க... திறக்கும் போதே... பராக்.. பராக் என்று அழைப்பு விடுப்பதுபோல கம்பீரமாய் கலகலத்தது.

உள்ளேச் சென்றான்.

படர்ந்திருந்த மிகப் பெரிய ஹால் இரவு விளக்கின் ஒளியில் உறங்கிக் கொண்டிருந்தது.

மாடிப்படியேறி ஓடினான்.

இடது ஓரம் வரிசையாய் வீற்றிருந்த அறைகளில் நான்காவதாய் இருந்த அறையின் கதவு லேசாய் திறந்து விளக்கின் வெளிச்சம் வெளியில் விழுந்திருந்தது.

மரியாதை நிமித்தமாக கதவைத் தட்டினான்.

"யாரது?" அதட்டலாய் கேட்டது குரல்.

"நான்தான்!" என்றபடி உள்ளேச் சென்றான்.

விஸ்தாரமான கட்டிலை ஒட்டி இருந்த நாற்காலியில் சாய்ந்தபடி கனமான புத்தகமொன்றை மடியில் இருத்தியிருந்த பத்மாவதி எரிச்சலுடன் அவனைப் பார்த்தாள்.

"என்ன... இந்த நேரத்தில்?"

"லைட் எரிஞ்சுக்கிட்டிருந்தது... அதான் வந்தேன்!"

"படிச்சுக்கிட்டிருக்கேன்... போ!"

"மணி என்னாகுதுத் தெரியுமா? இவ்வளவு நேரம் உறங்காமலிருந்தால் சுகரின் அளவு எகிறும்."

"தொந்தரவு செய்யாமல் போய்விடு. எனக்குப் படிக்கணும்."

"ப்ளீஸ்! உங்களை கவனிக்கும் பொறுப்பு எனக்கிருக்கிறது. பிடிவாதம் பிடித்தால் எந்நேரமாய் இருந்தாலும் எனக்கு போன் பண்ணு என்று டாக்டர் சலுகை கொடுத்திருக்கிறார். அவர் தூக்கத்தை கெடுக்க வேண்டுமா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும்."

"நீ என்றைக்கு இங்கு வந்தாயோ... அப்போதே என் தூக்கமெல்லாம் காணாமல் போய்விட்டது. உனக்கு இவ்வளவு இடம் கொடுத்த அவரை அல்லவா கேட்கணும்... சே!" புத்தகத்தை மடித்து டேபிள் மீது வைத்தவள் பட்டென்று விளக்கை அணைத்து இரவு விளக்கைப் போட்டுவிட்டு அவனைப் பார்த்தாள்.

"போதுமா... போகிறாயா?"

"மகிழ்ச்சி..." என்றவன் அறையிலிருந்து வெளியேற... முதுகுக்குப் பின்னால் கதவு படீரென்று சாத்தப்பட்டது.

கார்த்திகேயன் ஒரு கணம் நின்று பின் இறங்கிச் சென்றான்.

♥ ♥ ♥

**கா**ற்றில் பனிவாடை! புகை மூட்டத்தின் நடுவே வெள்ளை மாளிகையின் கம்பீரம்... அழகுப் பெண்ணாய் முகம் காட்டியது.

கவனமாய் பராமரிக்கப்பட்டு வரும் தோட்டத்தில் எல்லாமே பூ வகைகள் தான்! பத்மாவதி காலை சிற்றுண்டி உண்டபின் காலார தோட்டத்தில் நடப்பது வாடிக்கையான ஒன்று! பல வண்ணப் பூக்களின் அழகும், நறுமணமும் மனதை வருடி லேசாக்கும். பல நோய்களை சுமந்து வலம் வந்துக் கொண்டிருந்த பத்மாவதிக்கு இப்படிப்பட்ட சூழல் அவசியம் என்பதால் கார்த்திகேயன்தான்... மலர்க் கண்காட்சியே நடத்துமளவிற்கு இத்தோட்டத்தை அமைத்தான்.

சாம்பல் நிற முழுக்கை சட்டையை கறுப்பு நிற பேண்ட்டிற்குள் இணித்தவன் நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்தான்.

திருப்தி என மனசு உரைக்க... அடர்ந்த கேசத்தை சீப்பால் ஓரளவு வசப்படுத்தி விட்டு வெளியில் வந்தான்.

அவன் தங்கியிருந்தது அவுட் ஹவுஸில். கார்த்திகேயன் அந்த மாளிகைக்கு மூன்று வருடங்களுக்கு முன்புதான் ராஜதுரையால் வேலைக்கு அமர்த்தப்பட்டான். இரக்கமும், நல்ல குணங்களும் மேலோங்கிய பத்மாவதிக்கு ஏனோ, கார்த்திகேயனை கண்டால் மட்டும் பிடிக்காது. கணவனால் வேலைக்கு அமர்த்தப் பட்ட ஒரே காரணத்துக்காகவே பொறுத்துக் கொண்டாள்.

ராஜதுரை இப்போது இல்லை. இறந்து மூன்று வருடமாகிறது.

நீலகிரியைச் சுற்றி ஏகப்பட்ட சொத்துக்கள். குன்னூரில் ஊசி தொழிற்சாலை, யூகலிப்டஸ் எண்ணெய் மற்றும் புரோட்டீன் தயாரிப்பு தொழிற்சாலைகள் உள்ளன. தேயிலை, காபி, யூகலிப்டஸ், காய்கறிகள், ஆரஞ்சு, மிளகு, டர்னிப்ஸ் என்று தனித்தனியே ஏக்கர் ஏக்கராய் பயிரிடப்பட்டுள்ளன. அத்தனை நிர்வாகமும் பத்மாவதியிடம் தான் என்றாலும், சுற்றிச் சுற்றி வந்து தொழிலாளிகளை வேலை வாங்குவது கார்த்திகேயன் தான்.

தேயிலை, காபி பிரித்தெடுக்கும் தொழிற்சாலையை மட்டும் மேனேஜர் கதிர் பார்த்துக் கொள்கிறான். அவனும், இவன் வயதொத்த இவனைப் போன்றே நல்ல இளைஞன்தான். வசீகரித்தலிலும், அழகிலும் கூட குறைந்தவனல்ல.

குன்னூரில் வாழும் உயர் பணக்காரர்களின் வரிசையில் முதலிடம் ராஜதுரை குடும்பத்திற்கு தான். கிட்டத்தட்ட பத்மாவதி ஒரு மகாராணியாகவே பாவிக்கப்பட்டார்.

ஒரே மகள் நீலிமாராணி, கனடாவில் குடும்பத்தோடு வசிக்கிறாள். அவளுக்கும் ஒரே பெண்... அஸ்மிதா என்று பெயர். அஸ்மிதாவின் அப்பா... டாக்டர். பிளாஸ்டிக் சர்ஜரி நிபுணர். கனடாவில் நல்ல செல்வாக்கும், செல்வமும் கிட்ட, இந்தியா வர எண்ணமில்லை. ஆனால் பேத்தி அஸ்மிதாவுக்கு இந்தியாவில்தான் மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என்று கண்டிப்புடன் கூறியது மட்டுமல்லாது... அவளுக்காகவே சொத்துக்களை பெருக்கிக் கொண்டிருக்கிறார்... பத்மாவதி.

கார்த்திகேயன் பயன்பாட்டிற்கென சியரா கார் அனுமதிக்கப்பட்டிருந்தது.

எட்டு மணியாகியும் பனி அடர்ந்திருக்க.. விடியற்காலையின் தோற்றம்!

தோட்டக்காரன் மணிகண்டன் இலை தழைகளை கூட்டிக் கொண்டிருந்தார்.

"மணி... இலைகளை குப்பையிலேப் போட்டாதீங்க... பழத்தோட்டத்துக்கு கொண்டு போய் புதைச்சிடுங்க" போகிற போக்கில் உத்தரவிட்டான்.

"சரிங்கய்யா!"

விட்டினுள் சுறுசுறுப்பாக வேலைகள் ஆரம்பித்திருந்தன.

பத்மாவதி ஹால் சோபாவில் அமர்ந்து பானம் அருந்திக் கொண்டிருந்தார்.

"வணக்கம்மா!"

சொன்னவனை ஏறிட்டு முறைத்தார்.

"எத்தனை முறைச் சொல்வது? மேடம் என்று சொல்!"

"ஸ... ஸாரி மேடம்.. வணக்கம் மேடம்!"

"ம்!"

## 2

**கு**டித்து முடித்து வெள்ளி டம்ளரை பொன்னம்மா நீட்டிய தட்டில் வைத்து விட்டு எழுந்த பத்மாவதிக்கு வயது அறுபத்தைந்து. வெள்ளையும், கறுப்பும் கலந்த கொண்டை. மெல்லிய தங்க பிரேமிட்ட கண்ணாடியில் எதிராளிகளை துளைக்கும் ஆழ்ந்த கண்கள். நெற்றியில் திருநீறு. காதுகளில் வைரத்தோடு. கழுத்தில் இருபது பவுனில் கெட்டியாய் செய்யப்பட்ட சங்கிலி. கைகளில் வைரம் பதிக்கப்பட்ட இரண்டு ஜோடி வளையல்கள். மெல்லிய பார்டர் பின்னப்பட்ட பட்டுச் சேலை. இவ்வளவுதான். ஆனால், அதுவே எதிராளியை முதுகு வளைத்து வணங்கச் சொல்லும். அத்தனை கம்பீரம்.

சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு நகர்ந்தவளை தடுத்தான்.

"மேடம்!"

"என்ன?"

"தோட்டத்துக்கு வாக்கிங் போகப் போறீங்களா?"

"ஆமாம்!"

"இப்போது வேண்டாம். இன்றைக்கு முழுக்கவே வேண்டாம்..."

'ஏன்' என்பதுப் போல் ஏறிட்டாள்.

"பனிப் பொழிவு அதிகமாயிருக்கிறது. காலையில் தோட்டக்காரர் கூட்டி அள்ளுமளவிற்கு உறைந்திருந்தது. உடம்பிற்கு ஆகாது. ப்ளீஸ்..." கனிவாகவும், அதே சமயம் கண்டிப்புடனும் சொல்ல... கடுகடுப்புடன் பார்த்தாள்.

"நான் பிறந்து, வளர்ந்து, வாழ்க்கைப் பட்டதெல்லாம் இந்த நீலகிரி மலையில் தான். பனி மழையில் நனைந்து பழக்கப்பட்டவள் தான். இந்தப் பனியெல்லாம் என்னை ஒன்றும் செய்யாது. என் விஷயத்தில் அதிகமாய் தலையிட வேண்டாம்."

"மேடம்... அது அப்போது! இப்போது உங்கள் உடம்பு எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலையில் இல்லை!"

'உன்னையே ஏற்று சகித்துக் கொண்டிருப்பதை விடவா?' என்பதுப் போன்ற ஏளனமான பார்வையை வீசிவிட்டு... நடந்தாள்.

தடுக்க இயலாமல் அமைதி காத்தான்.

பொன்னம்மாவைப் பார்த்து, 'கூடவே போ' என்றான் தலையசைப்பில்.

சமையல்காரர் நடராஜன் இவனருகே வந்தான்.

"ஐயா... டிபன் ரெடியாயிருக்கு... சாப்பிட வாங்க" என்றழைத்தான்.

"பசிக்கலே... பிறகு பார்க்கலாம்!" என்றவன் ஹாலை ஒட்டியிருந்த அலுவலக அறைக்குள் நுழைந்தான்.

குறிப்பறிந்து இஞ்சி மணத்த தேநீருடன் நுழைந்து "ஐயா டீ" என்றான் நடராஜன்.

"தாங்க்ஸ்"

"ஐயா... மளிகை சாமான் தேவைப்படுது!"

"வாங்கிக்க... பில்லை அனுப்பிடு... இந்தா... ரெண்டாயிரம்... போதுமா?"

"போதுமுங்க"

"சரி... போ!"

தொழிற்சாலைகள், எஸ்டேட்கள் மட்டு மல்ல... வீட்டு நிர்வாகமும் அவன் கையில் தான்!

வேலை வாங்கும் போது மட்டும் தான் அவனிடம் கண்டிப்பை பார்க்க முடியும். மற்றபடி அசாத்தியப் பொறுமையும், கம்பீரமும், கனிவும் கொண்டவன். எப்போதும் புன்னகையுடன் வலம் வருவதுதான் அவனின் தனிச்சிறப்பு.

அறைக்கண்ணாடி வழியே விஸ்தாரமான தோட்டம் கண்களை நிறைத்தது.

பத்மாவதி மெல்ல நடந்துக் கொண்டிருந் தாள். அடர்வான பனிப்புகை அவளைத் தழுவி நகர்ந்தது.

அதைப் பார்த்த கார்த்திகேயனுக்கு அலுவல்களில் கவனம் சிதறியது.

கவலையுடன் அவளையே நோக்கினான்.

பத்மாவதிக்கு பனி ஆகாது. ஆஸ்துமா தொந்தரவு இருந்தது. போதாதற்கு வால்வுகளில் அடைப்பும், ரத்தத்தில் சர்க்கரையும் இருக் கிறது. மனதில் ஏகப்பட்ட வேதனைகள் இருப்பதால்... பலவீனமாகி நெஞ்சு வலியில் துடிப்பாள். 'உடலில் தெம்பும், சக்தியும் கூடினால் இருதய ஆபரேஷன் பண்ணி விட லாம்' என்று டாக்டர் சொல்லி இருந்ததால்... சத்து மாத்திரைகளும், சத்தான ஆகாரமும் கார்த்திகேயனின் நேரடி கண்காணிப்பில் தரப்பட்டன.

நடந்ததில் லேசாய் மூச்சு வாங்க... "பொன்னம்மா அந்த சேரை எடுத்து வா!" என்றாள் பத்மாவதி.

போடப்பட்ட சேரில் அமர்ந்து ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்.

அழகாய் வரிசையாய் சிரித்தன ரோஜாக்கள். அதில் பச்சை நிற ரோஜாவும், வெளிநாட்டி லிருந்து வரவழைக்கப்பட்ட நீலநிற ரோஜாச் செடிகளும் அடக்கம். கார்த்தியின் முயற்சியால் வந்தவைதான் அவைகளும்.

டேலியாப் பூக்கள், குரங்கு வால், இட்லிப் பூக்கள் என வகை வகையான மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கி பரவசப்படுத்தின. அவைகளை ரசித்தாலே... உள்ளமெல்லாம் பஞ்சுபோல் லேசாவதை உணர்வாள் பத்மாவதி.

கார்த்திகேயன் வருவதற்கு முன் தோட்டம் இப்படி இருந்ததில்லை. அழகிற்காக குரோட் டன்ஸ் வகைகளும் சில பூக்கள் வகைகள் மட்டுமே இருந்தன. அவளின் அறையின் சுவர் வண்ணம், திரைச்சீலை முதற்கொண்டு தோட்டம் வரை சீர்படுத்தியவன் அவன் தான்!

கார்த்திகேயன் வேகமாக தோட்டத்துக்கு வந்தான். "மேடம்... அதோப் பாருங்கள் பனிமேகங்களை? ரொம்ப களைப்பாக வேறு இருக்கிறீர்கள். இந்தப் பனி சளித் தொந்தரவை தரும். நாளை டாக்டர் வருவார். வீசிலி செக்கப் இருக்கிறது. வீஸிங் ப்ராப்ளம் இருந்தால் ஹாஸ்பிடலில் கண்டிப்பாய் அட்மிட் பண்ணச் சொல்லுவார்... ப்ளீஸ்... உள்ளே வாருங்கள்!"

வீம்புக்காக மறுக்கத் தோன்றினாலும், கூட்டமாய் வந்துக் கொண்டிருந்த பனிப் புகைக்கு பயந்து எழ வேண்டியதாயிற்று.

"புரோட்டீன் கம்பெனியில் மெஷின் ரிப்பேர் என்று சூபர்வைஸர் போன் பண்ணியிருந்தார். போய்ட்டு வந்திடறேன் மேடம்!"

"ம்!"

"டிபனுக்கு பிறகு எடுத்துக்க வேண்டிய மாத்திரைகளை இதோ... இந்த கவரில் போட்டு வைத்திருக்கிறேன். இன்னும் பத்து நிமிடம் கழித்துப் போட்டுக் கொள்ளுங்கள். பொன் னம்மா... கவனமாய் மேடத்திற்கு நினைவுப் படுத்து!"

"சரிங்கய்யா!"

"வர்றேன் மேடம்!"

## பப்பாளியை வெட்டாதீர்!

**சி**லர் வீடுகளில் நிறைய பப்பாளி மரங்களை வளர்ப்பார்கள். அதில் ஆண் பப்பாளி இருந்தால் வெட்டி விடுவார்கள். அது காய்க்காது என்பதுதான் காரணம் ஆகும்.

ஆனால் ஆண் பப்பாளி மரங்களை வெட்டக்கூடாது. பெண் மரங்களின் பூக்கள் சூல் கொள்ள ஆண்மரங்களின் மகரந்தம் தேவை. அப்போதுதான் பெண் மரங்கள் நிறைய காய்க்கும் என்பதை மறந்து விட வேண்டாம்.

*- ராஜிராதா, திருச்சி.*





"ம்!"

அவன் போனப் பிறகு நடராஜனிடம் கேட்டாள்.

"மேனேஜர் டிபன் சாப்பிட்டாரா?"

"வேண்டாம்னு சொல்லிட்டாருங்கம்மா!"

"......?!"

ஒரு கணம்... ஒரே கணம் தான்! உள்ளம் நொந்தாள். அடுத்த கணமே சுதாரித்துக் கொண்டாள்.

'அவன் சாப்பிட்டால் என்ன, சாப்பிடாமல் போனால் எனக்கென்ன வந்தது?'

அங்கு வேலை செய்யும் தொழிலாளிகளில் மாளிகையில் சாப்பிடும் ஒரே ஆள் கார்த்திகேயன் மட்டும் தான்!

♥ ♥ ♥

**வ**ளைவு நெளிவுகளில் லாவகமாய் காரைச் செலுத்தினான் கார்த்திகேயன்.

குளிர்ந்த காற்று தைலவாசனையை சுமந்து வந்து மேலே கொட்டியது.

முதுகில் கூடை சுமந்தப் பெண்கள் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்துக் கொண்டிருந்தனர். இவன் வண்டியை கவனித்த சிலர் வணக்கம் செலுத்தினர்.

ஏகப்பட்ட பணிகள்... அடுத்தடுத்து காத்திருந்தன. என்றாலும் அலுக்காத, ரம்மியமான சூழ்நிலையை காதல் மாறாமல் இன்னும் ரசித்தான்.

எழில்களை உள்ளடக்கிய மகாராணியாய் குன்னூரின் மங்காத அழகு அவனுக்கு ரொம்பவேப் பிடித்திருந்தது.

அவனுக்கு ரொம்பவேப் பிடித்த, அடிக்கடி பாடக் கூடிய "செந்தாழம் பூவில் வந்தாடும் தென்றல் என் மீது மோதுதம்மா" என்ற பழைய பாடலை ஹம் செய்தான்.

தூரத்திலிருந்தே இவனின் காரைப் பார்த்து விட்ட கதிர் நடுரோட்டில் நின்று கையாட் டினான்.

கார்த்தியும் பார்த்து விட புன்னகையுடன் காரை நிறுத்தி இறங்கினான்.

"ஹலோ கார்த்தி குட்மார் னிங்!"

"குட்மார்னிங் கதிர்!"

"நானே உன்னைப் பார்க்கணும்னு இருந் தேன். பார்த்து ஒரு வாரமாயிருச்சே?"

"வேலை அதிகம் கதிர். இப்பக்கூட புரோட்டீன் கம்பெனிக்குதான் போய்க்கிட்டி ருக்கேன். மெஷின் ரிப்பேராய்டுச்சாம்!"

"நீயும் மிஷின்தனமா பேசிட்டிருக்காதே... போரடிக்குது. நாளைக்கு வீட்டுக்கு வா!"

"என்ன விஷயம்?"

"அனு உன்னை வரச் சொன்னா!"

"ஏன்?"

"அவளோட அண்ணனுக்கு பர்த்டேயாம். அதை சாக்கா வச்சு சமையல் பண்ணி அசத்தப் போறாளாம். அவங்கண்ணனுக்கு பிடிக்குதோ இல்லையோ, உனக்கு பிடிச்ச மாதிரி சமைக்கப் போறா... வந்து சாப்பிடுவியாம்."

"இப்பதான் பர்த்டே வந்தா மாதிரி இருக்கு. அந்த படவா ராஸ்கலுக்கு மறுபடி பர்த்டேவா? கண்டிப்பா வர்றேன்னு சொல்லிடு!"

"மரியாதை... மரியாதை!" என்றான் வடிவேலுவைப் போல.

"அட... அவனுக்கென்ன மரியாதை!" சொல்லி விட்டு காரில் அமர்ந்து டாட்டா காட்டியபடி கிளப்பினான்.

கதிர் வாய்விட்டு சிரித்தான்.

# 3

ஒரு வழியாய் புரோட்டீன் கம்பெனிக்குச் சென்று பழுதுபட்ட மிஷினுக்கு மாற்று ஏற்பாடு செய்து ரிப்பேர் செய்ய ஆளையும் வரவைத்து விட்டு. ஆரஞ்சு தோட்டத்திற்கு சென்றான்.

பிற்பகல் மணி மூன்று!

பசி வயிற்றை கபகபவென கிச்சு கிச்சு மூட்டியது. காலையிலிருந்து எதையுமே சாப்பிடாதது நினைவிற்கு வந்தது. ஹோட்டலுக்கோ, வீட்டிற்கோ சென்று சாப்பிட நேரமில்லை. பறித்து வைத்திருக்கிற யூகலிப்டஸ் இலைகளை கணக்குப் பார்த்து தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சட்டென அந்த யோசனை உதித்தது!

தொழிற்சாலைக்கு போகிற வழியில் தான் கதிரின் வீடு! அவன் தங்கை அனு வீட்டில் தானே இருப்பாள். சாப்பிட்ட மிச்சம் மீதி வைத்திருப்பாள். கேட்டு வயிற்றுக்குள் தள்ளிக் கொண்டு போக வேண்டியது தான்!

காரை நோக்கி நகர்ந்தவனை கட்டிப் போட்டது அந்தக் காட்சி!

ஒரே அமுக்காய் அமுக்கி சூரியனை சிறை வைத்திருந்தன அமுக்கு மேகங்கள். நைலக்ஸ் துணியில் மறைத்து வைத்த அப்பளமாய் ஒளியின்றி சோகையாய் தெரிந்தது சூரியன். கும்பலாய் வட்டமிட்ட பறவைகள்... சுற்றிச் சுற்றி ஒரே இடத்திற்கு வந்தன.

காரிலிருந்த கேமராவை எடுத்தவன் பல கோணங்களில் அக்காட்சியை கிளிக்கினான்.

கார்த்திகேயனின் ஒரே பொழுதுபோக்கு, மனதை கவரும் காட்சிகளை கேமராவில் பதிவு செய்துக் கொள்வது தான்!

♥ ♥ ♥

**கா**ரின் சப்தம் கேட்டு வாசலுக்கு வந்தாள் அனு. அங்கு கார்த்திகேயனைப் பார்த்ததும் மகிழ்ச்சியில் உள்ளம் பொங்கியது.

"வாங்க... வாங்க மேனேஜர் சார்!" அவசர அவசரமாய் கலைந்திருந்த கேசத்தை கையால் சீர்படுத்திக் கொண்டாள்.

"நல்லாருக்கியா அனு?"

"நல்லாருக்கேன் சார்! அண்ணாவைப் பார்க்க வந்தீங்களா? அவர் எஸ்டேட்ல தான் இருக்கார்."

"தெரியும். நான் உன்னைப் பார்க்கதான் வந்தேன். ஒரு முக்கியமான விஷயத்துக்காக!"

மனசு புறாச்சிறகாய் அடித்துக் கொண்டன. அந்த வார்த்தைகள் உடனடியாக அவளின் இரு பக்கமும் இறக்கையை முளைக்க வைத்தன.

"உள்ளே வாங்க சார்! உட்காருங்க! இதோ வந்துட்டேன்" என்று உள்ளறைக்கு ஓடியவள் தன்னை நிலைக்கண்ணாடியின் முன் இருத்தி அவசரகதியில் ஆராய்ந்தாள்.

நீட்சண்யமான முகம்! இளம் மஞ்சள் நிறம். நெற்றியின் இருபக்கமும் வளைந்து மேலேறிய அடர்வான கேசம். சல்வாரின் மேல் குளிருக்காக அணிந்திருந்த ஸ்வெட்டர். ஈரம் காய விரித்துப் போட்டிருந்த கேசம் மயில்தோகையாய் விரிந்து... அவள் முகத்தை பளிச்சென காட்டியது. அழகி என்பதற்கான அத்தனை தகுதியும் அவளிடம் அடக்கம்!

திருப்தியுடன் அகன்று... கிச்சனிலிருந்து வெதுவெதுப்பான குடிநீரை ஒரு டம்ளரில் எடுத்துக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள்.

'என்ன விஷயமாக இருக்கும்?'

"இந்தாங்க!"

"தாங்க்ஸ் அனு! ஆனா வெறும் தண்ணி மட்டும் கொடுத்து அனுப்பிடாதே! பயங்கர பசியில் வந்திருக்கேன். சாப்பிட என்னயிருக்கு?"

'இதற்காகத்தானா?' கொதித்த பாலை இறக்கி வைத்த உணர்வு.

ஆனாலும், அவன் உரிமையோடு உணவு கேட்ட விதம்... எதையோ உறுதிப்படுத்தியது.

"மாவு இருக்கு... தோசைப் போட்டுத் தரவா?"

"அதுவே அமிர்தம். சீக்கிரம் அனு... வேறொரு வேலையிருக்கு... போகணும்."

"அஞ்சே நிமிஷம்!" என்று உள்ளே ஓடினாள்.

கார்த்தி... ஓடிக் கொண்டிருந்த டி.வி.யின் சேனலை மாற்றி... மாற்றிப் பார்த்தான்.

'உன்னிடம் மயங்குகிறேன்...
உள்ளத்தால் நெருங்குகிறேன்...
எந்தனுயிர் காதலியே...
இன்னிசை தேவதையே....'

சன் மியூஸிக்கில் பழைய பாடலொன்று இசைக்க... அவனுக்கு மிகவும் பிடித்த பாடல் என்பதால்... கூடவே பாடினான்.

சுடச்சுட நெய் மணக்க வெங்காய தோசையும் வத்தல் குழம்புமாக அவன் எதிரே டீப்பாய் மீது வைத்தாள்.

"சட்னி அரைக்க லேட்டாகும்னு வத்தல்



குழம்பு வெச்சிருந்தேன்... அதையே..."

"என்ன அனு இப்படிச் சொல்லிட்டே... நீ வைக்கிற வத்தல் குழம்புக்கு நான் அடிமைன்னுத் தெரியாதா? அட.... வெங்காய தோசையேப் போட்டுட்டியா? தாங்க்ஸ்... ரொம்ப தாங்க்ஸ் அனு... இது எனக்கு பிடிக்கும்னு எப்படித் தெரியும்?"

"அண்ணா சொன்னார்!" என்று வெட்கப்பட்டவள், "இந்தப் பாட்டெல்லாம் ரொம்பப் பிடிக்குமா?" என்றாள்.

"ஆமாம்னு சொல்றதை விட... உயிர்னு சொல்றதுதான் பொருத்தமாயிருக்கும். பழைய பாடல்கள்னா சாப்பாடே வேண்டாம். அதுவும் ஜேசுதாஸ், டி.எம்.எஸ். சாங்ஸ்னா... பைத்தியம்! சூப்பராயிருக்கு அனு... ரொம்ப நல்லா சமைக்கிறே!"

"நாளைக்கு கண்டிப்பா வந்திடணும்!"

"மிஸ் பண்ணுவேனா? கதிர் பர்த்டே பார்ட்டின்னு ஒரு ஹோட்டலுக்கு இன்வைட் பண்ணியிருந்தான்னா இருக்கிற பிஸி ஷெட்யூல்ல நிச்சயம் அவாய்ட் பண்ணியிருப்பேன். உன் சமையல்னதும் தான் ஒத்துக்கிட்டேன். டைமாச்சு கிளம்பறேன் அனு!"

"வாங்க!"

அவன் வாசலுக்கு போகவும்... உள்ளே வந்துக் கொண்டிருந்தான் கதிர்.

"ஹேய்... கார்த்தி... நீயா எப்ப வந்தே?" ஆச்சர்யமும், பரவசமுமாய் கேட்டான்.

"பேச நேரமில்லே... அனுக்கிட்டயே கேட்டுக்க... நாளைக்கு பார்க்கலாம்... ஈவ்னிங் போன் பண்றேன். பை கதிர்... அனு வர்றேன்!"

அவன் கிளம்பிய பின்பும், வளைவில் திரும்பிய காரையே பார்த்துக் கொண்டிருந்த அனுவின் கண்களை காணத் தவறவில்லை கதிர்.

ஆசையையும், ஏக்கத்தையும் ஏந்திக் கொண்டிருந்தன விழிகள்.

"அனு...!"

"அவர் பசிக்குதுன்னு வந்தார்ண்ணா... தோசை சுட்டுக் கொடுத்தேன்!" கேட்காமலேயே, ஆனால் அவசரமாய் சொன்னாள். "நீ என்னண்ணா திடீர்னு?"

"செல்போனை வச்சிட்டுப் போய்ட்டேன். சார்ஜர் போட்டு வச்சிருக்கேன்... எடுத்துட்டு வாயேன்!"

நிமிடத்தில் கொண்டு வந்து தந்தாள்.

"வர்றேன் அனு!"

"சரிண்ணா!"

கைகள் ஜீப்பின் ஸ்டீரியங்கை லாவகமாக ஒடித்து. வளைத்து திருப்பினாலும் மனசெல்லாம் அவர்கள் மீதே இருந்தது.

அனுவும் கார்த்திகேயனும் காதலிக்கிறார்களோ, என்ற சந்தோஷமான சந்தேகம் கதிருக்கு உண்டு. அவனுக்கு கார்த்திகேயனை ரொம்பவே பிடிக்கும்.

அவனும் தங்களைப் போலவே தோடர் இனத்தை சார்ந்தவன் என்பதால் அல்ல. அவனை மாதிரி ஒரு நல்ல ஆண்பிள்ளையை சல்லடைப் போட்டுத் தேடினாலும் அனுவுக்கு கிடைக்க மாட்டான். பேச்சில் நிதானம், அமைதியுடன் கூடிய புத்திசாலித்தனம், எந்தப் பெண்ணையும் சிறு சலனமுமின்றி பார்க்கும் பார்வை... மது. சிகரெட் என்று ஒரு கெட்டப் பழக்கத்தையும் அண்ட விடாத மன உறுதி! அவன் பழகுவதே கதிரிடம் மட்டும் தான். அவன் தங்கை என்பதால் அனுவிடம் பேசுவான். அவள் சமையலுக்கு அடிமை என்பான் அடிக்கடி!

'என்னிடம் கூட சொல்லாமல் திடீரென்று வீட்டிற்கு வந்து சாப்பிடுகிறான் என்றால்... சாப்பிட மட்டுமா? அனுவையும் பார்க்கத் தானே?' அனுவைப் பற்றி அவன் ஆரம்பத்திலேயே புரிந்துக் கொண்டான். கார்த்தி மீது அலாதி பிரியம். ஸ்பெஷலாய் எதை சமைத்தாலும் அவனிடமே கொடுத்தனுப்பி, 'உங்க ஃப்ரண்ட் கிட்ட குடுத்துடுண்ணா... வெண்டைக்காய் போட்ட வத்தக்குழம்புன்னா... ரொம்ப பிடிக்குமாம்...!'

என்று.

'நடக்கட்டும், நடக்கட்டும்... எத்தனை நாள்தான் என்னிடம் மூடி மறைப்பார்கள் இருவரும்? பார்த்துக் கொள்கிறேன்!' சந்தோஷத் திணறலோடு பெருமூச்சு விட்டான்.

♥ ♥ ♥

**டா**க்டர் நாராயணன், பத்மாவதியை முழுவதுமாக பரிசோதித்து விட்டு கவலையாய் பார்த்தார்.

"என்னம்மா... ரொம்ப ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கறீங்களா?"

"என்னாச்சு டாக்டர்?" என்றான் அருகில் நின்றிருந்த கார்த்தி.

"வீஸிங் கொஞ்சம் அதிகமாயிருக்கு கார்த்தி. தவிர வால்வு கொஞ்சம் வீங்கியிருக்கு. கண்டிப்பா பெய்ன் வந்திருக்கணும்... ஏம்மா வந்துதா?"

"அ... அதெல்லாம் இ... இல்லை டாக்டர்!"

"ட்ரீட்மெண்ட்டுக்கு பயந்து பொய் சொல்லாதீங்க."

"ஆமா... ஆனா அதிகமாயில்லே..." என்றான் தயங்கி.

"பார்த்தியா கார்த்தி... இப்படி மூடி மறைச்சா என்னாகறது? ஒண்ணுப் பண்ணு கார்த்தி... மாடியில இருக்கிற இவங்க ரூமை கீழே ஷிப்ட் பண்ணிடு. மாடிப்படி ஏறுறதை கண்டிப்பா அவாய்ட் பண்ணிடணும்!" என்றார் மூக்கில் சரிந்த கண்ணாடியை சரிசெய்தபடி.

எழுபதை நெருங்கிக் கொண்டிருந்த டாக்டர் நகரில் பிரசித்திப் பெற்றவர். பணத்துக்கு ஆசைப்படாத கைராசிக்காரர்.

"வேணாம்... வேணாம் டாக்டர்.. நான் மேலயே..."

"பேத்திக்கு கல்யாணம் பண்ணி கொள்ளுப் பேரனை பார்க்கிற ஆசையில்லையாம்மா உங்களுக்கு?"

"டாக்டர் நான் இன்னைக்கே ஷிப்ட் பண்ணிடறேன். அந்த பிரிஸ்கிருப்ஷனைக் கொடுங்க" என்று வாங்கிக் கொண்ட கார்த்திகேயன் பத்மாவதியை கவலையுடன் பார்த்தான்.

## 4

**ப**த்மாவதி ரொம்பவே வருத்தப்பட்டாள். கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடமாகவே அந்த மாளிகையின் கார் டிரைவராக பணியாற்றி வந்த வேலாயுதம் நேற்றிரவு மாரடைப்பால் இறந்து விட்டார். அறுபதைத் தாண்டிய வேலாயுதத்திற்கு மனைவியும், திருமணவயதில் ஒரு பெண்ணும் உண்டு. அவரை நம்பி தைரியமாய் எங்கும் காரில் செல்லலாம். அத்தனை கவனத்துடனும், விழிப்புணர்வுடனும் காரை ஓட்டுவார். குன்னூர் போன்ற மலைப்பிரதேசத்தில் சிறு விபத்துக் கூட இல்லாமல் இருபத்தைந்து வருடம் கார் ஓட்டுவதென்பது எளிதான காரியமல்லவே!

கார்த்திகேயன் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு விட்டு பத்மாவதியிடம் கூறினான்.

"வழக்கமா எஸ்டேட்ல பணிபுரியறவங்க இறந்துப் போய்ட்டா எவ்வளவு பணம் செட்டில்மெண்ட் பண்ணுவோம்?" அவன் முகத்தைப் பார்க்காமலேயே கேட்டாள்.

"இரண்டு லட்சம் மேடம்!"

"அந்த குடும்பத்தில ஆண் வாரிசுகள் யாரேனும்...?"

"இல்லை மேடம்! இருபத்தி மூன்று வயதில் திருமணமாகாத ஒரு பெண் மட்டுமே உண்டு!"

"ஓ! நாம் பென்ஷன் என்று எதுவுமே தருவதில்லை. இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு சாப்பிடுவதற்கும், அந்தப் பெண்ணுக்கு திருமணம் செய்வதற்கும் எப்படிப் போதும்?"

".......?!"

சற்று நேரம் யோசித்த பத்மாவதி, "அந்தப் பெண் வேலைக்குச் செல்ல விருப்பப்பட்டால் தொழிற்சாலையில் ஏதாவது நல்ல வேலை போட்டுத் தா!"

"நல்லது மேடம்!"

"அப்படியே அந்தப் பெண்ணின் திருமண செலவிற்காக அவள் பெயரில் பேங்கில் இரண்டு லட்சம் போட்டு விடு. இது என் சொந்த செலவில் சேர்த்து விடு!"

"நல்ல யோசனை... அவசியமான உதவி மேடம்!"

"உன் பாராட்டு எனக்குத் தேவையில்லை. வேறு நல்ல டிரைவருக்கு ஏற்பாடு செய்!"

"சரிங்க மேடம்!" என்றவன் அவள் வார்த்தை தந்த வலியின் வீரியத்தை முகத்தில் காட்டாமல் புன்னகையை படர விட்டான்.

♥ ♥ ♥

சில ஃபைல்களில் பத்மாவதியின் கையெழுத்து வாங்க வேண்டி... அவள் வருகைக்காக காத்திருந்தான்.

அறையிலிருந்து வெளிப்பட்ட பத்மாவதியைப் பார்த்து வியந்தான்.

கையில் அர்ச்சனைக் கூடையுடன் அவள் பின்னே பொன்னம்மா!

கோவிலுக்குப் புறப்பட்டு விட்டாள் என்பது பார்த்தாலே புரிந்தது. ஆனால், மழைப் பொழிந்துக் கொண்டிருக்கிறதே! சாதாரணமாகவே குன்னூர் குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறது. மழையும் பெய்கிறது என்றால் கேட்கவே வேண்டாம்.

"வந்துட்டியா... உனக்காகதான் காத்திருந்தேன்."

"சொல்லுங்கள் மேடம்!"

"கோவிலுக்குச் செல்ல வேண்டும். உன் அளவுக்கு வேறு யாரும் கவனமாக கார் ஓட்ட முடியாது. டிரைவரை வேலைக்கு அமர்த்தும் வரை நீயே காரை ஓட்டு!" வார்த்தையில் சிறு ஏளனமும், முகத்தில் அவமானப்படுத்தி விட்டேன் பார் என்கிற மமதையும் வெளிப்பட்டது.



கார்த்திகேயன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

"மேடம்... காரை நானே ஓட்டுகிறேன். ஆனால்..."

'போதும் நிறுத்து!' என்பதுப் போல் கையை உயர்த்தியவள், "நீ என்ன சொல்லப் போறேன்னு தெரியும். மழை வருது... போக வேண்டாம்னு தானே? அது எனக்கும் தெரியும். நான் கோவிலுக்குப் போயே ஆகணும். வண்டிய எடு!"

".......?!"

"என்னப் பார்க்கிறே? டாக்டர்கிட்டேயும் பர்மிஷன் வாங்கியாச்சு! என் பொண்ணு நீலிமாவுக்கு இன்னைக்கு பிறந்த நாள். சௌடேஸ்வரிக்கு பாலாபிஷேகம் பண்ண ஏற்பாடு பண்ணிட்டேன். கிளம்பலாமா?"

"சரிங்க மேடம்!" அமைதியாய் முன்னே நடந்தான்.

மழையில் சாலைகள் சேறாகி சறுக்கின. சின்னச் சின்ன கற்கள் பள்ளம் நோக்கிப் பாய்ந்தன. வேகம் குறைத்து கவனமாய் ஓட்டியவன்... இருபது நிமிடங்கள் கழித்து கோவிலின் வாசலில் நிறுத்தினான்.

முதலில் இறங்கி குடையை விரித்தவன், பின் கதவை திறந்தான்.

பத்மாவதியைத் தொடர்ந்து பொன்னம்மா இறங்கினாள். குடையை உயர்த்திப் பிடித்தான்.

நடந்தவள்... திடீரென கல் தடுக்கி விழப்போக... "அம்மா" என்று தாங்கிப் பிடித்தான்.

சுதாரித்துக் கொண்டவள் கையை உதறி கோபமாய் பார்த்தாள்.

"ஏய்... உனக்கு எத்தனை முறை சொல்வது? அம்மான்னு கூப்பிடாதேன்னு! நீ ஒரு வேலைக்காரன்... அதை அடிக்கடி மறந்திடறே?"

"ஸாரிங்க மேடம்!"

பொன்னம்மாவிற்கு அவள் பேச்சு சங்கடத்தைத் தர... தலைகவிழ்ந்துக் கொண்டாள். ஆனால், கார்த்திகேயன் முகத்தில் எந்த சலனமுமில்லை. அவனின்

## விதை இல்லா மாதுளம் பழம்

**மா**துளம்பழம் சத்துக்கள் நிறைந்தது என்பது அனைவரும் அறிந்ததுதான். ஆனால் இப்போது விதை இல்லா மாதுளம் பழம் வருகிறது. இதை பலர் விரும்பி வாங்கி சாப்பிடுகிறார்கள். விதையுடன் உள்ள மாதுளையில்தான் வைட்டமின் 'ஈ' சத்து நிறைந்து உள்ளது. எனவே விதையை கழித்து துப்பாமல் சாப்பிட வேண்டும்.

குடற்புண் உள்ளவர்கள் மாதுளை சாறுடன் இளநீர் கலந்து தினசரி இருவேளையும், ஒரு பெரிய டம்ளர் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் நல்ல குணம் தெரியும்.

- ராஜிராதா, திருச்சி.

வெறுப்பை நன்கு அறிந்தவன் அல்லவா?

“பொன்னம்மா... குடையை நீ வாங்கிக்க... நீ இங்கேயே இரு!” பத்மாவதி அவனுக்கு உத்தரவிட்டு நடந்தாள்.

நேர்க்கோடாய் பூமியை துளைத்த மழை கண நேரத்தில் அவனை முழுக்கவே நனைத்து விட்டது.

‘மற்ற பணியாளர்கள் அனைவருமே அவளை அம்மா என்றுதான் அழைக்கிறார்கள். ஆனால் அவர்களை எதுவும் திட்டுவதில்லை. என்னை மட்டும் ஏன் இப்படி வெறுக்கிறார்கள்?’

யோசித்தாலே வருத்தம்தான் மேலோங்கியது. காலையிலிருந்து வயிற்றுக்கு எதுவும் தராததில் பசியில் எரிந்தது.

கோவிலுக்கு இருபதடி தூரத்தில் ஒரு சின்ன டீக்கடை இருந்தது.

நேரே அங்கு சென்றவன்... தேநீருக்கு சொல்லி விட்டு காத்திருந்தான்.

ஸ்வெட்டரும் மப்ளரும் அணிந்த மக்கள் மழைக்காக.. கிடைத்த இடங்களில் ஒதுங்கியிருந்தனர்.

‘நாளை ஞாயிற்றுக்கிழமை! ஊருக்குப் போய் வரவேண்டும். மழை இப்படியே நீடித்தால் நிலச்சரிவு ஏற்பட்டு போகமுடியாமல் போய் விடுமே!’ தேநீரை சுவைத்துக் கொண்டிருந்தவன்... பத்மாவதி கோவிலை விட்டு வெளியே வருவதைப் பார்த்துவிட்டு. பாதி டம்ளரோடு தேநீரையும் காசையும் வைத்துவிட்டு ஓடினான்.

அப்போது கோவில் வாசலருகே ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்டரை பார்த்தவன் திடுக்கிட்டான். மழைக்காக கைகளை வைத்து மறைப்பதுப் போல் முகத்தை மறைத்து காரின் அருகே வந்தான்.

எங்கே அவர் தன்னை பார்த்து விடுவாரோ என்ற பதைப்புடன் காரைத் திறந்து அமர...

“அப்படியென்ன அவசரம்... எனக்கு கதவைத் திறந்து விடாமல்?” எரிந்து விழுந்தாள் பத்மாவதி.

“ஸாரி மேடம்!” பதற்றத்துடன் உட்கார்ந்தவாறே பின்புறமாய் எட்டி கதவைத் திறந்தான்.

அமர்ந்தனர்.

கிளப்பும் போது... எதேச்சையாக அவனைப் பார்த்து விட்ட இன்ஸ்பெக்டர் யோசனையாய் நெற்றியை சுருக்க... காரை வட்டமடித்து வேகமெடுத்தான்.

♥ ♥ ♥

தைல வாசனை கும்மென்று காது வரைப் பரவியது. பாட்டில்களில் அடைக்கப்பட்ட தைலங்களை பெட்டிகளில் அடுக்கி பேக் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததை கவனமாய் பார்த்துக் கொண்டிருந்தான் கார்த்திகேயன்.

“முத்து... எல்லா பாட்டில்லேயும் லேபிள் ஒட்டியிருக்கான்னு சரியா செக் பண்ணு!” சொல்லிக் கொண்டிருக்கும் போதே... செல்போன் ரீங்கரித்தது.

பத்மாவதி பவனத்திலிருந்து...

“ஹலோ” என்றான்.

“நீ உடனே இங்கே வா!” என்றாள் பத்மாவதி. அதிகமாய் அவனிடம் போனில் பேசியதில்லை... அவசியம் ஏற்பட்டால் ஒழிய! அதுவும் இந்த மூன்று வருடங்களில் இது மூன்றாவது முறையோ, நான்காவது முறையோ!

கார்த்திகேயனுக்கு சிறு சந்தேகம்.

“மேடம்... உங்க உடம்புக்கு ஒன்றும் இல்லையே?”

“ரொம்ப புத்திசாலின்னு எல்லோரும் தூக்கி வச்சு ஆடறாங்க. ஆனா, அப்படியொன்னு இருக்கறதாவே எனக்குத் தோணலே. உடம்பு சரியில்லேன்னா... வீட்ல இருக்கிற வேலைக்காரங்கயில்லே போன் பண்ணுவாங்க? சீக்கிரம் கிளம்பி வா! ஏகப்பட்ட வேலையிருக்கு!”

“வந்துடறேன் மேடம்!”

சில இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து விட்டு அங்கிருந்து கிளம்பியவன் அடுத்த அரைமணி நேரத்தில் பத்மாவதி பவனத்தில் இருந்தான்.

“சொல்லுங்க மேடம்!”

என்றுமில்லாத பரவசத்துடன் அமர்ந்திருந்தாள் பத்மாவதி.

“வர்ற வியாழக்கிழமை என் பேத்தி கனடாலேர்ந்து வர்றா! அதனால... மாடியிலே நான் ஏற்கனவே தங்கியிருந்தேனே... அந்த அறையை நல்லா அலங்காரம் பண்ணிடு. எல்லா வசதியும் அதிலே இருக்கணும். இப்பவிருந்தே வேலைய ஆரம்பிச்சிடு. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை யாச்சேன்னு லீவு போட்டு ஓடிப் போய்டாதே!”

“இல்லைங்க மேடம்... போனவாரமே மழையால ஊருக்குப் போகலே... இந்த வாரமாவது...”

“சொந்த பந்தம்னு யாருமே இல்லாதவன் தானே நீ? என்ன இருக்குன்னு ஓடறே? உன் ஊரை யாரும் தூக்கிட்டுப் போய்ட மாட்டாங்க. நான் சொன்னதை செய்!”

“ச... சரிங்க மேடம்!” என்றான் அரை மனதாய்.



# 5

மிகப் பெரிய அறை அது! நடுவில் புத்தம் புது கட்டில், இளம்பச்சை நிற பெட், தலையணை, விரிப்பு எல்லாமே ஒரே நிறத்தில். இடது ஓரமாய் ரட்டன் மூங்கில் டைனிங் செட்! மூன்று பக்கமும் நான்கு நீளக்கதவுகள் கொண்ட ஜன்னல். அதற்கான திரைச்சீலையும் இளம்பச்சையில்தான்! ஒரு பக்கம் வெளிச்சத்துக்கு பிரெஞ்சு விண்டோ! கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்திருந்த நீலகிரி மலையின் அழகும், கரும்பச்சையாய் படர்ந்திருந்த மரங்களும், அதைத் தழுவியிருந்த பனிப் போர்வையும் கொள்ளை அழகுடன் கண்களை நிறைத்தது.

அடர்ந்து உயர்ந்திருந்த ஆரஞ்சுச் செடியும், பேரிக்காய் மரமும் கைக்கெட்டும் தூரத்தில்! ஜன்னல் வழியே கைநீட்டி பறித்து விடலாம்.

அறைக்குள்ளேயே கம்ப்யூட்டர், ஹோம் தியேட்டர் வசதியும் இருந்தது.

கவனமாய் ஒவ்வொன்றையும் நோட்டம் விட்ட பத்மாவதிக்கு முழு திருப்தி.

கார்த்திகேயன் ஒவ்வொரு இன்ச்சையும் பார்த்து. பார்த்து இன்டீரியர் டெகரேட் பண்ணி இருந்தான்.

“ம்... நல்லாயிருக்கு! அப்புறம் டிரைவர் வேலைக்கு ஆள் போடச் சொன்னேனே...”

“ஏழெட்டுப் பேர் வந்தாங்க மேடம்! அதிலே அஞ்சு பேருக்கு குடிப்பழக்கம் இருக்கு. மூணு பேருக்கு ஆக்ஸிடண்ட் அனுபவங்கள் இருக்கு. யாரையும் செலக்ட் பண்ணலே! இந்த ஊர்ல டிரைவ் பண்றதுக்கு தனித்திறமை வேணும். பேப்பர்ல விளம்பரம் கொடுத்தால் பலன் கிடைக்கும்னு நினைக்கிறேன்!”

“நல்லது... கொடுத்துடு. அப்ப... அதுவரைக்கும் நீதான் டிரைவ் பண்ணணும்.”

“பண்றேன் மேடம்!”

“என் பேத்தி டாக்டரேட் வாங்கறதுக்காக மூலிகை ஆராய்ச்சி பண்றதுக்காக வர்றா! இங்கே எந்தெந்த இடத்துல மூலிகைகள் கிடைக்குதுன்னு விசாரிச்சு வை!”

“சரிங்க மேடம்!”

“சென்னைப் போறதுக்கு ட்ரெய்ன் டிக்கெட்டை ரிசர்வ் பண்ணிடு... என் செல்லக் குட்டிய நான்தான் கூட்டிட்டு வரணும்!”

மறுப்பதற்காக வாயெடுத்தவன் அடுத்த கணமே மூடிக் கொண்டான்.

‘நான் சொன்னால் கேட்கப் போவதில்லை. சொல்றவங்க சொல்லட்டும்!’

அடுத்த ஒரு மணி நேரத்தில் டாக்டர் பத்மாவதியை போனில் பிடித்தார்.

“வணக்கம்மா...!”

“வணக்கம் டாக்டர்... எப்படியிருக்கீங்க?”

“நான் கேட்க வேண்டிய கேள்வி... கனடாலேர்ந்து பேத்தி வர்றாங்க போலிருக்கு!”

“ஆமா டாக்டர்... நானே சொல்லணும்னு இருந்தேன். எட்டு வயசுல இந்தியா வந்தா! அதுக்குப்பிறகு பனிரெண்டு வருஷம் கழிச்சி வர்றா... ரொம்ப சந்தோஷமா இருக்கேன் டாக்டர்.”

“இருக்காதா பின்னே? ஒரே பேத்தியாச்சே! உங்க தத்துப்பிள்ளை ரஞ்சித்... அதான் ராஜதுரையோட தம்பிப்பிள்ளை... அவன் இப்ப ஜாஃப்னாவுல தான் இருக்கானா?”

“ஆமா டாக்டர். இங்கே வந்து எஸ்டேட்டை பார்த்துக்கடான்னா கேட்க மாட்டேங்கிறான். போர் அடிக்குதாம்.”

“சாஃப்ட்வேர் என்ஜினியர் தானே?”

“ம்!”

“சரிங்கம்மா... உங்க பேத்தி வியாழக்கிழமை வர்றாங்க இல்லையா?”

“ஆமாம்!”

“அப்ப... நீங்க வியாழன் இல்லேன்னா, வெள்ளிக்கிழமை காலைல ஹாஸ்பிடலுக்கு வந்து அட்மிட் ஆயிடறீங்களா?”

“அட்மிட்டா... எதுக்கு?”

“சும்மாவா? ஹார்ட் பேஷண்ட்! போதாதற்கு எக்ஸ்ட்ரா ஆக்டிவிடீஸ் மாதிரி... எக்ஸ்ட்ராவா ஏகப்பட்ட நோய் வேற! பேத்திய அழைச்சிட்டு வர... குன்னூர்லேருந்து மேட்டுப்பாளையம் வரைக்கும் ட்ரெய்ன்லேயோ, கார்லேயோ டிராவல் பண்ணணும். மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னைக்கு. மறுபடி சென்னையிலேர்ந்து மேட்டுப்பாளையம் டு குன்னூர்! உடம்பு என்னத்துக்கும்மா ஆகும்? எல்லாம் தெரிஞ்சி நீ எப்படி போக விட்டேன்னு என் ஃப்ரண்ட் ராஜதுரை கனவுல வந்து சண்டை போட மாட்டானா?”

தொய்ந்துப் போனாள் பத்மாவதி.

“டாக்டர் ரொம்ப வருஷம் கழிச்சி என் பேத்தி வர்றா... அவளை ரிசீவ் பண்ண எனக்கு உரிமையில்லையா?”

“ஏம்மாயில்லே? உங்க பாடி கண்டிஷன் அலவ் பண்ணலையே? உங்க பேத்திக் கூட

சந்தோஷமா இருக்கனும்னா... தயவுப் பண்ணி ட்ராவல் பண்ணாதீங்க.. ப்ளீஸ்ம்மா... கொள்ளுப்பேரன் பேத்தி எல்லாம் பார்க்க வேணாமா?"

"இதையெல்லாம் யாரு டாக்டர் உங்கிட்டே சொன்னது?" எதிரே நின்றிருந்த கார்த்திகேயனை முறைத்துப் பார்த்தபடி கேட்டாள்.

"யாராயிருந்தாலும் என்னம்மா? உங்க நன்மைக்காக தானே சொல்லியிருக்காங்க. கண்டிப்பா ட்ராவல் பண்ணக் கூடாது. ரிஸ்க் எடுக்காதீங்க... வச்சிடறேன்."

பத்மாவதியும் போனை வைத்துவிட்டு அவனைப் பார்வையால் எரித்தாள்.

"எல்லாம் உன் வேலைதானே?"

"உங்க நன்மைக்காக தான்!"

"நீ யார் என் விஷயத்தில் தலையிட?"

"ஐயா... இங்கே என்னை வேலைக்கு சேர்த்ததே உங்களை கவனிச்சுக்கனும்னு தான்! சில விஷயங்களில் நான் என் தகுதியை மீறி தலையிட வேண்டிய சூழல் ஏற்பட்டுடுது மேடம்! நான் சென்னைக்குப் போய் உங்க பேத்தியை அழைச்சிட்டு வந்திடறேன்."

பதிலேதும் பேசாமல் அமைதிக் காத்தாள்.

♥ ♥ ♥

**கா**ரை மேட்டுப்பாளையத்தில் ஒரு நண்பரின் வீட்டில் விட்டு விட்டு... அங்கிருந்து ரெயிலில் சென்னைக்குப் போனான் கார்த்திகேயன்.

மும்பை வந்து சேர்ந்திருந்த அஸ்மிதா, அங்கிருந்து விமானத்தில் சென்னை வருகிறாள்.

இதற்கு முன்பு கார்த்திகேயன் அஸ்மிதாவைப் பார்த்ததில்லை. பத்மாவதியிடம் இருந்ததெல்லாம் பதினைந்து வயதுக்குட்பட்ட படங்கள் தான். குழந்தைத்தனம் மிகுந்திருந்த அந்த முகத்திற்கும் இப்போது உள்ள முகத்திற்கும் நிச்சயம் ஏக வித்தியாசம் இருக்கும்.

பெண் வளர்த்தி... புடலங்காய் வளர்த்தி என்பார்களே!

கார்த்திகேயன் அஸ்மிதாவின் பெயர் தாங்கிய அட்டையை உயர்த்திப் பிடித்திருந்தான். அவனைப் போலவே ஏழெட்டுப் பேர் பெயர் எழுதிய அட்டையை பிடித்திருந்தனர். அதனால், அஸ்மிதா திணறுவதற்கு வாய்ப்பில்லை.

வழுக்கிக் கொண்டு தொண்டையில் இறங்கிய குலோப்ஜாமுனைப் போல்... ஸ்பீக்கரில் வழிந்தது அறிவிப்பாளினியின் நுனி நாக்கு ஆங்கிலம்.

மும்பையிலிருந்து விமானம் வந்திறங்கி விட்டது.



அந்த ஹைடெக் இடத்தில் பதற்றம் பற்றிக் கொண்டது.

ஃபார்மாலிட்டீஸ் முடிந்து வந்த பயணிகளில் கிட்டத்தட்ட இருபதிற்கும் மேற்பட்ட இளம்பெண்கள். எல்லோருமே நவநாகரீக உடையில் இருந்ததால்... அதில் யார் அஸ்மிதா என்று யூகிக்க முடியவில்லை. அட்டையை இன்னும் உயர்த்திப் பிடித்தான்.

இவளாயிருக்குமோ, அவளாயிருக்குமோ என்று கணித்ததும் பொய்யாகி... "எக்ஸ்க்யூஸ்மீ" என்று வந்து நின்றவளைப் பார்த்து கொஞ்சம் கூசிப் போனான் கார்த்திகேயன்.

"யெஸ்..." என்றான்.

"ஐ. ம்... அஸ்மிதா!"

"வெல்கம் மிஸ் அஸ்மிதா. நான் பத்மாவதி எஸ்டேட்டின் மேனேஜர் கார்த்திகேயன்!"

"ஒக்கே... என் லக்கேஜை எடுத்துக்குங்க!"

அவள் பின்னே நடந்தான் கார்த்தி!

அவன் கூசிப்போனதற்கு காரணம்... அஸ்மிதா அணிந்திருந்த உடை!

மினி ஸ்கர்ட்... அதுவும் மெல்லிய ஸாட்டின் துணியில். காற்றுக்கு விலகி... உள்ளே அணிந்திருந்த டைட் ஷார்ட்ஸ் தெரிந்தது. இடுப்புக்கு மேல் கவ்வியிருந்த இறுக்கமான ஸ்லீவ்லெஸ் மேலாடை! அதை கொஞ்சமும் மறைக்காமல் திமிரும் இளமை அழகை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஜெர்கின் கோட்!

வந்த பயணிகளில் மூன்று வெளிநாட்டுப் பெண்களும் இருந்தனர். அவர்கள் ஆசை ஆசையாய் உடுத்தியிருந்தது என்னவோ சேலையும், சல்வாரும் தான்!

அஸ்மிதாவுக்கு அழகான விரிந்த விழிகள். வரைந்த அல்வாத்துண்டு அதரங்கள். முத்துப் போல் பல்வரிசை... பேசும் போதே கவர்ச்சியாய் பளிச்சிட்டு காட்டியது. நேர்த்தியான மூக்கு.

அழகான குடும்பப்பாங்கான முகம். ஆனால், அதற்கு சம்பந்தமேயில்லாமல் செம்மண் நிறத்தில் தோள் வரை புரண்டது கூந்தல்! இத்தனூண்டு டிரஸ்சிற்கு போக, தாராளமாய் இடமிருந்த ஒட்டிய வயிற்றுப் பகுதியின் நாபியில் சின்னதாய் வளையம் மாட்டி... காட்சிப் பொருளாக்கி இருந்தாள்.

முகத்தில் லோஷனும், உதட்டில் அடிக்காத நிறத்தில் லிப்ஸ்டிக்கும் தவிர... வேறு அலங்காரமில்லை. காதில் தொப்புளில் மாட்டியிருந்த வளையத்தை விடவும் சின்னதாய் வளையம் மாட்டியிருந்தாள். கண்களில் யாரையும் வீழ்த்தும் காந்தம் இருந்தது. அதைவிட அதிகமாய் அலட்சியமும் திமிரும் இருந்தது.

அங்கிருந்தவர்களில் அஸ்மிதா தனித்துத் தெரிந்தாள். அவளின் அழகும், திமிரும் இளமையும், கவர்ச்சியான உடையும், பளீரென்ற நிறமும், 'திரை நட்சத்திரமோ' என்று அத்தனை கண்களும் ஊன்றி மொய்த்தன.

கார்த்திகேயனுக்கு அவளுடன் இணைந்து நடப்பதே அசிங்கமாய் இருந்தது.

## 6

**வி**மான நிலையத்திலிருந்து, கால் டாக்ஸியில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றான். அதுவரை இருவரும் ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை. பார்த்துக் கொள்ளவுமில்லை.

'ஊரே தன்னைத் திரும்பிப் பார்க்க... இவன் அட்லீஸ்ட் ஓரப்பார்வையிலாவது சைட் அடிக்க வேண்டாமா?' அவளுள் அந்த எண்ணம் ஓட, மெல்ல திரும்பி அவனைப் பார்த்தாள்.

பரிசோதகரிடம் தன் ரிசர்வேஷன் ஸ்லிப்பை காண்பித்து பேசிக் கொண்டிருந்தான் கார்த்திகேயன்.

'நல்ல உயரத்தோடு, அதற்கேற்ற தேகக்கட்டோடு, மாநிறத்தில், அடர்ந்த கேசமும், குவிந்து தடித்த உதடை மறைத்து வளர்ந்த மீசையும்... நன்றாகவே இருக்கிறான். கண்ணியமான இளம் அதிகாரியைப் போல்! ஆனால், அவனின் தீட்சண்யமான பார்வையில் சிறு சலனம் கூட இல்லையே!'

ஏனோ... அவனை முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போனது.

அருகில் வந்தான் கார்த்திகேயன்.

"மேடம்... வாங்க... இந்த கம்பார்ட்மெண்ட் தான்!"

"எனக்கு கூல்ட்ரிங்க்ஸ் வேணும்!"

"இதோ... வந்துட்டேன் மேடம்!" பணிவாய் கூறிவிட்டு வேகமாய் நடந்தான்.

"வாவ்... மச்சி பார்த்தியா இந்த ஃபிகரை!"

பின்னாலிருந்து குரல் கேட்க, திரும்பினாள் அஸ்மிதா.

ஐந்து இளைஞர்கள். படித்தப்படிப்பும், இளமையின் துடிப்பும் அப்பட்டமாய் தெரிந்தது.

அவர்களை அலட்சியப்படுத்துவதுப் போல், ஸ்டைலாய் கூந்தலை ஒதுக்கி திரும்பிக் கொண்டாள்.

"ஸ்ஸ்... அப்பா... இப்பவே கண்ணைக் கட்டுதே! வா... வான்னு கூப்பிடுதுடா ஒவ்வொரு பார்ட்டும்!"

"கிடைச்சா... இப்படியொரு லைஃப் பார்ட்னர் தான் கிடைக்கணும். சூப்பரா இருக்காடா!"

"இவ்ளோ அழகான தொடையை கண்டிப்பா ரம்பா மாதிரி இன்ஷ்யூர் பண்ணியிருப்பா!"

"தொடை மட்டுமா... அங்கேப் பார்!" அவனின் பார்வை பதிந்த இடம் சரியானதல்ல.

"ஊட்டி ஆப்பிள் மாதிரி மினுமினுக்கிறாளே... இவளோட ஊர் கண்டிப்பாய் ஊட்டியாதான் இருக்கணும். டேய் இங்கே பார்த்தியா ரிங்? நீ கூட காதுகுத்திப் போட்டுக்கணும்னு இந்த சைஸ் ரிங்குக்காகக் கடை கடையா அலைஞ்சியே... கேட்டுடலாமா? எக்ஸ்க்யூஸ்மீ மிஸ்... இந்த ரிங் என்ன விலை?" சட்டென அவள் வயிற்றைத் தொட்டு கேட்டான்.

"யூ...யூ!" கோபிக்கிற மாதிரி நடித்தாள். அவர்களின் வர்ணனைகளை ரசித்தாள்.

அடுத்த கணம் தொட்டவனின் கையை முறுக்கி முகத்தில் கும்மென்று குத்தினான் ஓடிவந்த கார்த்திகேயன்.

ஐந்து பேரும் அவனை அடிக்க... வெறி கொண்ட புலியாய் சரமாரியாய் தாக்கினான். உதவிக்கு சில ஆண்களும் வர... அங்கிருந்த போலீசாரிடம் அவர்களை ஒப்படைத்து விட்டு வந்தனர்.

அஸ்மிதா தலைக்கு ஏறிய கோபத்தோடு காத்திருந்தாள்.

"வாங்க மேடம்... ட்ரெய்ன் கிளம்ப பத்து நிமிஷம்தான் இருக்கு!" என்றான் ஒன்றுமே நடவாததுப்போல்!

பயணிகள், ஒலிபெருக்கியில் வழிந்த குரலையடுத்து தங்கள் இருக்கைகளைத் தேடி ஓடினர்.

"ஆர் யூ எஜு-கேட்டட்?" என்றாள் முறைத்து.

"யெஸ் மேடம்!"

"பட், நீ நடந்துக்கிட்டது நான்சிங்கா தெரியலே?"

"மேடம்... அவங்க உங்களை..."

"நான் உன்கிட்ட கம்ப்ளைண்ட் பண்ணினேனா... அவங்க என்கிட்ட மிஸ்பிஹேவ் பண்றாங்கன்னு? பட்டிக்காடு மாதிரி நடந்துக்கறே?"

"......?!"

"ஒரு சாதாரன விஷயத்தை பெரிதாக்கி அசிங்கப்படுத்திட்டேயில்லே? குன்னூர் போனதும் முதலில் உன் சீட்டை கிழித்து அனுப்புகிறேன் இரு!" கோபமாய் கம்பார்ட்மெண்டில் ஏறி அமர்ந்தாள்.

கார்த்திகேயன் அமைதி காத்தான். குன்னூர் செல்லும் வரை இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை. பசித்த வேளைக்கு அவன் வாங்கிக் கொடுத்த உணவை மட்டும் சாப்பிட்டாளே யொழிய... அவன் மீது மலையளவு வெறுப்பு குமிந்திருந்தது.

♥ ♥ ♥

**ப**த்மாவதி வாசலிலேயே வரம் வாங்கி வந்தவள் போல், பேத்தியின் வருகைக்காக காத்திருந்தாள். பொன்னம்மா ஆரத்தித் தட்டுடன் தயாராக இருந்தாள்.

நெடுதுயர்ந்த மதிற்கோட்டையின் கனமான இரும்புக் கதவுகள் திறக்க... உள்ளே நுழைந்தது கார்த்திகேயனின் கார்.

பத்மாவதியின் கண்கள் பேத்தியைத் தேடி காற்றைப் போல் அலைந்தன. சிறு பெண்ணாய் நினைவலைகளில் தேங்கி நிலைத்திருந்த உருவத்தின் பரிணாமத்தைக் காண இதுவரை சந்தித்தேயிராத ஆவலோடு உள்ளம் படபடத்தாள்.

"அஸ்மிதா... அஸ்மிதா"

பெரியவளின் பாசப்பெருக்கை... ஒரு ஓரமாய் இளையவளைக் காண குழுமியிருந்த பணியாட்கள்... பார்த்து நெக்குருகினர்.

எல்லாரும் இருந்தும்.... யாருமற்று தனியே வாழும் அவஸ்தை... அதிலும் முதுமையில் தனிமை... கொடியதல்லவா?

கார்த்திகேயன் இறங்குமுன்பே அஸ்மிதா இறங்கி... ஓடிவந்து பாட்டியை கட்டிப்பிடித்துக் கொண்டாள். அவளை முழுதாய் காணும் முன்பே... அவள் முகத்தில் முத்தங்களை வாரி இறைத்தாள் அஸ்மிதா! தன்னை மறந்து... பாச மழையில் விழிகளை ஈரம் படர விட்டாள் பத்மாவதி.

அந்த இருவரின் நிலையை விட...

அஸ்மிதாவின் உடையும், பளீரென்று அறைந்த மேனியின் நிறமும் அத்தனை கண்களையும் ஈர்த்தது.

"பாட்டி... எப்படியிருக்கே பாட்டி?"

"என் செல்லத்தையெல்லாம் பிரிஞ்சு... பாட்டி இங்கே சந்தோஷமாகவா இருக்கப் போகிறேன்? எத்தனை வருஷமாச்சுடா உன்னைப் பார்த்து... அ... ஒரு நிமிஷம் உள்ளேப் போய் பேசலாம்... அதுக்கு முன்னாடி ஆரத்தி எடுத்திடட்டும்... பொன்னம்மா!" என்றழைத்தாள் விழிநீரை லாவகமாய் துடைத்து.

பொன்னம்மா பணிவாய் ஆரத்தி எடுத்த கணங்களில்தான் பத்மாவதி தன் பேத்தியை முழுதாய் பார்த்தாள்.

'பாப் வெட்டி, கவுனை மாட்டிக் கொண்டு வளைய வந்த அந்த அஸ்மிதாவா இது? எப்படி வளர்ந்து விட்டாள்? ஆனால்... ஆனால்...வேறு உடை அணிந்து இருக்கலாமே!'

எல்லாம் முடிந்து இருவரும் உள்ளேச் சென்றபின் கார்த்திகேயன் கண்களைக் காட்ட வேலையாட்கள் லக்கேஜ்களை உள்ளே எடுத்துச் சென்றனர்.

பேத்தியை தன்னறைக்கு அழைத்துச் சென்ற பத்மாவதி ரொம்பவே உணர்ச்சி வயப்பட்டிருந்தாள்.

"உங்கம்மா எப்படியிருக்கா அம்மு? இங்கே ஒரு கிழவி பாசத்தை சுமந்துக்கிட்டு தனியேக் கிடக்காளேன்ற ஞாபகம் கொஞ்சமாவது இருக்கா? வந்து பார்த்துட்டு போவோமே... நம்மளைப் பெத்தவளாச்சேன்னு? எல்லாரும் என்னை மறந்துட்டீங்கல்ல?"

"ஐயோ... என்னப் பாட்டி இது? டாடியும், மம்மியும் எப்பவும் உன்னைப் பத்திதான் பேசிக்கிட்டிருப்பாங்க! டாடி எனிடைம் பிஸி ஷெட்யூல்! மம்மியும் அப்படித்தான்! அதான் நான் இப்ப வந்துட்டேன் இல்லே?"

"எனக்காகவா வந்தே? உன் படிப்பு விஷயத்துக்காக தானே வந்தே?"

"மூணுமாசம் நான் உன்கூடதான் இருக்கப் போறேன் பாட்டி!"

"அவ்வளவுதானா? எப்பவும் என் கூடவே இருந்துடு அம்மு!"

"சரி... இதைப்பத்தி அப்புறம் பேசலாம்! முக்கியமான விஷயம் பேசணும். என்னை ரிசீவ் பண்ண ஒருத்தனை அனுப்பி வச்சியே... அவன் பேரென்ன?"

"கார்த்திகேயன்... ஏம்மா... என்னாச்சு?"

டென்ஷனானாள்.

"அவனை உடனே வேலைய விட்டு டிஸ்மிஸ் பண்ணு!"

"என்னாச்சு அம்மு?"

நடந்த விஷயங்களை சுருக்கமாகச் சொன்னாள்.

"சாதாரண விஷயம்! அதைப் பெரிசு பண்ணி இன்டீஸன்டா பிஹேவ் பண்ணிட்டான். எனக்குப் பிடிக்கலே.. அவனை அனுப்பிடு!"

"அப்படி ஈஸியா அனுப்பிட முடியாதும்மா! உங்க தாத்தா வேலைக்கு வச்ச ஆள்! அவனா விருப்பப்பட்டு போனாதான் உண்டுங்கற மாதிரி பண்ணிட்டுப் போய்ட்டார்."

"அப்படியென்ன... அவனுக்கு மட்டும் சலுகை?"

"அதைவிடு.. நான் ஒண்ணு சொல்லுவேன். கோபப்பட மாட்டியே!

"நீ என் செல்லப் பாட்டியாச்சே? உன்மேல எனக்கு கோபமே வராது.

"இந்த டிரஸ் மேல்நாட்டுல சகஜமாயிருக்கலாம். ஆனா, இங்கே... அதுவும் நீ... வேணாம் அம்மு... பளிச்சுன்னு உடம்பெல்லாம் தெரியுது!"

"தெரிஞ்சா என்ன பாட்டி?"

"அது வேற கலாசாரம். இங்கே அப்படியா? கலாசாரம், சீதோஷ்ணம் எல்லாமே வேற! ஆம்பளைங்க மனசு தடுமாறும்!"

"நீயும் பட்டிக்காடு மாதிரிப் பேசறியே! மாடர்ன் டிரஸ் போடறது தப்பா?" சிணுங்கினாள்.

"அடடா. . மாடர்ன் டிரஸ் போடறது



# சிவப்பா, வெள்ளையா?

நெல்லிக்கு அடுத்தபடியாக வைட்டமின் 'சி' சத்து நிறைந்த பழம் கொய்யா. அதில் சிவப்பு, வெள்ளை என இரு ரகம் உண்டு. சிவப்புக் கொய்யாவைக் காட்டிலும் வெள்ளைக் கொய்யாவில் வைட்டமின் 'சி' அதிகம். ஆகவே வெள்ளைக் கொய்யாவையே நிறைய சாப்பிட வேண்டும்.

- ராஜிராதா, திருச்சி.

தப்புன்னு சொல்லலே! இந்த மாதிரி போடாதேன்னுதான் சொல்றேன். இந்த மாளிகையோட இளவரசி நீ! உன்னை யாராவது விழுங்கற மாதிரிப் பார்த்தா என் மனசு தாங்காது அம்மு!' எனக்காக அம்மு... ம்?"

"ம்... சரி!" அரைமனதாய் தலையாட்டினாள்.

"நீலிமாவும் கூட வந்திருக்கலாம். கண்ணிலேயே நிக்கறா என் பொண்ணு!"

"வருவாங்க பாட்டி!" என்றபடி கண்களை சுழற்றி சுற்றிலும் பார்த்தாள்.

"இது என் ரூம்! முதல்ல மாடி ரூம்ல தான் இருந்தேன். டாக்டர் சொன்னதால கீழே மாத்திட்டாங்க. மாடி ரூமை தான் உனக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன்... வா பார்க்கலாம்!"

"நோ பாட்டி! உன் பாடி கண்டிஷன் என்னன்னு எனக்குத் தெரியும். நானேப் போய் பார்த்துட்டு வர்றேன்!"

"பரவாயில்லே அம்மு! நீ தாட் பூட்னு இங்க்லீஷ்லே பேசுவியோன்னு நினைச்சேன். கனடாவுலேயே வளர்ந்தும் நல்லா தமிழ் பேசறியே!"

"அங்கே வீட்லே எல்லாருமே தமிழ்லதான் பேசிக்குவோம் பாட்டி! நான் மேல போய் பார்த்துட்டு வர்றேன்"

பாட்டி சொன்ன அறையை திறந்துப் பார்த்து வியந்தாள்.

"வாவ்!"

நேர்த்தியான உள் அலங்காரமும், பிரெஞ்சு விண்டோவும் அவளை வெகுவாய் கவர்ந்தன.

7

"இன்டீரியர் டெகரேஷன் யார் பண்ணினது. சூப்பர்ப்! கனடால இருக்கிற என் ரூமை விடவும் ராயலா இருக்கு!"

"அந்த கார்த்திகேயன் தான்!"

"ஓ! வாங்கற சம்பளத்துக்கு உருப்படியா இந்த ஒரு வேலையாவது செஞ்சிருக்கானே... தாங்க் காட்! பாட்டி... நம்ம ஊரை சுத்திப் பார்க்கணும். வரும்போது மூட் சரியில்லாததால மனசை செலுத்த முடியல... ஏற்பாடு பண்ணு! அப்படியே... இந்த பேலஸ் முழுக்கவே இன்டீரியர் டெகரேஷன் பண்ணிடு... பாழடைஞ்ச பேய் பங்களா மாதிரி இருக்கு!"

"நீ சொல்லிட்டேயில்லே... பண்ணிடலாம் அம்மு!"

♥ ♥ ♥

அன்றிரவு பத்மாவதிக்கு மகளிடமிருந்து போன் வருகிறது.

"அம்மா நல்லாருக்கியாம்மா?" என்று கேட்டாள் நீலிமா.

"ஒண்ணும் பேசாதே... போனை வை!"

"என்னம்மா கோபம் உனக்கு?"

"இங்கே உன்னைப் பெத்தவள்னு ஒருத்தி இருக்காங்கிற நினைப்பே இல்லாமப் போச்சில்லே?"

"அம்மா... எனக்கு மட்டும் ஆசையில்லையா? உங்க மருமகன் ரொம்ப பிஸிம்மா! அவர் வேலை அப்படி! அஸ்மிதா போன் பண்ணினா... பாட்டியும், குன்னூரும் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குன்னு!"

"அப்படியா சொன்னா..." பூரித்துப் போனாள். "ஆனா, இப்பவே சொல்லிட்டேன். நான் இன்னும் எத்தனை நாள் இருப்பேனோத் தெரியாது. நான் சொல்ல சொல்லக் கேக்காம வெளிநாட்ல வேலை செய்யற மாப்பிள்ளைக்கு உங்கப்பா உன்னைக் கல்யாணம் செய்துக் கொடுத்துட்டு என்னை அனாதை ஆக்கிட்டார். என் பேத்தியையும் அதே மாதிரி பண்ண விடமாட்டேன். இங்கேதான் மாப்பிள்ளை பார்ப்பேன். நானூறு கோடி ரூபாய் சொத்து சேர்த்து வச்சிருக்கேன். எல்லாம் யாருக்கு? அம்முக்கு தானே? அவளை நான் என் கூடவேதான் வச்சிருக்கப் போறேன்!"

"அம்மா... யாரு வேண்டாம்னது? சொந்த மண்ணைவிட்டு பிரிஞ்சிருக்கிற மாதிரியான வேதனை வேறென்ன இருக்கு? அஸ்மிதாவுக்கு இந்தியாவுல தான் மாப்பிள்ளை... சரியா?"

"ரொம்ப சந்தோஷம் நீலி!"

"அம்மா இன்னொரு விஷயம். நம்ம ரஞ்சித் இல்லே... அவனை போனமாசம் கனடாவுல ஒரு காபி ஷாப்ல பார்த்தோம்!"

"அவன் எங்கே அங்கே? அவன் ஜாஃப்னால இல்லே இருக்கான்?"

"இப்பவும் அங்கேதான் இருக்கான். அஃபிஷியல் மேட்டரா கனடாவுக்கு வந்ததா சொன்னான். கூடிய சீக்கிரம் இந்தியாவுக்கே போய் செட்டிலாய்டுவேன்னு சொன்னான்!"

"புதுத்தகவலா இருக்கே! இதுவரைக்கும் என்கிட்டே ஒண்ணும் சொல்லலியே!"

"சர்ப்ரைஸா அங்கே வந்து நிப்பானோ என்னவோ? அம்மா... இன்னொரு முக்கியமான விஷயம் பத்திச் சொல்லதான் இப்ப நான் போன் பண்ணினதே!"

"என்ன நீலி... சொல்லு!"

"இன்னும் ஒரு பத்து வருஷம்... சர்வீஸ் முடிச்சிட்டு நாங்களும் இந்தியா வந்திடலாம்னு இருக்கோம்."

"சந்தோஷமான விஷயமா சொல்றியே... ஆனா, அதுவரைக்கும் நான் இருப்பேனா நீலி? உங்களோட ஒண்ணா வாழற பாக்கியம் எனக்கு கிடைக்குமா?"

"ஏம்மா அப்படிச் சொல்றே? அஸ்மிதாவோட பையனுக்கு நீதான் கல்யாணம் பண்ணி வைக்கப்போறே?"

"எவ்ளோ பேராசைடி உனக்கு?"

"அப்புறம்... உன் விருப்பப்படியே அஸ்மிதாவுக்கு இந்தியாவுலேயே மாப்பிள்ளை பார்த்து முடிச்சிடலாம்னு உங்க மருமகன் சொல்லிட்டார்!"

"நிஜமாவா?"

"மாப்பிள்ளையும் பார்த்தாச்சு?"

"எ... என்னது?"

"பதறாதேம்மா! உன் பேத்தி எப்பவும் உன் கூடவே இருக்கிற மாதிரிதான் மாப்பிள்ளைப் பார்த்திருக்கிறோம்."

"புரியற மாதிரி சொல்லுடி!"

"ரஞ்சித் உனக்கு தத்துப்பிள்ளை! சித்தப்பா, சித்தின்னு யாரும் உயிரோட இல்லை. அப்பாவும் அவனுக்காக அம்பது கோடி ரூபாய் சொத்தை உயில் எழுதி வச்சிருக்கார் இல்லையா? ரஞ்சித் யாரு? எனக்கும் தம்பி தானே? அஸ்மிதா மூலமா வர்ற கோடிக் கணக்கான சொத்தை யாரோ அனுபவிக்கறதை விட... ரஞ்சித்தே அனுபவிக்கட்டுமே! என்னம்மா சொல்றே?"

"நல்ல ஐடியாதான்... ஆனா, அஸ்மிதாவுக்கு பிடிக்க வேணாமா?"

"அவனோட டேஸ்ட், மென்ட்டாலிட்டி என்னன்னு எனக்குத் தெரியும்மா! ரஞ்சித் இப்ப எப்படியிருக்கான் தெரியுமா? நல்ல ஸ்மார்ட்டா ஹீரோ மாதிரி இருக்கான். அஸ்மிதாவோட போட்டோவைப் பார்த்துட்டு அசந்துட்டான். உங்க மருமகனுக்கும் ரஞ்சித்தை பிடிச்சிருக்கு."

"நீ பேசப்பேச.... மனசு நிறைவா இருக்கு நீலிம்மா! எல்லாமே நல்லபடி நடக்க சௌடேஸ்வரி துணை இருக்கணும்."

"இப்போதைக்கு இந்த விஷயம் அஸ்மிதாவுக்கு தெரிய வேண்டாம். ரஞ்சித் அங்கே கூடிய சீக்கிரம் வந்திருவான். அவனைப் பார்த்தாலே அஸ்மிதாவுக்கும் பிடிச்சிடும். அவ படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் முடிச்சிடலாம். அப்புறம்... அவன் பேரென்ன..."

"யாரைக் கேக்கறே?"

"மேனேஜரா வந்து அழிச்சாட்டியம் பண்ணிட்டிருக்கானே... அவனை...!"

"கார்த்திகேயன்...!"

"அவனை ஏம்மா இன்னும் அங்கேயே வச்சிருக்கே? அனுப்பிட வேண்டியது தானே?"

"எனக்கு மட்டும் ஆசையா என்ன? உங்கப்பா குடுத்த சலுகை... அவனை விரட்ட எனக்கு உரிமை இல்லை!"

"பணத்துக்காக வந்தவன்தானே? நாலஞ்சு லட்சம் குடுத்து அனுப்பு!"

"ம்ஹூம்... போக மாட்டான். அவன் ஏதோ திட்டத்தோட வந்திருக்கான். அவன்கிட்டே என்னமோ ரகசியம் இருக்கு நீலி! சொல்லிக்க சொந்த, பந்தம்னு யாருமில்லே! ஆனா, ஞாயிற்றுக்கிழமையானா... டாண்னு ஊருக்குப் போய்ட்டு விடிஞ்சப் பிறகு வர்றான்!"

"கல்யாணமாகி பொண்டாட்டி, குழந்தைன்னு ஆகியிருக்கும்போல..."

"என்னக் கண்றாவியோ... அவனைப் பத்தி பேசாதே... மனசு எரியுது!"

"சரிம்மா... கண்டதையும் போட்டு கலங்காதே! அதான் உன் பேத்தி வந்துட்டாயில்லே... சந்தோஷமாயிரு! வச்சிடட்டுமா?"

"சரிடாம்மா!"

♥ ♥ ♥

"என் பேத்தி ஆராய்ச்சியை முடித்துவிட்டு ஊர் திரும்பும் வரை புதிதாய் வேறு டிரைவரை நியமிக்க வேண்டாம். நீயே காரை ஓட்டு" என்று பத்மாவதி உத்தரவிட்டாள்.

"மேடம்! தொழிற்சாலைகளையும், தோட்டங்களையும், கணக்கு வழக்குகளையும் பார்க்கணும். நேரம் போதாதே!"

"சொன்னதை மட்டும் செய்! சில வேலைகளை தற்காலிகமாக கதிரிடம் ஒப்படை!"

"சரிங்க மேடம்!" என்றான் அரைமனதாய்.

'நான் டிரைவரா?' வேதனையுடன் எழுந்த கேள்வியை உடனடியாக அழித்தான் கார்த்தி.

'வேண்டாம் கார்த்தி. இதையெல்லாம் ஒரு விஷயமாய் நினைத்து உன்னை நீயே களைப்பாக்கிக் கொள்ளாதே! நீ எதற்காக வந்தாயோ... அந்த காரியம் முக்கியம். அதைத் தவிர வேறெந்த சிந்தனையும் வேண்டாம்.'

♥ ♥ ♥

**மூ**ன்தினம் அலுவல் விஷயமாய் பொள்ளாச்சி போய் திரும்ப பின்னிரவாகி விட்டது. ஏக பசி! ஆனால், அந்த நள்ளிரவில் உணவிற்காக பத்மாவதி பவனத்தின் கதவைத் தட்ட சுயகவுரவம் தடுத்தது. தண்ணீரை குடித்து விட்டு படுத்தான். பனிரெண்டு மணிக்கு புரோட்டீன் கம்பெனிக்கு சென்று சம்பள பட்டுவாடா செய்ய வேண்டும். அதற்கு முன் வங்கிக்கு சென்று பணம் எடுக்க வேண்டும். அதற்கு பத்மாவதி கையெழுத்திட்ட காசோலை வேண்டும்.

காலையிலேயே எழுந்து தன்னை தயார்படுத்திக் கொண்டவன் மாளிகைக்குச் சென்றான்.

அங்கு டைனிங் டேபிளைச் சுற்றி நான்கைந்து பணியாளர்கள் பரிமாற... பத்மாவதியும், அஸ்மிதாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் சாப்பிட்டு முடிக்கும் வரை ஹாலில் காத்திருந்தான்.

இவனைப் பார்த்ததும் பத்மாவதி ஹாலுக்கு வந்தார்.

"வணக்கம் மேடம்!"

"ம்!"

"இன்னைக்கு புரோட்டீன் கம்பெனிக்கு சம்பள நாள். செக் போட்டு குடுத்தீங்கன்னா... பேங்க்ல கேஷ் எடுத்துக்கிட்டு கம்பெனிக்குப் போய்டுவேன்."

"அந்த வேலையை கதிர் செய்யட்டும். என் பேத்தி ஷாப்பிங் போகணுமின்னு சொன்னா... கூட்டிட்டுப் போ!"

பத்மாவதி அவனை வேண்டுமென்றே சிறுமைப்படுத்துகிறாள் என்பதுப் புரிந்தது. என்றாலும் அமைதியுடன் "சரிங்க மேடம்" என்றான்.

சற்று நேரத்தில் அலட்சியம் சுமந்த நடையும், முகமுமாய் வந்தாள் அஸ்மிதா.

லெமன் யெல்லோ காட்டன் ஸ்கர்ட்டும், ஸ்லீவ்லெஸ் 'வி' நெக் 'டாப்'ஸு"மாய், ஹை ஹீல்ஸ் செருப்புடன்... நடந்து வந்ததே... கம்பீரமாய் இருந்தது.

"காரை எடு!"

பசித்த வயிற்றை அலட்சியப்படுத்தி கார் கதவைத் திறந்து விட்டான்.

அமராமல் அவனையே சில கணங்கள் பார்த்தவள், "விஷ் பண்ணணும்ங்கற மேனர்ஸ் கூட தெரியாதா உனக்கு?"

"கு... குட்மார்னிங் மேடம்!"

"அது!" என்றாள் ஆணவத்தின் உச்சத்தில். திமிராய் ஏறி அமர்ந்தாள்.

## 8

**உ**டைகள், மூலிகை சம்பந்தப்பட்ட புத்தகங்கள், கிரீம், ஸ்ப்ரே வகையறாக்கள் என்று கடை கடையாய் ஏறி... வேண்டுமென்றே நேரங்களை அதிகமாய் செலவழித்து, கார்த்திகேயனை காக்க வைத்தாள் அஸ்மிதா.

ஒரு காபி சாப்பிடக்கூட நேரமின்றி, எந்நேரமும் கடையிலிருந்து அவள் வந்து விடுவாளோ என்று காரிலேயே காத்திருந்தான். இடையில் பசிக்கிறது என்று ரெஸ்டாரெண்டில் காரை நிறுத்தச் சொல்லி அவள் மட்டும் சாப்பிடச் சென்றாள்.

நடுநடுவே கம்பெனி ஆட்களுக்கு போன் செய்து வேலை சம்பந்தமான உத்தரவுகளை பிறப்பித்தான். கதிருக்கும் போன் பண்ணி, சம்பள பட்டுவாடா குறித்து விசாரித்தான்.

முன்தின பயணக்களைப்பு, பசி எல்லாம் சேர்ந்து லேசாய் கண்ணயர செய்தது.

எத்தனை கணங்களோ, நிமிஷங்களோ...

சிட்டிகையின் ஒலி காதருகில் திடுக்கிட செய்ய...

அவனை இளக்காரமாய் பார்த்தபடி அஸ்மிதா.

"ஸ... ஸாரி மேடம்!"

"கதவைத் திறந்து விடு!"

கார்த்திகேயன் இறங்கி பின்பக்க கதவைத் திறந்து விட... அமர்ந்தாள்.

♥ ♥ ♥

மற்றொரு நாள்!

பாட்டியும் பேத்தியும் கோவிலுக்குச் செல்லத் தயாராகயிருந்தனர்.

தொடர்ந்து பெய்துக் கொண்டிருந்த உறைபனியால் தேயிலை செடிகள் கருகிக் கொண்டிருந்தது. ரோடுகள், வீடுகள் என்று பாரபட்சமில்லாமல் பனி உறைந்திருந்தது.

கடுமையான குளிர் வீட்டிற்குள் வசிப்பவர்களையே உண்டு, இல்லை என்று பண்ணிக் கொண்டிருக்க... இந்தம்மா என்னடாவென் றால்...

"வண்டிய எடு..."

"மேடம் எங்கே போகணும்?"

"கோவிலுக்கு!"

"நீங்களுமா?"

"இதென்னக் கேள்வி... பார்த்தா தெரியலே?" எரிந்து விழுந்தாள் பத்மாவதி.

"ஹேய் லுக்! ஹூ ஆர் யூ மேன்? நாங்க சொல்றதை செய்யறதுக்குதான் நீ! எங்களையே திருப்பி கேள்விக் கேக்கறதுக்கு இல்லே... வண்டிய எடு!" கருகருவென கோபம் கொப்புளிக்க சொன்னாள் அஸ்மிதா.

"மேடம்... வெளியே அதிகமா உறைபனிக் கொட்டுது. இந்த வாசலைத் தாண்டிப் போனாலே... அவங்க நிலைமை என்னாகும்னு உங்களுக்குத் தெரியாது. டாக்டரைக் கேளுங்க சொல்வார்! மேடத்தோட நலத்துல அக்கறை எடுத்துக்கறதும் என்னோட வேலைதான் மேடம்." நிதானமாய், வார்த்தைகளில் அழுத்தம் சேர்த்து சொன்னான்.

அஸ்மிதா அவனையே முறைத்துப் பார்த்தாள்.

"ப்ளீஸ் மேடம்! உங்களைத் தடுக்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆனா, அவங்களை வெளியே அனுப்ப முடியாது... டாக்டரோட அனுமதி இல்லாம..."

வேலையாட்களும் இவன் பேச்சை வியப்புடன் கவனித்தனர்.

சூழலை உணர்ந்த பத்மாவதி, "பரவாயில்லே அம்மு... எனக்கு தலைவலிக்கிற மாதிரி இருக்கு. நீ மட்டும் போய் வா!"

"பாட்டி... எவ்ளோ ஆசைப்பட்டே? உனக்காக தானே கோவிலுக்கே கிளம்பினேன். டாக்டர்கிட்டே நான் பேசிக்கிறேன்... நீ வா!"

"பரவாயில்லே அம்மு... இன்னொரு நாள் வர்றேன். நீ மட்டும் போய் வா!" பத்மாவதி உள்ளே போய் விட்டாள்.

கார்த்திகேயன் காரை நோக்கிப்போக... 'இவன் பேச்சிற்கு பாட்டி கட்டுப்பட வேண்டிய அவசியம் ஏன்?' என்ற கேள்வியுடன் பின் தொடர்ந்தாள் அஸ்மிதா.

பொன்னம்மா மதிய சமையலுக்கான காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருக்க... பீதாம்பரம் குக்கரில் பருப்பை கழுவிப்போட்டு மஞ்சள் தூள் போட்டார்.

"பொன்னம்மா..." மெல்ல வெளியே பார்வையை ஓடவிட்டு ஹஸ்கி வாய்ஸில் அழைத்தார் சமையல்காரர் பீதாம்பரம்.

"என்னய்யா?"

"கார்த்தி அய்யா யாரு?"

"ஒன்னுந்தெரியாது. ஆனா ரொம்ப நல்லவரு!"

"நல்லவருன்னு பார்த்தாலேத் தெரியுது. ஆனா அவரைக் கண்டாலே பெரியம்மாவுக்கு ஆகாது. நாமெல்லாரும் கூட அவங்களை அம்மான்னு கூப்பிடறோம். ஆனா, அவரு என்னைக்காவது வாய் தவறி கூப்பிட்டாக் கூட உண்டு இல்லைன்னுப் பண்ணிடறாங்க. ஆனா, சில சமயங்கள்ல கார்த்தி அய்யா சொல்றதை பிடிக்கலேன்னாக் கூட ஏத்துக்கறாங்க... ஏன்?"

"எனக்கும் அதான் புரியலே. அந்தம்மா பேத்திக் கூட கார்த்தி அய்யாவை திட்டிக் கிட்டே இருக்கு. அவரு அமைதியா கேட்டுக் கிட்டுதான் இருக்காரு. ஆனா எனக்கென்னவோ டவுட்டா இருக்கு. அவரோட அமைதிக்குப் பின்னால பெரிசா ரகசியம் மறைஞ்சிருக்கு"

"நிஜமாவா சொல்றே... என்ன ரகசியம்?"

"நாமெல்லாரும் இந்த மாளிகையிலேயே தங்கி வேலை செய்யறவங்க. குடும்பத்தோட தங்கிக்க மாளிகைக்கு பின்னாடி வீடும் கட்டிக் குடுத்திருக்காங்க. கார்த்தி அய்யாவும் அவுஸ்லதான் தங்கியிருக்காரு. எல்லா வேலையும் பார்த்துக்கறாரு... சாப்பிடக்கூட நேரமில்லே. அப்படியிருக்கிற ஆள் ஞாயிற்றுக் கிழமையானா ஊருக்குப் போறேன்னு போய்ட்டு வர்றார். எந்த சொந்த பந்தமும் இல்லாத அவருக்கு ஊர்ல என்னயிருக்கு... யாரிருக்கா?"

"அதானே... அதுமட்டுமில்லே... அன்னைக்கு குன்னூர் சூப்பர் மார்க்கெட்டுக்கு போயிருந்தப்ப... அங்கிட்டு கார்த்தி அய்யாவும் வேற வேலையா வந்திருந்தாரு. அங்கே ஒரு ஆள் நல்லா வாட்ட சாட்டமா இருந்தாரு. வெளியூர்க்காரர் மாதிரி இருந்தாரு. இவரைப் பார்த்துட்டு கார்த்திகேயா, கார்த்திகேயான்னு கூப்பிட்டார். அடுத்த கணமே, காதிலேயே விழாத மாதிரி வெளியேப் போய் மறைஞ்சிட்டார் அய்யா. அவரைப் பார்த்து ஏன் ஓடணும்?"

"இதை ஏன்யா மொதல்லேயே என்கிட்டே சொல்லலே?"

"பெரிய இடத்து சமாச்சாரம் நமக்கு எதுக்குன்னுதான்! பொன்னம்மா... பெரியம்மா ஹாலுக்கு வந்துட்டாங்க... வாய மூடிக்க..."

"சரி... சரி!"

♥ ♥ ♥

ஆகாய நீலத்தில்... ரோஸ் நிற குந்தன் கற்கள் பதிக்கப்பட்ட சல்வார் அணிந்திருந்த அஸ்மிதா, கூந்தலை அனாயாசமாக ஒதுக்கி விட்டபடி காரை விட்டிறங்கினாள்.

கோவிலை நோக்கிச் சென்றாள்.

கார்த்திகேயனும் பின் தொடர்ந்தான்.

"ஹேய்... நீ எங்கே வர்றே?"

"கோவிலுக்கு மேடம்!"

"நான்சென்ஸ்! ஆப்ட்ரால் கைநீட்டி சம்பளம் வாங்கற வேலைக்காரன் நீ... என்னோட சமமா உள்ளே வருவதா? கார்லேயே இரு!"

ஆறடி உயர உடம்பெங்கும் கூசிற்று.

"சரிங்க மேடம்!"

அவள் உள்ளேச் சென்ற பதினைந்து நிமிடம் கழித்து அனு அர்ச்சனைக் கூடையுடன் வந்தாள். சுடிதார் அணிந்திருந்தவள் குளிருக்கு பனியனும் அணிந்திருந்தாள்.

நின்றிருந்த காரை இனம் கண்டுக் கொண்டவள் கன்றுக்குட்டியாய் துள்ளிக் கொண்டு வந்தாள்.

"ஹலோ மேனேஜர் சார்!"

"ஹேய் அனு... நீ எங்கே இங்கே?" என்றான் ஆச்சர்யமாய்.

"இதை பார்த்த பிறகுமா... இப்படியொரு கேள்வி?" கையிலிருந்த அர்ச்சனை கூடையை காட்டி கேட்டாள்.

"ஸாரி... நான் உன்னை மட்டும்தான் பார்த்தேன்... கையிலிருந்ததைப் பார்க்கலே..."

சாதாரணமாய் தான் சொன்னான். ஆனால், மரத்திலிருந்த பவளமல்லி மொத்தமும் இவள் மேல் சொரிந்ததுப் போல் பரவசமானாள்.

"ரெண்டு வாரமா வீட்டுப்பக்கம் வரவே இல்லையே"

"டைம் கிடைக்கலே அனு! பசிக்கும் போதெல்லாம் மணியடிக்கிற மாதிரி உன் ஞாபகம்தான் வருது. வர்றேன்... கதிரைப் பார்த்தும் நாளாகுது!"

சாமி கும்பிட்டு விட்டு வெளியில் வந்த அஸ்மிதா அவர்கள் இருவரையும் பார்த்து விட்டு முகம் மாறினாள்.

கார் மீது ஒய்யாரமாய் சாய்ந்துக் கொண்டு அவன். அவன் முகத்தையே இமைக்காமல் விழுங்கியபடி அவள்!

"ஹலோ... என்ன இது?"

"வாங்க மேடம்!" என்றான் நிதானமாகவே!

"நான் வர்றது இருக்கட்டும். வந்திருக்கிறது யாரு... உன் லவ்வரா?"


"மேடம்!?"

"லுக்... நீ எந்த பரதேசிய வேணாலும் லவ் பண்ணு... பட்... ட்யூட்டி டைம்ல பண்ணாதே... அதுக்காக நாங்க ஒன்னும் சம்பளம் தரலே... புரியுதா?" கோபமாய் சீறினாள்.

## ஜலதோஷத்தை போக்கும் முருங்கைக்காய்

முருங்கை சீசன் துவங்கிவிட்டது. முருங்கைக்காயை பிஞ்சாக வாங்கி, 25 மில்லி லிட்டர் சாறு எடுத்து, அதே அளவு தேன் கலந்து சாப்பிட்டால் ஊட்டச்சத்து கிடைக்கும். ஜலதோஷம் குணமாகும். பித்தம், வாய்வு தொல்லைகள் அகலும். எனவே முருங்கைக்காயை தவறவிடாதீர்.

- ராஜிராதா, திருச்



அந்த வார்த்தை அனுவை குத்திக் கிழிக்க... கண்கள் கலங்க... வந்த வழியேத் திரும்பி ஓடினாள்.

அப்பெண்ணின் வேதனை அவனை கலங்கடிக்க... "அனு" என்று கத்தினான்.

"போதும்... வண்டியை எடு!"

"மேடம் நீங்க எங்களை தப்பா..."

"நான் உன்னை எந்த விளக்கமும் கேக்கலே... ம்..."

கார்த்திகேயன் மனதில் கனத்தை சுமந்து காரை ஸ்டார்ட் பண்ணினான்.

ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது... கனத்த மழை பொழிய ஆரம்பித்தது. சற்று நேரத்தில் பொத்... பொத் என ஆலங்கட்டியும் விழ ஆரம்பித்தது. கார் திடீரென நின்றது.

"என்னாச்சு?"

"நடுரோட்ல மரம் விழுந்து கிடக்கு மேடம்!"

"மைகாட்... இப்ப எப்படி போறது?"

"கொஞ்சம் லேட்டாகும்..."

"என்ன முட்டாள்தனமான பதில் இது? அதான் பத்மாவதி பவனம் சாப்பாடு சாப்பிட்டு உடம்பை நல்லா வளர்த்து வச்சிருக்கியே... இறங்கி நீயே க்ளியர் பண்ணு"

அவள் கிண்டலை பொறுமையாய் சகித்துக் கொண்டான்.

## 9

**கா**ர்த்திகேயன் தேயிலை தோட்டத்தில் வேலை செய்யும் ஆட்களை வரச்சொல்லி போனில் தகவல் கொடுத்தான்.

நேரம் கடந்தது. பொறுமையை இழந்த அஸ்மிதா கார் கதவைத் திறந்து... கொட்டும் மழையில் நடக்க ஆரம்பித்தாள்.

பதறிப்போனவன், பின்னேயே ஓடினான்.

"மேடம் எங்கேப் போறீங்க...?"

"நான் நடந்தே போய்க்கறேன்!"

"வேற வினையே வேணாம். இது மோசமான பாதை! ஆலங்கட்டியோட மழை பெய்யுது. அவசரப்படாதீங்க... ஆட்கள் வந்திடுவாங்க... ப்ளீஸ் வாங்க!"

அவன் கெஞ்சலைப் பொருட்படுத்தாமல் நடந்தவள் அதிர்ச்சியுடன் அப்படியே நின்று விட்டாள்.

இருபதடி தூரத்தில் நின்றிருந்த பலா மரத்திலிருந்து தொப்பென்று கீழே விழுந்த பெரிய பாம்பொன்று... நழுவி... நழுவி... ஒரு பாறைக்குள் சென்று மறைந்தது.

நடுங்கிப்போன அஸ்மிதா ஓடிவந்து காரில் அமர்ந்து, கண்களை மூடிக் கொண்டாள்.

"ஆபத்தான பாதை மேடம்... பயப்படாதீங்க... போய்டலாம்" ஆறுதலாய் கூறியவன் கார் கண்ணாடிகளை ஏற்றி விட்டான்.

மழையில் முழுக்கவே நனைந்து விட்டதால், பனிக்காற்று அஸ்மிதாவை வாட்டத் தொடங்கியது. சில நிமிடங்களில் குளிரில் உடம்பு நடுங்கத் தொடங்க... கார்த்திகேயன் தயங்கி... தயங்கி ஒரு பிளாஸ்டிக் கவரை நீட்டினான்.

"என்னது?"

"என்னோட ரெய்ன்கோட்... எப்பவும் கார்ல வச்சிருப்பேன். இதை போர்த்திக்குங்க..."

'வேண்டாம்' என்று அலட்சியப்படுத்த சுயகவுரவமும், அந்தஸ்தும் தயாராக இருந்தாலும், சொல்ல விடாமல் தடுத்தது பாழாய் போன குளிர்.

கைநீட்டி வாங்கினாள். அருவருப்புடன் போர்த்திக் கொண்டாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் அவன் அழைத்திருந்த பணியாட்கள் ஏழெட்டு பேர் வந்து... மரத்தை அப்புறப்படுத்தி வழியேற்படுத்தித் தந்தனர்.

வீட்டிற்குள் நுழைந்ததும், தன்னறைக்கு வந்து... அவன் தந்த ஜெர்கினை ஜன்னல் வழியே கோபமாய் வீசி எறிந்தாள். அதுவோ... கீழே விழாமல், ஜாக்கிரதையாக ஆரஞ்சு மரக்கிளையை பற்றிக் கொண்டது.

♥ ♥ ♥

"**எ**ங்கெல்லாம் மூலிகைக் கிடைக்கும்னு சில விவரங்கள் கேட்டிருந்தேனே...!"

தயாராய் எழுதி வைத்திருந்த குறிப்புகளை எடுத்து பத்மாவதியிடம் தந்தான் கார்த்திகேயன்.

"இதுல விளக்கமா எல்லாமே எழுதியிருக்கேன். தவிர, மூலிகை சம்பந்தப்பட்ட புத்தகங்களின் பெயர்களும் எழுதியிருக்கிறேன். லைப்ரரியில கிடைக்கும்."

"இதெல்லாம் உனக்குப் பயன்படுமா பாரு அம்மு!"

பாட்டி தந்ததை வாங்கிப் பார்த்தவள் ஆச்சர்யமுற்றாள்.

என்னென்ன மூலிகை... அது விளையும் பகுதி என்று எல்லாமே அவளுக்கு மிக மிகப் பயனுள்ள வகையில் இருந்தது.

"குட்!"



"வணக்கம் மேடம்!"

புதிய குரலொன்று வாசலில் கேட்க... அஸ்மிதா நிமிர்ந்துப் பார்த்தாள்.

வசீகரமான இளைஞன் ஒருவன்! இவளை ஆச்சர்யமாய் பார்த்தபடி.

கார்த்திகேயன் அவனைப் பார்த்து சிநேகமாய் புன்னகைத்தான்.

பத்மாவதி அவனை, "வாப்பா கதிர்!" என்றாள்.

"யாரு பாட்டி?"

"நம்ம எஸ்டேட் மேனேஜர் அம்மு! பேரு கதிர். தெரியுமில்லே... இவ என் பேத்தி... கனடாவுலேர்ந்து வந்திருக்கா!"

"வணக்கம் மேடம்!"

அவனின் கண்கள் தன் அழகை வியப்புடன் நோக்குவது புரிந்தது. புன்னகைத்தாள்.

"ஹாய்!"

"கதிர் இப்ப நீ என்னப் பண்றே? நம்ம பழக்கூழ் தயாரிக்கிற தொழிற்சாலைக்குப் போய்..."

"பாட்டி ஒன் செகண்ட்..."

"என்ன அம்மு!"

"எந்த வேலையா இருந்தாலும் அதை இந்த மேனேஜர் செய்யட்டும். நான் மூலிகையத் தேடி கதிர் கூடப் போய்க்கறேன்."

கதிர் இந்த அதிர்ஷ்ட வாய்ப்பை எதிர்பார்க்கவே இல்லை. 'இந்த இடத்திற்கு வந்து அதிகபட்சம் மூன்று நிமிடம்தான் ஆகியிருக்கும். அதற்குள் என்னைப் பிடித்து விட்டதே!'

"ஏம்மா!"

"இந்த உம்மணாமூஞ்சி மேனேஜர் கூட போனா நானே டயர்டாய்டறேன்."

கார்த்திகேயன் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் அமைதியாய் இருந்தான்.

"என்ன மிஸ்டர் கதிர்... எனக்கு ஹெல்ப் பண்ண முடியுமா?"

"காத்திருக்கிறேன் மேடம்!"

"சரி கதிர்... நீ அம்முக்கூட போ... கவனம்! வேகமா வண்டிய ஓட்டாதே!"

"சரிங்க மேடம்!"

"அப்ப நீ மத்தவேலைய பார்த்துக்க!"

"சரிங்க மேடம்!" என்றபடி வெளியேறினான் கார்த்திகேயன்.

அஸ்மிதா... கதிருடன் ஜீப்பில் அவன் பக்கத்திலேயே அமர்ந்தாள்.

"வொண்டர்ஃபுல்யா... காரை விட... ஜீப் தான் பெஸ்ட்!"

அவள் தன்பக்கத்தில் அமர்ந்ததே... தலை கால் புரியாமல் இருந்த கதிருக்கு... ஜீப்பை வேறு பாராட்டி சொன்னதும்... அப்படியேப் பறந்தான்.

அஸ்மிதா ஜாலியாகப் பேசினாள்.

கதிர் தயங்கித் தயங்கிப் பேச... "கமான்யா... ஏன் தயங்கறே? ஐ லைக் யூ! வீ ஆர் ஃப்ரண்ட்ஸ்... ஓக்கே?" என்றாள்.

அதுபோதாதா? நீலகிரி மாவட்டத்தின் மொத்தப் பனியும் ஒன்றாய் குவிந்து இவன் மேல் கொட்டியது.

"இதோ... இந்த லிஸ்ட்டை படிச்சுப் பார் கதிர்... இதுல எழுதியிருக்கிற இடங்களுக்கு அழைச்சிட்டுப் போகணும்!"

"சரிங்க மேடம்!"

"ம்ஹூம்... அது மத்தவங்களுக்கு. நாம தான் ஃப்ரண்ட்ஸாயிட்டமே... ஸோ... கால் மீ அஸ்மி!"

"அஸ்மி?"

"ம்!"

"அஸ்மி... நைஸ் நேம்... ரொம்ப அழகாயிருக்கு உங்களைப் போல..."

அவனின் பாராட்டை அழகிய சிரிப்பின் மூலம் அங்கீகரித்துக் கொண்டாள்.

♥ ♥ ♥

**செ**ல்போன் ஒலிக்க... காரை ஓரமாய் நிறுத்தி விட்டு பேசினான் கார்த்திகேயன்.

"சொல்லு வேணு!"

"......?!"

"அப்படியா?"

".......?!"

"நோ... நோ... எந்த காரணத்தை முன்னிட்டும் எதுவும் தடைபடக் கூடாது!"

".......?!"

"ஸண்டே ஊருக்கு வருவேன்... அப்ப பத்து லட்சம் தர்றேன். சீக்கிரம் வேலை முடியணும்... ம்?"

".......?!"

"அடிக்கடி போன் பண்ணாதே! நானே பேசறேன்... ஓக்கே?"

போனை பாக்கெட்டில் வைத்து விட்டு காரைக் கிளப்பினான்.

சற்று தூரத்தில், காய்கறிகள் அடங்கிய பிளாஸ்டிக் கூடையுடன் நடந்து போய்க் கொண்டிருந்தாள் அனு.

அவளருகே சென்று காரை நிறுத்தினான்.

"அனு...!"

"அ... ஓ... நீங்களா?" திடுக்கிட்டு திரும்பி விரிந்த விழிகளில் வியப்பைக் காட்டினாள்.

"மார்க்கெட்டுக்கு போய்ட்டு வர்றியா?"

"ம்!"

"அனு..."

"சொல்லுங்க சார்!"

"அன்னைக்கு கோவில்ல நடந்த சம்பவத்துக் காக நான் உன்கிட்ட ஸாரி கேட்டுக்கறேன்!"

"என்ன சார் இது? நீங்க எதுக்கு என்கிட்ட ஸாரி கேக்கறீங்க?"

"அவங்க பத்மாவதி மேடத்தோட பேத்தி. ஃபாரின்லேர்ந்து வந்திருக்காங்க. தெரியாமப் பேசிட்டாங்க."

"சரி... அதுக்காக நீங்க ஏன் மன்னிப்பு கேக்கணும்? கேக்க வேண்டியது அவங்க. முதலாளியா இருக்கறதால... சம்பளம் வாங்கற வங்க எல்லாம் அடிமைன்னு நினைச்சிட்டாங்க போலிருக்கு. அப்பப்பா... என்ன பேச்சு பேசிட்டா..."

அவளின் கோபத்தை ரசித்த கார்த்திகேயன் வாய்விட்டு சிரித்தான்.

அந்த நேரம்...

ஜீப்பில் எஸ்டேட்டை சுற்றிக் காண்பித்துக் கொண்டிருந்த கதிரும்... அவன் பக்கத்தில் அமர்ந்திருந்த அஸ்மிதாவும் மற்றவர் அறியாமல், அவர்கள் இருவரையும் பார்த்து விட்டனர்.

கதிருக்குள் அருவிப் பொங்கியது.

அஸ்மிதாவுக்குள் எரிமலை வெடித்தது.

## 10

திடுமென வந்திறங்கியவனை பார்த்து முதலில் அடையாளம் புலப்படவில்லை பத்மாவதிக்கு.

"என்னைத் தெரியலியா பெரியம்மா! நான் தான் ரஞ்சித்!"

வாட்டசாட்டமாய், அழகாய், மெருகேறிய நிறத்துடன் பளிச்சென்றிருந்தவனை... வியப் பாய் பார்த்தாள்.

"ரஞ்சித்... ரஞ்சித்தா நீ? என்னடா திடீர்னு வந்து குதிச்சு ஆச்சர்யப்படுத்தறே? நீ வருவேன்னு ஒரு போன் கூட பண்ணலியே!"

"நீங்க ஆச்சர்யப்படணும்னு தான் பெரியம்மா! அப்புறம்... நீங்க சந்தோஷப்படற மாதிரி இன்னொரு விஷயமும் சொல்லப் போறேன்!"

"என்னப்பா அது? ஸ்வீட் மேல ஸ்வீட்டா தர்றே... பார்த்து... உடம்பு தாங்காது... சுகர் படுத்துது... உட்காரு!"

### கரு கரு கூந்தலுக்கு...

தேங்காய் பால் தயாரித்து. அதனை நன்கு சுண்ட காய்ச்சினால் நெய் போன்ற வாசனை வரும். தண்ணீர் சத்து மறைந்து எண்ணெய் மட்டும் மீதி இருக்கும். இதனை துணியில் வடிகட்டி பிழிந்தால் வெகு சுத்தமான தேங்காய் எண்ணெய் கிடைக்கும். இந்த எண்ணெயை தொடர்ந்து 48 நாட்கள் தலைக்கு தடவி வந்தால், கூந்தல் கருமையாக நீண்டு வளரும்.

- ராஜிராதா. திருச்சி.

"அட... பெரியம்மாவுக்குக் கூட காமெடி வருதே? இனிமேல் நான் இங்கேயே இருந்து... எஸ்டேட்டை கவனிச்சுக்கப் போறேன்!"

"நிஜமாவா சொல்றே ரஞ்சித்... சந்தோஷமா இருக்குப்பா! இனி நான் நிம்மதியா மூச்சு விடலாம் இல்லையா?" பத்மாவதிக்கு மனசு லேசானதுப் போல் இருந்தது.

"தாராளமா... அஸ்மிதா எங்கே பெரியம்மா? இங்கே வந்திருக்கிறதா... நீலிமா அக்கா சொன்னாங்க!"

அவன் சொல்லி வாயை மூடுவதற்குள், ஹாலுக்குள் பிரவேசித்த அஸ்மிதா... அங்கு அமர்ந்திருந்த புது நபரை நெற்றி சுருங்கப் பார்த்தாள்.

"வா அஸ்மிதா..." என்றாள் பாட்டி.

ரஞ்சித் மலைத்துப் போனான்.

'சிறு வயதில் பார்த்த அஸ்மிதாவா இது? இத்தனை அழகும், வனப்பும் எனக்கே எனக்கா?'

"வாவ்... அஸ்மியா இது... என்னால நம்பவே முடியலே. போட்டோவுலக் கூட அழகாதான் இருந்தா... ஆனா, நேர்ல பேரழகியா இருக்கியே...!"

சிறுப் புன்னகையை தவழவிட்ட அஸ்மிதா, "நீங்க யாருன்னு..."

"என்ன அஸ்மி இப்படியொரு கேள்வியக் கேட்டுட்டே? என்னைப் பார்த்ததும்... ஹேய் ரஞ்சித்னு கையப் புடிச்சு குலுக்குவேன்னுல்ல நினைச்சேன்?"

"ரஞ்சித்? ஓ... ரஞ்சித்... ஞாபகம் வந்துடுச்சு... ரஞ்சித் மாமா தானே? எப்பவோப் பார்த்தது... ரொம்ப வருஷமாய்டுச்சில்லே?" என்றாள் சாதாரணமா.





"உங்கம்மா சொன்னாங்க... மூலிகை ஆராய்ச்சி பண்றதாய்... எதுக்கு அஸ்மி வேண்டாத வேலை? லைஃபை நல்லா என்ஜாய் பண்ணு! ஸ்கேட்டிங் பண்ணு. ரைடிங் போ! கோல்ஃப் விளையாடு. கேரளாவுக்குப் போய் மூலிகை பாடி மசாஜ் பண்ணிக்க. இன்னும் தகதகன்னு இருப்பே!" கண்கள் அவள் அழகை மேய்ந்தது.

"யோசிக்கிறேன்! பாட்டி... கதிர் இன்னும் வரலையா?"

"இதோ வந்துட்டே இருக்கேன் மேடம்!" என்றவாறு உள்ளே நுழைந்தான் கதிர்.

"புறப்படலாமா?"

"என்ன அம்மு... சாப்பிடவே இல்லே... கிளம்பறேங்கறே"

"கதிர் கூட ஹோட்டல்ல சாப்பிட்டுக்கறேன் பாட்டி..." சொல்லி விட்டு வேகமாய் வெளியேறினாள்.

"என்ன பெரியம்மா... அஸ்மி சாப்பிடாமப் போகிறா... அது யாரு கதிர்? அவன் கூட ஏன் போகிறா?"

"அவ ஒண்ணு நினைச்சா... மாத்தறது கஷ்டம். கதிர் நம்ம எஸ்டேட்ல மேனேஜரா வேலை பார்க்கிற பையன். அம்மு ஆராய்ச்சி பண்றா இல்லியா? அதுக்கான மூலிகைகள் கிடைக்கிற இடங்களுக்கு அழைச்சிட்டுப் போய்... உதவியா இருக்கிறான்."

"ஓ..." என்றவனின் முகம் சோர்ந்துப் போனது.

♥ ♥ ♥

பொன்னம்மாவும், பீதாம்பரமும் பரிமாற... அவசரமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் கார்த்திகேயன். தொழிற்சாலைக்கு சீக்கிரம் போயாக வேண்டும்.

சாப்பிடுவதற்காக மாடியிலிருந்து இறங்கி வந்த ரஞ்சித் முகம் மாறினான்.

தோட்டத்தில் நடமாடிக் கொண்டிருந்த பத்மாவதியிடம் சென்றான்.

"பெரியம்மா..."

"என்ன ரஞ்சித்... லன்ச் சாப்பிட்டியா?"

"இங்கே என்ன நடக்குது பெரியம்மா?"

"எதைப் பத்தி கேக்கறே?"

"நான் இன்னும் சாப்பிடலே... ஆனா, நம்ம டைனிங்ல உட்கார்ந்து ஒருத்தன் இட்டமா சாப்பிட்டுக்கிட்டிருக்கான். யாரவன்? இந்த உரிமைய அவனுக்கு யார் கொடுத்தது?"

"அவன் பேரு கார்த்திகேயன். மேனேஜர் தான்...!"

"ஓ... நீலிமா அக்கா சொன்னாங்களே... அவனா இவன்? சரி. அதுக்காக? அவனுக்கு மட்டும் என்ன ஸ்பெஷலா நமக்கு சரிசமமா மாளிகையில சாப்பாடு? வெளியே சாப்பிட்டுக் கட்டுமே!"

"உங்க பெரியப்பா கொடுத்த சலுகை. சாப்பாடு விஷயத்துல நாம கண்டிப்பு காட்ட வேண்டாம். சாப்பிடட்டும்!"

"நீங்க ரொம்ப இடம் கொடுக்கறீங்க பெரியம்மா. கொஞ்சம் தட்டிக் கொடுத்தால் தான் சரிப்படும். நான் பார்த்துக்கறேன்!" என்றவன் பதிலுக்குக் கூட காத்திராமல் உள்ளேச் சென்றான் வேகமாய்.

சாப்பிட்டு விட்டு கையைக் கழுவியவன் எதிரே சென்று நின்றான்.

தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த புதியவனை இவனும் நெற்றி சுருங்கப் பார்த்தான்.

"சார்... என் பேரு ரஞ்சித்! இந்த வீட்டு முதலாளி மாதிரி... நான் சாப்பிடலாமா?"

"வணக்கம் சார்!" என்றான் அவன் சொன்னதன் அர்த்தம் புரிந்தும் புரியாமலும்.

"அப்படியென்ன சார் அவசரம்... நான் சாப்பிடறதுக்கு முன்னாடி நீங்க சாப்பிடறீங்க?"

கூசிப்போனான் கார்த்திகேயன்.

"ஸ... ஸாரி சார்!"

"இருக்கட்டும் பரவாயில்லே... இனிமேல் சாப்பாட்டுக்கும் சேர்த்து சம்பளம் போட்டுக் குடுத்துடறேன்... நாளைலேர்ந்து வெளியி லேயே சாப்பிட்டுக்குங்க!"

கன்னத்தில் பளாரென அறைந்ததுப் போலி ருந்தது.

"சரி... சார்!" என்றான் தன்னைக் கட்டுப் படுத்திக்கொண்டு!

♥ ♥ ♥

## 11

சொல்லிக்கிட்டு! என் அம்முவை உன்னைத் தவிர வேற யாரால பூ மாதிரி வெச்சுக்க முடியும்? போ... போய் ஆகவேண்டியதைப் பாரு!"

♥ ♥ ♥

இரவு நேர குன்னூர் கெட்டியான பனியில் உறைந்திருந்தது.

உயர்தர ரெஸ்டாரண்ட் ஒன்றில் எதிரெதிரே அமர்ந்திருந்தனர் கார்த்திகேயனும், கதிரும். மேசையில் ஏகப்பட்ட உணவு வகைகள் பீங்கான் தட்டுக்களால் மூடப்பட்டு அமர்ந்திருந்தது.

ஸ்பீக்கர் வழியே சன்னமான வயலின் இசை வழிய... உறுத்தாத ஒளியில் விளக்குகள்!

"என்ன கதிர்... 'சந்தோஷமா யிருக்கேன்... உன்கிட்ட ட்ரீட் டோட ஷேர் பண்ணிக்கணும்வா'ன்னு கூப்பிட்டுட்டு பேசாமலே இருந்தா என்ன அர்த் தம்?"

"என்னன்னு நீதான் கண்டுபிடியேன் பார்ப் போம்!"

கைகளைக் கோர்த்து தாடைக்கு முட்டுக் கொடுத்து சில கணங்கள் அவனையே பார்த்தவன் புரிந்துவிட்ட தினுசில் சிரித்தான்.

"எப்பவுமே... எந்த விசேஷமாய் இருந்தாலும் வீட்டுக்கு வரவழைச்சே விருந்து குடுப்பே! இப்ப புதுசா ரெஸ்டாரண்ட்ல தர்றே! ஸோ, இது அனுவுக்கே தெரியாத சீக்ரட்! சார் யாரையாச்சும் லவ் பண்றீங்களோ?"

"வாவ்! எப்படி கெஸ் பண்ணினே கார்த்தி?"

"முகத்திலே வழியறதை வச்சிதான்!"

"கிண்டலா?"

"சரி... யாருன்னு சொல்லேன் அந்த அதிர்ஷ்டசாலிய?"

"ம்ஹூம்...



நான்தான் அதிர்ஷ்டசாலி கார்த்தி!"

"அட!"

"நிஜமாதான் கார்த்தி! ஒவ்வொரு ஆணுக்கும் தன் மனைவியப் பற்றிய கனவு இருக்கும். அதுல முக்கியமா அழகான மனைவியா வரணும்னு ஆசைப்படாத ஆம்பளையே இருக்க மாட்டாங்க. என் தேவதை பேரழகி..."

"........?!"

"நான் கற்பனையே செய்துப் பார்க்காத அளவுக்கு அழகி. பாலோட ரோஜாப்பூவை பிசைஞ்சு பிரம்மன் வடிச்ச சிலை!"

"........?!"

"அரேபிய குதிரை மாதிரி கம்பீரம். குழந்தைத்தனம், குணம் எல்லாமே அடங்கிய அற்புதமான பெண்!"

"........?!"

"எட்டாத உயரத்திலே இருக்கிற அந்தஸ்து. ஆனாலும் அதையெல்லாம் துச்சமா நினைச்சு என்கிட்டே பழகறா...!"

"தலை வெடிக்கறதுக்குள்ளே யாருன்னு சொல்லிடேன்!"

"இதையும் நீயே கெஸ் பண்ணு!"

"வெளியூரா?"

"ம்ஹூம்... இந்த ஊரேதான்!"

"நீ சொல்ற அளவுக்கு... அத்தனை தகுதிகளோட... ம்ஹூம்... தெரியல... நீயே சொல்லிடு!" சிக்கன் சூப்பை பருகியபடி சொன்னான்.

"சொன்னா ஆச்சர்யப்படுவே... ஏன்னா அவளை உனக்கு நல்லாவேத் தெரியும்."

"பீடிகை வேண்டாம் கதிர்... சொல்லிடு!"

"அஸ்மிதா!" என்றான் சிரிப்பும் வெட்கமுமாய்!

வாயிலிருந்த சூப் புரைக்கேறி... வெளியே சிதறின.

திகைப்பின் உச்சத்தில் இருந்தான் கார்த்திகேயன்.

"என்ன சொல்றே... கதிர்? அஸ்மிதாவா? ஐ கான்ட் பிலீவ்!"

"என்னாலயே நம்ப முடியல... ஆனா, அதுதான் நிஜம்!" என்று அவர்களுக்குள் நடந்த உரையாடல்களில் சிலதைச் சொன்னான்.

"எல்லாம் சரி கதிர்! அவ உன்கிட்ட தான் காதலிக்கறதா சொன்னாளா?"

"நேரடியாச் சொல்லலே... ஆனா, அவ என்னை நேசிக்கிறது நிஜம்!"

அதற்குமேல் அவனை கேள்விக் கேட்டு குடைய விரும்பாமல் வாழ்த்து தெரிவித்து விட்டு, வேலை இருப்பதாகக் கூறி பிரிந்துச் சென்றான்.

அவனால் நம்ப முடியவில்லை!

'எப்படி சாத்தியம்? அஸ்மிதாவா? அவள் சாதாரணமாய் பேசியதை கதிர் தனக்கு சாதகமாய் கற்பனை செய்து கொண்டானோ?'

காரை ஒரு ஓரமாய் நிறுத்திவிட்டு, சன்னமான ரோட்டோர விளக்கொளியில், பயமுறுத்துவதுப் போல் நகர்ந்த பனிப்புகையினுள் புகுந்து நடந்தான்.

பழக்கப்பட்ட மனிதவாசனையால் கட்டுண்டு, நாய்கள் குரலடங்கி அகன்றன.

பலதையும் நினைத்து கவலைப்பட்டான்.

வீட்டிற்கு வந்தபின்பும் நினைவுகள் அலைக்கழித்தன. விரயமாகின இரவு!

♥ ♥ ♥

அன்று அஸ்மிதாவின் பிறந்த நாள்!

பத்மாவதி விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தாள்.

பத்மாவதி பவனம் சீரியல் பல்பு ஆடைகளை அணிந்து பகட்டாய் இருந்தது.

பிறந்த நாளையொட்டி எஸ்டேட், தொழிற்சாலைகளில் பணிபுரியும் அத்தனை வேலையாட்களுக்கும், சாப்பாடும், உடையும் தரப்பட்டன.

நகரின் முக்கியஸ்தர்களும், நண்பர்களும், உறவினர்களுமாய் மாளிகையில் குழுமியிருந்தனர்.

தங்கச்சரிகையில் வைரக்கற்கள் பதிக்கப்பட்ட, ஸ்பெஷலாய் ஆர்டர் செய்து நெய்யப்பட்ட பட்டுப்புடவையில் தெய்வீக அழகோடு வளைய வந்தாள் அஸ்மிதா.

ரஞ்சித் அவளுக்கு வைர நெக்லஸ் பரிசளித்தான்.

கதிர் ஆயிரம் கனவுகளோடு பூங்கொத்து தந்தான்.

கம்பீரமாய் கண்களை சுழலவிட்ட அஸ்மிதா...

சற்று தொலைவில்... விழியகலாது இவளையே துளைப்பதுப் போல் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேயனைப் பார்த்து...

முதன் முதலாய் ஆடிப்போனாள்.

## 12

ஃப்ளோரல் பிரின்ட்டட் சிந்தடிக் டாப்பும், காட்ராய் பேன்ட்டும், விரித்து விட்ட கூந்தலுமாய் அஸ்மிதா பாலிவுட் பொம்மை போலிருந்தாள்.

குளிருக்கு இதமாய் மசாலா டீயை சுவைத்துக் கொண்டிருந்தவள், பாட்டியின் பேச்சைக் கேட்டு, டீ புரைக்கேறியது.

சமாளித்து, "இப்ப என்ன சொன்னே பாட்டி?" என்று கேட்டாள்.

"ரஞ்சித் கிட்ட ஏன் சரியாவே பேச மாட்டேங்கறே? அவன் எங்க கூப்பிட்டாலும் போக மாட்டேங்கறே?"

"அதுக்கப்புறம் ஏதோ சொன்னியே!"

"என்னைக்கிருந்தாலும் உனக்கு அவன் தான்... பார்த்து நடந்துக்கன்னு சொன்னேன்!"



"ஐ கான்ட் அன்டர்ஸ்டான்ட்! வாட் டு யூ மீன்?"

"ரஞ்சித் உன் வருங்கால கணவன் அம்மு. அவனுக்கு மரியாதைக் கொடு. ரொம்ப வருத்தப்படறான்!"

"வாட்? ரஞ்சித் என் ஹஸ்பன்டா? என்ன பாட்டி உளர்றே... இது யார் எடுத்த முடிவு?"

"உன் அம்மா, அப்பா, நான் எல்லாரும் சேர்ந்து எடுத்த முடிவு. உன் படிப்பு முடிஞ்சதும் கல்யாணம். அடுத்த மாசம் நிச்சயதார்த்தம்!"

அஸ்மிதா திகைப்பில் விழிகள் விரித்தாள்.

"என் பர்மிஷன் இல்லாம எப்படி முடிவுப் பண்ணுவீங்க?"

"நீ சின்னப் பொண்ணு! என்னத் தெரியும் உனக்கு? என்னைப் பெத்தவங்க ஏற்பாடு பண்ணின மாப்பிள்ளையதான் நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். நாங்க பார்த்து முடிவுப் பண்ணினவரைதான் உங்கம்மா கட்டிக்கிட்டா. அது நம்ம பரம்பரை வழக்கம் அம்மு! பெண்கள் தன்னிஷ்டப்படி முடிவெடுக்க முடியாது!"

"அதுக்காக ரஞ்சித்தையா... நோ!"

"ஏன் அம்மு... என்ன குறைச்சல் அவனுக்கு? அழகாயிருக்கான். படிச்சிருக்கான். உன்னை மாதிரி வெளிநாட்டு வாசம் பண்ணியிருக்கான். எல்லாத்துக்கும் மேல உனக்கு தாய் மாமன் உறவு முறை வேணும். என்னோட தத்துப் பிள்ளை. அந்தஸ்து இருக்கு. இதெல்லாத்தையும் விட... ரஞ்சித்தை கல்யாணம் பண்ணிக்கிட்டா... நீ எப்பவும் இங்கேயே, என் கூடவே இருக்கலாம். என்னைத் தனியா விட்டுட்டுப் போய்டாதே அம்மு... வேண்டாம்னு மறுத்திடாதே!" பேசிக் கொண்டே வந்தவளின் குரல் உடைய... கண்கள் கசிந்தன.

அலுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"போ... பாட்டி! எதெதுல வற்புறுத்தறதுன்னு விவஸ்தை இல்லையா... சே!" குஷன் சேரிலிருந்து எழுந்தவள்... பத்மாவதி "அம்மு... அம்மு" என்று அழைக்க.. அசட்டை செய்து வெளியேறினாள்.

சான்ட்ரோ காரில் ஏறி அமர்ந்து... அவளே ஓட்டிச் சென்றாள் வேகமாக.

பின்னாலேயே ஓடி வந்த பத்மாவதி பதறினாள்.

"ஐய்யோ.... அம்மு... காரை எடுத்துக்கிட்டு எங்கே போறே? இந்த ஊர்ல கார் ஓட்டறது ரிஸ்க் ஆச்சே... என்னப் பண்ணுவேன்? எங்கேப் போனாள் அந்த கார்த்திகேயன்!"

அஸ்மிதா மனம் போன போக்கில் வளைவு நெளிவுகளில், கொண்டை ஊசி வளைவுகளில் மிக வேகமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

உள்ளம் உலைக்களமாய் கொதித்தது.

'ரஞ்சித்தைப் போய் எனக்கு... சே! என்ன அவசரம் எனக்கு? எதற்கிந்த கல்யாணப் பேச்சு?'

நினைத்தாலே கசந்தது.

'பாட்டி சொன்னதுப் போல் அவனுக்கு எந்த குறையும் இல்லைதான்! ஆனால், அவனை பார்த்த நாளிலிருந்தே... மனசுக்குள் ஒட்டவில்லையே! அவனை கல்யாணம் பண்ணிக்கிட்டு... ஒரே ஒருநாள் கூட வாழ முடியாதே! பாட்டிதான் ஏதோ பேசறாங்கன்னா... மம்மியும், டாடியும் எப்படி சம்மதிச்சாங்க?'

உடனே செல்லில் அம்மாவை தொடர்புக் கொண்டாள்.

"ஹாய் ஸ்வீட்டி?"

"அப்புறம் கொஞ்சிக்கலாம். என்ன நினைச்சிட்டிருக்கே உன் மனசுல?"

"என்ன டார்லிங்... ஹாட்டா இருக்கியா?"

"கேட்டதுக்கு பதில் சொல்லு மம்மி!" காரை ஓரமாய் நிறுத்தினாள்.

"என்ன கேட்டே?"

"ரஞ்சித்தை எனக்கு கல்யாணம் பண்ணணும்னு பாட்டி சொல்றாங்க... என்னாச்சு உங்களுக்கெல்லாம்?"

"ஏன்... நல்ல முடிவுதானே? பாட்டி பாவம்டா... ஹார்ட் பேஷண்ட் வேற! அவங்களுக்கு எதிரா எதுவும் பேசிடாதே அஸ்மி!"

"மம்மி... ப்ளீஸ் அன்டர்ஸ்டான்ட் மீ! ரஞ்சித் எனக்கு வேணாம்."

"ஏன்?"

"பிடிக்கலே!"

"அதான் ஏன்? ரீசன் இருக்கணுமே!"

"தெரியலே..."

"வேற யாரையாவது நீ..."

".......?!"

உடனடியாக அவளால் இல்லை என்று மறுக்க முடியாதபடி குழப்பம். இதயத்திற்குள் மசமசப்பாய் ஒரு உருவம் நுழைந்ததுப் போல் அவஸ்தை!

'காதலா... எனக்குள்ளா... யாரை?'

"சொல்லு அஸ்மி... யாரையாவது லவ் பண்றியா?"

"சான்ஸே இல்லை. ஆனா, ரஞ்சித் வேண்டாம் மம்மி!"

"அவசரப்படாதே டார்லிங்... நல்லா யோசி! பாட்டியப் பத்தி நினைச்சுப் பார். உனக்கு அந்த

ஊர்ல அவனை விடவும் பொருத்தமா மாப்பிள்ளை கிடைக்க மாட்டாங்க. ரஞ்சித் கிட்ட நல்லா பேசிப் பழகு... பிடிக்கும். அடுத்த மாசம் நானும் டாடியும் அங்கே வர்றோம்."

மேற்கொண்டு பேசப் பிடிக்காமல் செல்லை ஆஃப் பண்ணியவள்... மறுபடி வேகமாய் ஓட்டினாள்.

எஸ்டேட்டின் பசுமையோ, யூகலிப்டஸ் மரத்தின் தைல வாசமோ... அவளைக் கவரவில்லை.

திடீரென... பிரேக் போட்டாள்.

இடது பக்கம் மேடான பகுதியில் வீற்றிருந்த அந்த வீட்டிலிருந்து கார்த்திகேயன் சிரித்தபடி வெளியே வர... ஒரு இளம் பெண் வாசல் வரை அவனுக்கு கையாட்டி விடை கொடுத்தாள்.

அவள்...?

'அன்று கோவில் வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்தாளே... அவள்தானே இவள்?'

நினைவில் வந்து உறுதிப்படுத்தியதும் எரிச்சல் மண்டியது. கோபம் பொங்கியது.

இவள் காரை பார்த்துவிட்ட கார்த்திகேயன் வேகமாய் இவளை நோக்கி வந்தான்.

"மேடம்... என்ன இது... நீங்கப் போய் காரை ஓட்டிக் கொண்டு?"

"......?!" முறைத்தாள்.

"ஒரு போன் பண்ணினா... நான் வந்திருப் பேனே? கொண்டை ஊசி வளைவுகளில் கார் ஓட்டுவது ஆபத்து."

"அதிருக்கட்டும்... வேலை நேரத்திலே காதலிக்கவா சம்பளம் தர்றோம்!"

"யூ ஆர் ராங் மேடம். இது லன்ச் அவர். சாப்பிடப் போனேன்."

"எங்கே? அது ஹோட்டலா, லாட்ஜா?"

முறுக்கேறிய கோபத்தை அடக்கினான் கார்த்திகேயன். கோபமும், எரிச்சலுமாய் ஜொலித்த அவள் முகத்தை நெற்றி சுருக்கி இமைக்காமல் பார்த்தான்.

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல் காரை உசுப்பி புறப்பட்டாள் அஸ்மிதா.

♥ ♥ ♥

'சே... எனக்கேன் இவ்வளவு கோபம் வருகிறது? ரஞ்சித்தாலா? கார்த்திகேயனாலா? என்னை மீறி என்ன நடந்து விடப்போகிறது? எதற்காக ரஞ்சித்தை பற்றி நினைத்து என் சந்தோஷத்தை கெடுத்துக் கொள்ள வேண்டும்?

இரண்டாவது இந்த மேனேஜர் கார்த்தி! அவன் யாரிடம் பேசினால் எனக்கென்ன? லன்ச் அவர். அவன் எங்கே வேண்டுமானாலும் சாப்பிட்டு விட்டுப் போகட்டுமே! கூல் அஸ்மி... கூல்டா!'

உள்ளம் கொஞ்சம் சமாதானமாக, காரை மாளிகை நோக்கி திருப்பினாள்.

மாளிகையில்... ரஞ்சித் காரை ஸ்டார்ட் செய்துக் கொண்டிருக்க... இவளைப் பார்த்ததும் காரை விட்டு இறங்கினான்.

"ஏய் அஸ்மி... என்ன நீ... இப்படிப் பண்ணிட்டே?"

"........?!"

"பதிலே பேசாமப் போனா என்ன அர்த்தம்?"

"யூ ஷட்டப்னு அர்த்தம்!"

"இதோ பார்... ஒழுங்கா பதில் சொல்லிட்டுப் போ. எதுக்காக நீயே டிரைவ் பண்ணிட்டுப் போனே? பெரியம்மா ரொம்ப பயந்துட்டாங்க தெரியுமா?"

"........?!"

"உன்னை தேடித்தான் நானும் கிளம்பி னேன்."

"நான் ஒண்ணும் சின்னக் குழந்தையில்லை. திரும்பி வர வழி தெரியும்" என்றபடி தன்னறைக்குள் நுழைந்தாள். கூடவே அவனும் நுழைய முகம் சுளித்தாள் அஸ்மிதா.

"ஏன் அஸ்மி... எப்பவும் என்கிட்ட ரஃப்பா நடந்துக்கறே? நான் உன் மேல எவ்வளவு லவ் வச்சிருக்கேன் தெரியுமா?" இயல்பாய் அவள் இரு தோள்களிலும் கை போட்டு இழுத்தான். அவனிடம் மதுவின் நெடி.

ஜிவ்வென்று ஆத்திரம் ஏற, அவன் கைகளை தட்டி விட்டாள்.

"அஸ்மி... என்ன இது?"

"ப்ளீஸ்... அவுட்!"

"நான் உன்கிட்ட பேசணும். உனக்கும் எனக்கும்..."

"நவ் யு வில் ப்ளீஸ் கோ...!" கண்ணீரும், கோபமும் போட்டிப் போட அழுத்தமாய் சொன்னாள்.

ரஞ்சித் கொஞ்சம் ஆடித்தான் போனான். வெளியே வந்தான்.

படாரென்று அறைக்கதவை சாத்தினாள்.

## உடல் வலிமையை அதிகரிக்கும் கிஸ்மிஸ் பழம்

நூறு கிராம் கிஸ்மிஸ் பழத்தை சுத்தம் செய்து, பாட்டிலில் போட்டு அதில் எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு தண்ணீர் கலந்து இரவில் ஊற வைத்துவிட்டு, காலையில் எழுந்தவுடன் தண்ணீருடன் கிஸ்மிஸ் பழங்களை எடுத்து சாப்பிட வேண்டும். இப்படி நாள் தோறும் செய்து வந்தால் உடல் வலிமையில் அற்புதமான அபிவிருத்தி ஏற்படும்.

- கே.சுதர்ஷன், தூத்துக்குடி.

## 13

நான்கைந்து நாட்களாக அஸ்மிதா பாட்டியிடம் சரிவர பேசவதில்லை. காரணம் புரிந்தாலும், அது தேவையில்லாத வீம்பு என்றே கருதினாள் பத்மாவதி.

ரஞ்சித், அஸ்மிதா திருமணம் நடந்தே ஆகவேண்டும்... என்பதில் உறுதியாக இருந்தாள். 'பேத்தியை சமாதானப் படுத்தப் போய்... அதை அவன் தனக்கு சாதகமாக்கிக் கொண்டால்?'

பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தவளின் முன் வந்து நின்றான் கார்த்திகேயன்.

"மேடம்..."

"ம்... என்ன?"

சுற்றிலும் கண்களை ஓடவிட்டான். வேலை யாட்கள் யாருமில்லை.



"ஒரு முக்கியமான விஷயம் பத்தி பேச வந்தேன்."

"சொல்லு!"

"உங்க பேத்திக்கும், ரஞ்சித்துக்கும் கல்யா ணம்னு கேள்விப்பட்டேன்!"

திகைப்புடன் ஏறிட்டாள்.

"இது உனக்கெப்படி?"

"எப்படியோ தெரியும். அதுவல்ல முக்கியம். இந்த கல்யாணம் நடக்கக் கூடாது"

"எ...ன்...ன...து?"

"உங்க பேத்தி நல்லா இருக்கணும்னு நினைச்சீங்கன்னா ரஞ்சித் மாப்பிள்ளையாகக் கூடாது."

"ஏய்... என்ன மிரட்டறியா? என்கிட்டயே இவ்ளோ தைரியமா நின்னு பேச... யார் உனக்கு உரிமைக் கொடுத்தது? என்ன திட்டம் இருக்கு உன் மனசுல? என்னை வேதனைப் படுத்தின தெல்லாம் போதாதா?"

"சத்தமா பேசாதீங்க மேடம். வேலைக் காரங்க காதுல விழுந்துடப் போகுது. இந்த கல்யாணம் நடக்கக் கூடாது. மீறி ஏற்பாடு பண்ணீங்கன்னா... தன்னாலேயே நின்னுப் போய்டும். அப்புறம் சில உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும். உங்க மனசும், உடம்பும் பாதிக்கும். அதுக்காக தான் சொல்றேன்... வேண்டாம்!" அழுத்தம் திருத்தமாய் சொல்லி விட்டு போய் விட்டான்.

பத்மாவதி பேயறைந்த நிலையில் அமர்ந்தி ருந்தாள்.

♥ ♥ ♥

புறப்பட்ட அஸ்மிதாவின் எதிரே வந்து நின்றாள் பத்மாவதி.

"கதிர்... அலுவல் விஷயமாய் கோயமுத்தூர் போயிருக்கான். கார் ஓட்ட கார்த்திகேயனை வரச் சொல்லவா?"

"தேவையில்லை... குன்னூர் ரோடெல்லாம் அத்துப்படி... நானே டிரைவ் பண்ணிக்கறேன்!"

"என்ன அஸ்மி பிடிவாதம் இது? நான் எப்படி தனியா அனுப்புவேன்? ரஞ்சித் கூடயா வது போய்ட்டு வா!"

"ப்ளீஸ் பாட்டி... என்னை சுதந்திரமா விடேன். என் படிப்பு விஷயம். கான்ஸன்ட் ரேஷன் முக்கியம். இன்னும் நிறைய மூலிகை சேகரிக்கணும். வர்றேன்... பை!" ஜீன்சும், டி ஷர்ட்டும் அணிந்திருந்த அஸ்மிதா கம்பீரமாய் காரை நோக்கி நடந்தாள்.

பத்மாவதி கவலையாய் நோக்கினாள்.

♥ ♥ ♥

**சோ**கையாய் ஒளிர்ந்துக் கொண்டிருந்த சூரியனை மூன்று மணிக்கே பேக்கப் பண்ணி அனுப்பி விட்டு கருமேகங்கள் பாய் விரித்தி ருந்தன.

ஐந்து மணிக்கெல்லாம் நன்கு இருட்டி விட... இடியும், மின்னலுமாய் பேய் மழைக் கொட்டியது.

பத்மாவதிக்கு நேரம் ஆக... ஆக பயம் அதிகரித்தது. எப்போதும் நான்கு மணிக்கெல் லாம் வீடு திரும்பி விடுவாள் அஸ்மிதா. அன்று இன்னமும் வரவில்லை. பயத்தில் துடித்த இதயம் வாய் வழியே பொத்தென வந்து விழுந்து விடும்போல!

ரஞ்சித்துக்கு போன் பண்ணி... பண்ணி ஓய்ந்துப் போனாள். ஸ்விட்ச் ஆஃப் என்றே வந்தது.

அவன் இப்போது... ஊட்டியில், ஸ்டார் ஓட்டலில் மதுவும், மாதுவுமாய் உற்சாகத்தில் கரை புரண்டிருந்தான். யார் தொந்தரவும் கூடாதென்று செல்போனை அணைத்து வைத்திருந்தான்.

கார்த்திகேயனுக்கு முயற்சித்தால் 'நாட் ரீச்சபிள்' என்றே வந்தது. அஸ்மிதாவின் போனும் அப்படியே!

வேலையாட்களை அனுப்பி நாலா பக்கமும் தேடச் சொன்னான்.

அவளைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக் கவில்லை. எந்த ஏரியாவுக்கு சென்றிருப்பாள் என்றும் யாருக்கும் தெரியவில்லை.

ஏழு மணிக்கு மாளிகைக்கு வந்த கார்த்திகேயன் மேல் எரிந்து விழுந்தாள்.

"என்ன ஆச்சு... உன் பாழாப்போன போனுக்கு? எத்தனை முறை பண்ணுவேன்?"

"ரீச்சாகியிருக்காது மேடம்! நல்ல மழை வேற... டவர் கிடைக்காது. என்ன விஷயம் மேடம்?"

"அஸ்மிதா இன்னும் வீடு திரும்பல"

"மைகாட்... மணி ஏழாயிடுச்சே? கதிர் வேற இல்லே... யார் கூடப் போனாங்க?"

"அவளேதான் டிரைவ் பண்ணிட்டுப் போனா!"

"அடடா! இந்த மழையில கார் எங்கேயா வது நின்னுட்டிருக்கும்... பயப்படாதீங்க மேடம். நான் பத்திரமா அழைச்சிட்டு வந்திடறேன்!" அதே வேகத்தில் வெளியேறி னான்.

காரை வேகமாகவும் கவனமாகவும் ஓட்டிச் சென்றான். கதிருக்கு போன் பண்ணி, இதுவரை மூலிகை சேகரித்த இடங்களை கேட்டு தெரிந்துக் கொண்டான்.

'அநேகமாய் பர்லியாறு அருகில் இருக்கும் காட்டுப் பகுதிக்கு சென்றிருக்கக் கூடும். நேற்று என்னிடம் போனில் பேசியபோது அப்படித் தான் சொன்னான்' என்ற உபயோகமான தகவலையும் சொன்னான்.

அவன் சொன்னது உண்மை! பர்லியாறின் சாலையோரமாய் அஸ்மிதாவின் கார் சீறும் மழையில் நனைந்துக் கொண்டிருந்தது.

சுற்றிலும் பாறைகளும், மரங்களும் வீற்றி ருக்க... ஒரேயொரு குறுகியப் பாதை இறக் கத்தை நோக்கிச் சென்றது. டார்ச்சின் வெளிச்சத்தில் இறங்கியவனை செம்மண் வழுக்கியது. கவனமாய் இறங்கினான். விதவிதமான சத்தங்களூடே... சரசரவென பாம்பு நகரும் சத்தமும் துல்லியமாய் கேட்டது.

'இந்தப் பெண் எங்கேப் போய் மாட்டிக் கொண்டாள்?' கவலையுடன் தேடினான்.

"அஸ்மிதா... அஸ்மிதா" என்று குரல் கொடுத்தான்.

பதிலில்லை.

♥ ♥ ♥

**அ**ஸ்மிதாவின் கண்கள் பரவசமாயின. எக்கச்சக்கமான மூலிகை வகைகள்... பத்தடி இடைவெளியில் கண்ணில் பட்டுக் கொண் டேச் செல்ல... அவைகளை துல்லியமான தன் வெளிநாட்டுக் கேமராவில் படம் பிடித்துக் கொண்டும், மூலிகைகளை சேகரித்து பையில் பத்திரப்படுத்திக் கொண்டும் வேலையே கண்ணாயிருந்தாள்.

நேரம் போனதே தெரியவில்லை. பொட் டென ஒரு மழைத்துளி மேனியில் பட்டு சிதறியபோது தான் அண்ணாந்துப் பார்த்தாள். கரு கருவென மேகங்கள் வேகமாய் ஒன்று சேர்ந்தன. வாட்சைப் பார்த்தாள். மணி ஆறாகி விட்டிருந்தது. அப்பிரதேசம் நன்கு இருட்டி விட்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள். வெகுதூரம் உள்ளே வந்திருப்பதும் புரிந்தது.

தன்னையே நொந்தபடி, அவசரமாய் பேகை எடுத்து மாட்டிக் கொண்டு ஓட்டமும், நடையுமாய் விரைந்தாள். வளைந்து, நெளிந்து, மரங்களைச் சுற்றி, செடிகளை விலக்கி நடந்தவளுக்கு பாதையும் புலப்படவில்லை. சாலையும் தென்படவில்லை.

ஓரிடத்தில் இரண்டு பாம்புகள் பின்னிப் பிணைந்திருக்க... பயத்தில் நெஞ்சடைக்க... பின்பக்கமாகவே நடந்து ஒரு பாறையின் கீழ் அமர்ந்து விட்டாள்.



மழை வேகமாய் கொட்ட... காற்றும் சேர்ந்து குதியாட்டம் போட்டது. அஸ்மிதா வின் தளிர்மேனி... மழையில் நனைந்து... பனியில் வெடவெடத்தது.

யாருமற்ற தனிமை. பயத்தை வாயோடு கவ்விக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

விதவிதமான சப்தங்களும், அக்கம்பக்கத்தில் பாம்பு ஊர்ந்து செல்லும் யூகங்களும்... கண்களை இறுக மூடிக் கொண்டு, அந்த இருட்டில் சப்தம் வராமல் வெடித்தழுதாள்.

"உதவி" என்று கத்தவும் பயம். மனிதர்களுக்கு பதில் புலியோ, சிங்கமோ வந்து விட்டால்?

நேரம் கடந்தது.

எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந் தாளோ?

"அஸ்மிதா... அஸ்மிதா" என்ற குரல் கேட்டு செவிகள் விடைத்துக் கொண்டன.

யாரென்று இனம் காணமுடியவில்லை. ஆனால், அவளைத் தேடிக் கொண்டு ஆள் வந்தாயிற்று.

"ஹெல்ப்... ஹெல்ப்... நான் இங்கே இருக்கேன்!" அவளும் குரல் கொடுத்துக் கொண்டே இருந்தாள்.

அவள் குரல் வந்த திக்கை வைத்து அரை மணி நேரத்தில் அவளருகே வந்துவிட்டான்.

டார்ச் ஒளியில்... நனைந்த ரோஜாப்பூ... காற்றுக்கு ஆடுவதுப்போல் நடுங்கிப் கொண்டிருந்தாள்.

வந்திருப்பது கார்த்திகேயன் என்று புரிந்தது.

"சீக்கிரம், இங்கிருந்துப் போய்டலாம்... பாம்பெல்லாம் இருக்கு!" குரலும் நடுங்கியது.

"இதை முதல்ல போட்டுக்குங்க." தலை வரை காக்கும் தன் ரெய்ன் கோட்டை கழற்றி அவளிடம் கொடுத்தான்.

உடனே வாங்கி அணிந்துக் கொண்டாள்.

அவளிடமிருந்த லெதர்பேகை வாங்கிக் கொண்டவன், "வீட்டிற்கு போனிலாவது தகவல் கொடுத்திருக்கலாமே!" என்றான்.

"செல்போன்.... எங்கோ விழுந்து விட்டது!" என்றபடி அவன் பின்னே நடந்தவள், எதன் மீதோ கால்மோத... அவன் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

அவனும் கெட்டியாய் பிடித்துக் கொண்டு நடந்தான்.

"ஆபத்தான ஏரியா இது? தனியே வரலாமா? ஐந்து மணிக்கு மேல் ஆட்கள் நடமாட்டமே இருக்காது. சரிவானப் பகுதி! அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டு பாதையே மூடிவிடும். உங்கள் உயிரை விடவா மூலிகை முக்கியம்!" என்றவன் ஸ்தம்பித்து நின்று விட்டான்.

## 14

**மெ**ல்லிய டார்ச் ஒளியில், அவன் பயந்ததுப் போலவே நிலச்சரிவு ஏற்பட்டு பாறைகள் உருண்டு, பாதையை முழுவதுமாக மூடியிருப் பது தெரிந்தது. கொட்டும் மழையில், இரவில், இருட்டில் அதை மீறி நடப்பது புத்திசாலித் தனமல்ல என்று புரிந்தது.

அவளிடமும் சொன்னான்.

"ஐயோ... வேறு வழியில்லையா? இப்போது என்ன செய்வது?"

"யோசிப்போம்... பதறாதீர்கள்" என்றவ னுக்கு நினைவிற்கு வந்தது.

ஓரிருமுறை கார்த்திகேயன் இந்த காட்டிற்கு வந்திருக்கிறான். அப்போது மரத்தின் மீது பரண்போல் அமைத்திருந்த சிறுகுடிலை பார்த்திருக்கிறான். ஃபாரஸ்ட் ஆபீஸர் அதன் மேல் அமர்ந்து மிருகங்களை கண்காணிப் பதுண்டு.

குத்துமதிப்பாய் அது இருக்கும் இடத்தை யூகித்து திரும்பி நடந்தான். பத்து நிமிட அலைகழித்தலுக்குப் பிறகு கண்ணில் பட்டது.

"மேடம்... வேறு வழியில்லை. காலை வரை நாம் வெளியில் போக முடியாது!"

"ஐயோ... எப்படி நைட்டெல்லாம் இந்த மழையிலே, இங்கே?"

"பயப்படாதீங்க... நீங்க கொஞ்சம் தைரியமா இருந்தாலேப் போதும்" என்றவன் அவளை அந்த குடிலில் தங்க வைத்தான். மிகச் சிறிய குடில். ஒருவர் மட்டுமே உள்ளே இருக்கலாம். அஸ்மிதா மழையில் நனையாத வாறு ஏற்பாடு செய்ததே நிம்மதியைத் தர... வெளியில் அமரக்கூடிய அளவில் சிறு இடம் இருக்க கார்த்திகேயன் நனைந்தபடி அமர்ந்துக் கொண்டான்.

செல்போனில் அஸ்மிதாவை பத்மாவதி யிடம் பேசவைத்து சூழலை விளக்கினான்.

பயத்தில், அலைச்சலில், குளிரில், அஸ்மிதா உறங்கி விட்டாள்.

இரவெல்லாம் கண்மூடாமல் பாதுகாத்து குளிரில் உறைந்துப் போனான் கார்த்திகேயன்.

பொழுது புலர்ந்ததும், வேறு வழியை தேடிக் கண்டுபிடித்து வெளியில் வந்தனர்.

வீட்டிற்கு போய் பத்திரமாய்ச் சேர்த்தான்.

காரை விட்டிறங்கியவள் அவனை நேருக்கு நேர் பார்த்து, "தாங்க்ஸ்" என்றாள்.

மெல்ல புன்னகைத்தவன், "எதுக்கு மேடம் தாங்க்ஸ்? உங்களை பாதுகாக்கிற கடமை எனக்கும் இருக்கிறது!" என்றான்.

பத்மாவதி பேத்தியைப் பார்த்ததும், பாய்ந்து வந்து கட்டிக் கொண்டு அழுதாள்.

♥ ♥ ♥

**அ**ஸ்மிதாவிற்கு நல்ல காய்ச்சல், உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது. டாக்டர் தினசரி இரண்டு வேளை வந்துப் பார்த்து சிகிச்சை தந்தார். பத்மாவதி பேத்தியின் அருகிலேயே இருந்தார். நான்காவது நாள்தான் எழுந்து உட்கார்ந்தாள்.

அப்போதுதான் உறைத்தது.

'எனக்கே இவ்வளவு காய்ச்சல் வரும்போது... இரவெல்லாம் நனைந்த கார்த்திகேயனுக்கு எவ்வளவு வரும்?'

எழுந்து நடமாடியபோது கண்கள் அவனைத் தேடியது. தென்படவேயில்லை. பாட்டியிடம் கேட்கவும் தயக்கம்.

பொன்னம்மாவிடம் தான் சொன்னாள்.

"நான் எஸ்டேட் வரைக்கும் போகணும், கார்த்திகேயன் எங்கே... கார் ஓட்டணும்?"

"அவர் நாலஞ்சு நாளா வரலீங்கம்மா... கதிர் ஐயாவை வரச் சொல்லட்டுங்களா?"

"அஞ்சுநாளா வரலியா... ஏன்?"

"காய்ச்சலாம்மா!"

"சரி... நீ போ!"

'பாவம்... என்னால்தானே? அவன் மட்டும் வராவிட்டால்... பயத்திலும், மழையிலும் சுருண்டு இறந்திருப்பேன் அல்லவா? போய் பார்த்தால் என்ன? என் உயிரைக் காப்பாற்றியவனின் நலம் விசாரிப்பது மனிதாபிமானம் அல்லவா?'

பாட்டி அங்கு இல்லை என்று உறுதி செய்துக் கொண்டு அவுட் ஹவுஸை நோக்கி நடந்தாள்.

உட்புறம் தாழிடப்படாத கதவு கைவைத்ததும் திறந்துக் கொண்டது. காலிங்பெல் அடிக்கலாமா என்று சுவிட்ச்சில் கை வைத்தவள் இழுத்துக் கொண்டாள்.

ஹால் சோபாவில் குறுகி படுத்திருந்தவனைப் பார்த்தாள்.

நல்ல உறக்கத்தில் இருப்பவனை எழுப்ப மனம் வரவில்லை. அருகில் சென்றாள்.

உடல் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. உதடுகள் அதீத காய்ச்சலால் புண்ணாகியிருந்தது. அந்த நிலையிலும், களைப்பையும் மீறி களையாய் இருந்தது முகம்.

சில கணங்கள் அவனையேப் பார்த்தவள்... அவனுக்காக கவலைப்பட்டாள்.

அமைதி... தனிமை! பாவம்... இவனுக்கு உறவு என்று சொல்லிக்க யாருமில்லை என்றார்களே!

அவனுக்கு போர்த்திவிட கம்பளி ஏதாவது கிடைக்குமா என்று சுற்றிலும் பார்த்தாள். ஒரு அலமாரியைத் தவிர வேறெதுவும் இல்லை.

அதைத் திறந்தாள்.

ஒரு பக்கம் முழுக்க துணிகளும், இன்னொரு பக்கம் முழுக்க தடிமனான புத்தகங்களும் நிறைந்திருந்தன. அத்தனையும் மெடிகல் சம்பந்தப்பட்ட ஆங்கில புத்தகங்கள்.

'இந்த புத்தகங்கள் இவனுக்கெதற்கு?' ஆச்சர்யத்துடன் ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்தவளை அதிர வைத்தது... மேக்ஸின் சைஸில் இருந்த ஒரு புகைப்படம்.

கார்த்திகேயனிடமிருந்து மெல்லிய முனகல் சத்தம் வரவே... அப்படியே மூடி வைத்து விட்டு வெளியே வந்தாள் படபடப்புடன்.

தன்னறைக்கு வந்த பின்பும் படபடப்பு அடங்கவில்லை. குழப்பமும் மிகுந்திருந்தது.

'கார்த்திகேயன் யார்? அவனுக்கும் இந்த



குடும்பத்துக்கும் என்ன சம்பந்தம்?'

♥ ♥ ♥

**நா**ட்கள் சில கடந்தன. ரஞ்சித் வலிய அஸ்மிதாவிடம் பேச முனைந்தான். அவளோ, முன்பை விட அதிகமாய் அவனை எடுத்தெறிந்துப் பேசினாள்.

பத்மாவதியும் அவள் மனநிலைப் புரியாமல் ரஞ்சித்தை கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தினாள். அஸ்மிதாவும் உறுதியாய் மறுத்தாள்.

கார்த்திகேயன் உடல்நிலைத் தேறி வேலைக்குத் திரும்பியிருந்தான். அஸ்மிதா அவனை ஊன்றி கவனித்தாள்.

அவளை பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினோம் என்கிற விஷயத்தை பெரிதாய் எடுத்துக் கொள்ளாமல், சலுகைக்காகவாவது அவளைப் பார்த்து புன்னகைப்பது என்று கூட இல்லாமல் வேலையே கண்ணாக இருந்தது... அவன் மீதான கவனத்தை அதிகப்படுத்தியது.

பத்மாவதி வழக்கம் போலவே... அவனின் சின்னச் சின்ன விஷயங்களை பெரிதுப்படுத்தி எரிந்து விழுந்தது இயல்பாய் தோன்றவில்லை. கார்த்திகேயனும் அமைதியாய் அவள் வசைகளை ஏற்றுக் கொண்டது வியப்பைத் தந்தது.

கார்த்திகேயன் பின்னாடி பெரிய ரகசியம் ஒளிந்திருக்கிறது என்று உறுதியாய் நம்பினாள். அவளுக்கே சற்று ஆச்சர்யம் தான்!

பத்து நாட்களுக்கு முன்பு வரை அவனைக் கண்டாலே, பத்மாவதியை விட அதிகமாய் வெறுத்தவள் தான்! இப்போது அந்த வெறுப்பெல்லாம், நெருப்பில் உருகிய நெய்யாய் காணாமல் போய்... ஒருவித நன்றி உணர்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது.

அஸ்மிதா அவனுடன் வெளியேப் போகும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டாள்.

"ஹேவ் எ நைஸ் டே!" என்றாள் ஒருமுறை.

"தாங்க்ஸ் மேடம்!" என்று வாயை மூடிக் கொண்டான்.

"என்ன படிச்சிருக்கீங்க?" என்றாள் மற்றொரு நாள்.

"டிகிரி" என்றவன் வியந்தாள்.

'என்னையும் மனிதனாய் மதித்துப் பேசுவது இவள் தானா? அன்றைய சம்பவத்தின் நன்றிக் கடனாய் முகிழ்ந்த நட்பா?'

அவள் என்னக் கேட்டாலும் பட்டும் படாமல் பதில் சொன்னான்.

ரெஸ்டாரண்டில் சாப்பிடும்போதும், கோவிலுக்குள்ளும் வலிய அழைத்தும்... நாசூக்காய் வர மறுத்தான்.

மாளிகைக்குத் திரும்பும்போது பாட்டி போனில் பேசிக் கொண்டிருந்தது காதில் தெளிவாய் விழுந்தது.

"இதோ பார் நீலிமா. நீ சீக்கிரம் இந்தியா வா! உன் பொண்ணு மனசை நீதான் மாத்தணும். ரஞ்சித்துக்கு என்ன குறைச்சல்னு வேண்டாம்ங்கறான்னுப் புரியலே. நம்ம சொத்தும், அம்முவும் வெளியேப் போகக் கூடாது. அ[...] மறுத்தான்னா... நான் உயிரோடயே இருக்க மாட்டேன் ஆமா... நீ சீக்கிரம் வந்து நிச்சயத்துக்கான ஏற்பாடைப் பண்ணிட்டு உன் பொண்ணை கனடாவுக்கு கூட்டிட்டு போ...!" என்றவள் இவளைப் பார்த்ததும், "அப்புறம் பேசறேன்" என்று கட் பண்ணி விட்டாள்.

அஸ்மிதாவுக்கு ஆத்திரம் கொப்புளித்தது. இவளிடம் பேசி எந்தப் பயனுமில்லை என்றுணர்ந்ததால் அமைதிக் காத்தாள்.

♥ ♥ ♥

**பா**ட்டியிடம் இடைவெளி அதிகரித்தது. பத்மாவதி பவனத்தில் இருக்கப் பிடிக்காமல் மொபட்டை எடுத்துக் கொண்டு எஸ்டேட் பக்கம் சென்றாள்.

தேயிலைகளின் பச்சை வாசனை மனதிற்



# மிளகுதக்காளிக் கீரை



மிளகுத்தக்காளிக் கீரையைப் பொரியல் செய்தும் கூட்டு செய்தும் உணவுடன் சேர்த்து உட்கொள்ள, உடம்பில் தங்கிய வாயுவினால் உண்டாகும் வாத நோயும், உடல் பருமனும், ஊளைச் சதையும், பானை போல் வயிறு பருமனா வதையும், மகோ தரத்தையும், பெரு வயிறையும் உடல் எடை கூடுவதையும் தடுத்து உடலைச் சீராக்கும். மேனி அழகாகும். மந்தம், அக்கினி மந்தம், செரியா மந்தம், பசியின்மை, வீக்கம், வாதம், வாதவில், வாதக்கடுப்பு, வாத எரிவு, குடைச்சல், சுரம், விக்கல், கபம், இருமல், சளி, நெஞ்சில் கட்டியகபம், நீர்க்கோர்வை, தலைபாரம், பித்தம், பித்தசுரம், வாந்தி, தலைசுற்றல், சொறி, அரிப்பு, நமைச்சல், வெள்ளைப்பாடு, வெட்டை, உடல் உஷ்ணம் போன்ற நோய்களை நீக்குவதுடன் உடம்பைப் பருமனாகாமல் சீராக இருக்கச் செய்யும். குடல் புண்ணை ஆற்றும்.

– இரா.பாலகிருஷ்ணன், வரக்கால்பட்டு.

தேவையாயிருந்தது.

"ஹலோ மேடம்!"

கதிரின் ஆச்சர்யமான குரலுக்கு வண்டியை நிறுத்தினாள்.

தேயிலைத் தோட்டத்தின் இடையில் அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகளிலிருந்து வேகமாய் இறங்கி வந்துக் கொண்டிருந்தான் கதிர்.

"ஹாய் கதிர்!"

"என்ன மேடம்... உங்களைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு? சாரதி வேலையே தரமாட்டேங்கறீங்க?"

"சாரதி?"

"ஐ மீன் டிரைவர்!"

"யூ நாட்டி" என்று சிரித்தவள்... "நாம எப்பவும் ஃப்ரண்ட்ஸ் தான் கதிர். கால் மீ... ஒன்லி அஸ்மி... ஓக்கே?"

"அப்படின்னா... பக்கத்திலேதான் எங்க வீடு! வந்து ஒரு டீ சாப்பிட்டீங்கன்னா... என்னை நண்பனா ஏத்துக்கிட்டீங்கன்னு சந்தோஷப்படுவேன்!"

"ஓ... ஷ்யூர்!"

## 15

'இந்த வீடா?' என்று ஆச்சர்யப்பட்டாள்.

'அப்படியானால் அந்தப் பெண்?'

"என் தங்கை அனு இவள்தான்! அனு... நான் அடிக்கடி சொல்வேனே... பத்மாவதி பவனத் தோட இளவரசின்னு..." என்று அறிமுகப் படுத்தி வைத்தான்.

"வணக்கம்ங்க" என்றவள் அண்ணனிடம் திரும்பி, "இவங்களை நான் ஏற்கனவே பார்த்திருக்கேன்... மேனேஜர் சாரோட கோவிலுக்கு வந்திருந்தப்ப..."

"அப்படியா? கார்த்தி என்னோட க்ளோஸ் ஃப்ரண்ட்தான் அஸ்மி! ரொம்ப நல்லவன். அனுவோட சமையல்னா அவனுக்கு உயிர்..."

அவன் சொல்லச் சொல்ல அனுவின் முகத்தில் தெரிந்த மாற்றங்கள்... அஸ்மிதாவிற்கு தெளிவாய் புரிந்துப் போனது. அனுவின் மனதில் கார்த்திகேயன் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்று!

உடனடியாக அந்த சூழல் அவளுக்கு பிடிக்காமல் போனது. அங்கிருந்து அகன்றால் போதும் என்றிருந்தது.

"கதிர்... தலைவலிக்குது... நான் கிளம்பறேன்!"

"அஸ்மி... ப்ளீஸ் ஒரு டீ... அனு நல்லா டீ போடுவா!"

"இன்னொரு நாள் பார்த்துக்கலாம். ப்ளீஸ்..." என்றவள் வெளியேறினாள்.

அனுவிற்கு அவளின் செய்கை விநோதமாய் இருந்தது. அதை விட கவலை அதிகமாய் இருந்தது.

அறைக்கு திரும்பிய அஸ்மிதாவிற்கு அழவேண்டும் போல் இருந்தது.

'ஏன்... எதற்காக... என்ன உணர்வு இது?' குழம்பித் தவித்து மருகினாள்.

பிற்பகல் விடைபெற்று போகும் ரம்மியமான சூழலில் நேர்க்கோடாய் மழைப் பெய்ய... மலைப்பிரதேசம் குளிரை உற்பத்தி செய்ய ஆரம்பித்தது.

அஸ்மிதா ஜன்னலருகே போய் நின்றாள்.

எதேச்சையாக அவள் கண்ணில் பட்டது அது!

அன்றொரு நாள் கார்த்திகேயன் தந்த ரெய்ன் கோட்டை வீசி எறிந்தாளே... அது இன்னமும் ஆரஞ்சு மரத்தில் சிக்கித் தொங்கிக் கொண்டிருந்தது.

என்ன நினைத்தாளோ... ஒரு இரும்புக் கம்பியை தேடி எடுத்து வந்து மரக்கிளையில் மாட்டி இழுத்து... லாவகமாய் அந்த ரெய்ன் கோட்டை எடுத்து விட்டாள்.

உயிரே கைக்கு வந்து விட்டதுப்போல் சிலிர்த்தாள்.

வெகுநேரம் அதையேப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

♥ ♥ ♥

அதிசயங்களும், ஆச்சர்யங்களும் வாழ்க்கையில் எதிர்பாராமல் நிகழ்பவை தானே?

முன்னறிவிப்பு ஏதுமின்றி வந்திறங்கினாள் நீலிமா! கூடவே ஒரு இளம்பெண்.. கையில் ஒரு வயதுக் குழந்தை!

"நீலி... நீலி... நீயா.. நிஜமாகவே வந்திருக்கறது நீதானா?" பத்மாவதியால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

"நானேதான்... என்னம்மா... ரொம்ப இளைச்சிட்டிருக்கிங்க?"

"வயசான கிழவியை தனியே விட்டுட்டுப் போய்ட்டீங்க... ஏக்கத்திலேயே உடம்பு கரைஞ்சுப் போச்சு. ஆமா... என்ன திடீர்னு ஒரு போன் கூட பண்ணாம...?"

"கல்யாண விஷயமாதான்... ரஞ்சித் எங்கே?"



"எஸ்டேட்ல இருக்கான்... வர்ற நேரம் தான். முதல்ல உன் பொண்ணை சரிக்கட்ற வழியைப் பார். மாப்பிள்ளை வரலியா?"

"அப்புறம் வருவாரும்மா!"

"இது யாரு நீலி? சொல்லவே இல்லை!"

"பேரு ஷோபனா... இங்கே இவளோட உறவுக்காரங்க இருக்காங்க. அவங்ககிட்டே சேர்க்கணும். இப்போதைக்கு நம்ம கூடதான் இருப்பா!"

"தாராளமா இருக்கட்டும்... பொன்னம்மா... இந்தப் பொண்ணுக்கு ஒரு அறையை ஒழிச்சுக் குடு. குழந்தைக்கு உடனடியா சாப்பிட ஏதாவது கேட்டுக் குடு!"

"சரிங்கம்மா" பொன்னம்மா ஷோபனாவை அழைத்துக் கொண்டு நகர்ந்தாள்.

"அந்தப் பொண்ணோட முகமே சரியில்லையே... டல்லா இருக்கா!"

"பிரச்சினையாம். சரிப்பண்ணத்தான் ஊருக்கு வந்திருக்கா. எங்கே அஸ்மிதாவை காணோம்?"

"அதான் வந்திருக்காளே... மூலிகை ஆராய்ச்சிக்குன்னு... அதுக்காகதான் போயிருக்கா!"

நீலிமா குளித்து முடித்து சாப்பிட்டு விட்டு மெல்லக் கேட்டாள்.

"எங்கேம்மா அந்த கார்த்திகேயன்?"

"அந்த கடங்காரன் புரோட்டீன் கம்பெனிக்கு போயிருக்கான். எங்கிட்டேயே வந்து சட்டத்திட்டமா அஸ்மிதாவுக்கும், ரஞ்சித்துக்கும் கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு சொல்றான்டி?"

"அப்படியா?"

"என்ன அப்படியான்னு அவ்ளோ சாதாரணமாக் கேட்டுட்டே? அவன் மூஞ்சியில கரியப் பூசறமாதிரி இந்த கல்யாணம் கிராண்டா நடக்கணும்!"

"ஹேய் மம்மி... எப்ப வந்தே?" தாயைப் பார்த்த இன்ப அதிர்ச்சியில் துள்ளி ஓடிவந்து கழுத்தைக் கட்டிக் கொண்டாள் அஸ்மிதா.

"அதிருக்கட்டும்... நீ எப்படியிருக்கே... உன் ரிசர்ச் எப்படியிருக்கு?"

"வெல்! என்ன சர்ப்ரைஸா வந்திருக்கே?"

"அதான் சொல்லிட்டியே... சர்ப்ரைஸ்னு?"

"வாட் சர்ப்ரைஸ்?"

"ரஞ்சித்தும் வந்திடட்டுமே!"

அந்தப் பேரைக் கேட்டதுமே முகம் மாறினாள் அஸ்மிதா.

நீலிமா வந்திருப்பது தெரிந்து அடுத்த அரைமணி நேரத்தில் ரஞ்சித்தும் வந்து விட்டான்.

"அக்கா... என்னக்கா ஒரு போன் கூடப் பண்ணாம... சர்ப்ரைஸ் தர்றே?"

"உன் கல்யாண விஷயமா பேசணும்னு தான்!"

அந்த பதிலால் ரஞ்சித்தின் முகத்தில் தேஜஸ் கூடிற்று. ஓரக்கண்ணால் அஸ்மிதாவைப் பார்த்து... வெட்கப்பட்டான்.

"நான் மட்டும் தனியா வரலே..."

"அங்கிளும் வந்திருக்காரா?"

"ம்ஹூம்... பொன்னம்மா... அந்த கெஸ்ட்டை அழைச்சிட்டு வா!"

ரஞ்சித் ஆவலாய் காத்திருக்க, பொன்னம்மா அழைத்து வந்தவளைப் பார்த்து சகலநாடிகளும் நடுங்கின.

தன்னை சுதாரித்துக் கொண்டவன், "யாருக்கா இவங்க?" என்றான்.

ஷோபனா அதிர்ந்துப்போக, பத்மாவதியும், அஸ்மிதாவும் நடப்பதை குழப்பத்துடன் வேடிக்கைப் பார்த்தனர்.

"என்ன ரஞ்சித் இவளையா யாருன்னுக் கேக்கறே? ஜாஃப்னாவுல... தமிழ்க்குடும்பம்னு இவங்க ஃபேமிலியோட நீ பழகலே?"

".....?!"

"இவளைதான் தெரியலே சரி... அவ கையிலே இருக்கிற குழந்தையக் கூடவா உனக்குத் தெரியலே? உன் ரத்தம் ரஞ்சித்! உன்னோட குழந்தை"

"நீலி... என்னடி பெரிய குண்டை தூக்கிப் போடறே?" பதறிவிட்டார் பத்மாவதி.

"ஆமாம்மா... இந்தப் பெண்ணோட பழகி, கல்யாணமும் பண்ணி, ஒரு குழந்தையைப் பெத்துட்டு ஏமாத்தி விட்டுட்டு வந்துட்டான். அஸ்மிதாவை கல்யாணம் பண்ணிக்கிட்டு அத்தனை சொத்தையும் அனுபவிக்கணும்னு என்கிட்டே நல்ல பேர் வாங்கி... என் மனசை மாத்தி... சே... நானும் ஏமாந்துட்டேன்ம்மா!"

அஸ்மிதா முகத்தில் நிம்மதி.

ரஞ்சித்தோ ஆத்திரமுற்றான்.

"அக்கா... பிடிக்கலேன்னா இந்த கல்யாணத்தை நிறுத்திடலாம். அதுக்காக என் கேரக்டரையே தப்பா பேசாதீங்க. சத்தியமா இவ யாருன்னு..."

"சீ... வாய மூடு! எல்லா ஆதாரத்தோடயும் தான் அவ இங்கே வந்திருக்கா. இந்தக் குழந்தை உனக்குப் பிறந்ததுன்னு டி.என்.ஏ. சர்ட்டிஃபிகேட்டோட! போலீஸ்லேயும் கம்ப்ளைண்ட் பண்ணியாச்சு. மனசு திருந்தி ஏத்துக்கிட்டா உனக்கு நல்லது... இல்

லேன்னா... மத்ததை போலீஸே பார்த்துக்கும்."

"........?!"

அப்போது... கார்த்திகேயன் அங்கு வந்தான்.

"வணக்கம்ங்க... நான்தான் கார்த்திகேயன்" என்று நீலிமாவிடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான்.

நீலிமா பரவசமானாள்.

"தாங்க்ஸ் கார்த்திகேயன்... என் பொண் ணோட வாழ்க்கைய காப்பாத்திட்டே!"

அனைவர் முகத்திலும் வியப்பு.

"என்னடி சொல்றே?"

"ஆமாம்மா! அஸ்மிதாவுக்கும், ரஞ்சித்துக் கும் கல்யாணம்னு பேச்சு முடிவானதுமே கார்த்திகேயன் ஜாஃப்னாவுல இருக்கிற தன் ஃப்ரண்ட் மூலமா ரஞ்சித்தை பத்தி விசாரிச்சு எனக்கு தகவல் சொன்னார். நானும் ஜாஃப்னாவுக்குப் போய் ஷோபனாவை கையோட அழைச்சிட்டு வந்துட்டேன்."

ரஞ்சித் அவனை முறைக்க, அஸ்மிதா அவனருகில் சென்று, "மறுபடியும் என்னை காப்பாத்திட்டீங்க... தாங்க்ஸ்" என்றாள்.

பதிலுக்கு மெல்லப் புன்னகைத்தான்.

பத்மாவதி திடீரென வாய்விட்டு அழ ஆரம்பித்தார்.

"உனக்கு என்னடா துரோகம் பண்ணி னோம்? எதுக்கு எங்களுக்கு இவ்ளோ பெரிய துரோகம் பண்ண நினைச்சே? சொந்தப் பிள்ளை மாதிரி வளர்த்தேனே..."

"என்னை மன்னிச்சிடு பெரியம்மா!"

"சீ... போ வெளியே! வளர்த்த கடனுக்கு உனக்கு சேர வேண்டிய சொத்தை அப்புறம் தர்றேன்! போய்டு வெளியே... என் கண்முன் னால நிக்காதே. நீயும் உங்க பெரியப்பா மாதிரி துரோகம் பண்ணிட்டியேடா... பண்ணிட் டியே!" என்று கதறியவள்... அப்படியே மயங்கி விழ...

கூர்மையான டேபிள் முனை தலையை பதம் பார்க்க... ரத்தம் குபுகுபுவென பொங்கியது.

## 16

நடந்தவைகள் அனைத்தும்... அனைவர் புருவங்களையும் உயர்த்த வைத்தது.

பத்மாவதிக்கு பலத்த அடிபட்டிருந்தது. உடனடியாக சிகிச்சை தந்தாக வேண்டிய கட்டாயம். எஸ்டேட் தொழிலாளர்களுக்கென தனி மருத்துவமனை உண்டு. போனில் அங்கிருந்து சில மருந்துகளின் பெயர்களைச் சொல்லி எடுத்துவரச் செய்து கார்த்திகேயனே சிகிச்சையளித்தான். ஒரு தேர்ந்த டாக்டரைப் போல் அவன் செயல்பட்ட விதம், அஸ்மிதாவின் சந்தேகத்தை உறுதி செய்தது.

"எக்ஸ்க்யூஸ்மீ!"

"யெஸ்!"

"ஆர் யூ டாக்டர்?"

"........?!"

"சொல்லுங்க மிஸ்டர் கார்த்திகேயன்! கிட்டத்தட்ட பாட்டிக்கு மைனர் ஆபரேஷனே பண்ணியிருக்கீங்க. அதை சாதாரண நபர் செய்ய முடியாது, செய்யவும் கூடாது. சட்டப்படி குற்றம். சொல்லுங்க... யார் நீங்க?"

சிறு மௌனத்திற்கு பின் தலையாட்டினான்.

"யெஸ்.. நான் டாக்டர் தான்!"

பூகம்பத்தின் அதிர்வு அங்கு.

எஸ்டேட்டின் சாதாரண பணியாள் டாக்டரா?

♥ ♥ ♥

அஸ்மிதா தன்னிடம் வெறும் நட்பு அடிப்படையில் தான் பழகியிருக்கிறாள் என்பதை நாளாக நாளாக புரிந்துக் கொண்ட கதிர்... நாசூக்காய் தன்னை தேற்றிக் கொண் டான்.

## சாப்பிட்ட உடன் பழம் சாப்பிடலாமா?

தினமும் பழம் சாப்பிடுவது நல்லது. ஆனால் சாப்பிட்ட உடன் பழம் சாப்பிடுதல் தவறு. ஏனெனில் பழங்கள் 20 நிமிடத்திற்குள் எளிதில் ஜீரணமாகிவிடும். ஆகையால் மாலை நேரத்திலோ, காலையில் சாப்பிடு வதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்போ, சாப்பிட்டு மூன்று மணி நேரத்திற்கு பின்போ சாப்பிடுவது சிறந்தது. அப்போதுதான் உணவின் ஊட்டச்சத்துகளும், பழங்களின் வைட்டமின் சத்துக்களும் உடலில் சீரான முறையில் சென்று சேரும். சாப்பிட்ட உடன் பழம் சாப்பிட்டால் நாம் சாப்பிடும் உணவும் விரைவில் ஜீரணமாகும் அல்லது அஜீரணக் கோளாறை உண்டாக்கிவிடும்.

- வி.ஸ்ரீவித்யாபிரசாத், அசூர்.



கார்த்திகேயனைப் பற்றிய விஷயம் வெளியே பரவ... கதிரால் நம்ப முடியவில்லை. வீட்டிற்கு வந்த கார்த்திகேயனிடம் அனைத் தெடுத்து விட்டான்.

"கார்த்தி... நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா?"

"என்ன கேள்விப்பட்டாய்?"

"நீ டாக்டரா?"

இருவருக்கும் தேநீர் கோப்பைகளைத் தந்த அனுவும் அவன் பதிலுக்காக காத்திருந்தாள்.

"அதெல்லாம் விடேன் கதிர்... நான் எதுக்காக வந்தேன்னா..."

"நான் உன் நண்பன்தானே?"

"எதுக்கு இப்படியெல்லாம் பேசறே?"

"அப்ப சொல்லு!"

"ஆமாம்!" என்றான் சலனமின்றி.

"அப்புறம் ஏன் இங்கே? டாக்டர்ங்கற போஸ்ட்டிங்கை விடவா, எஸ்டேட் மேனேஜர் போஸ்ட்டிங் பெரிசாத் தெரிஞ்சது? அதுவும் பத்மாவதி மேடத்துக்கு உன்னைக் கண்டாலே ஆகாது. பிறகெதுக்காக இங்கே...?"

"வேணாம் கதிர்! உன்கிட்டே கேட்க நிறைய கேள்விகள் இருக்கு. பட், என்னிடம் சொல்ல பதில் இல்லை. நேரம் வரும்போது... தன்னாலே தெரியும். இப்ப விட்ரு. நான் உன்னை நேசிக்கிறேன். நீ என் நண்பன். அதில் எந்த வில்லங்கமும் கிடையாது. ட்ரஸ்ட் மீ!"



"தெரியும்டா! அனு கூட உன் மேல எவ்வளவு பிரியம் வச்சிருக்காத் தெரியுமா?" மெல்ல மேட்டரை ஓப்பன் பண்ண ஆரம்பித் தான் கதிர்.

"தெரியும் கதிர். நான் இப்ப வந்ததே... அவளோட கல்யாண விஷயமா பேசத்தான்!"

அனுவின் முகம் அஸ்தமிக்கும் சூரியனாக மாற... வெட்கத்தில் அறைக்குள் ஓடி ஒளிந்துக் கொண்டாள்.

"கார்த்தி... நிஜமாகவாச் சொல்றே?" கதிரின் கண்கள் கலங்கின.

"அண்ணனா இருந்துக்கிட்டு பொறுப்பில் லாம இருக்கிறே! ஒரு நாளாவது நீ எங்கிட்ட 'அனுவுக்கு நல்ல மாப்பிள்ளை இருந்தா சொல்லு'ன்னு கேட்டிருப்பியா? நீ கேட்க லேன்னா என்ன? அனுவுக்கு நானும் கூடப்பிறக் காத அண்ணன் தானே? அவளுக்குப் பொருத்தமா ஒரு மாப்பிள்ளை பார்த் திருக்கேன். பேரு கோபிநாத். சாப்ட்வேர் என்ஜினியர். அம்பதாயிரம் சம்பளம். ஊரு கோயம்புத்தூர். இதுல போட்டோ, ஜாதகம் எல்லாம் இருக்கு. அவங்க சைட்ல எதையும் எதிர்பார்க்கலே. நீ கல்யாணம் மட்டும் கிராண்டா பண்ணு. அம்பது பவுன் நகைய நான் போட்டுடறேன்"

"கா...ர்...த்...தி!" தீயை மிதித்ததுப் போல் திடுக்கிட்டான் கதிர்.

"நீ... அனுவுக்கு... அண்ணனா?"

இதே கேள்விதான் உள்ளிருந்த அனுவிற் குள்ளும் வெடித்தது.

"நான் யாரோ, நீ யாரோ? ஆனா என்னை உன் குடும்பத்துல ஒருத்தனா நினைச்சியே! அனு ஒரு படி மேலே போய்... ஒரு தாய் மாதிரி எனக்கு பிடிச்ச சமையலை சமைச்சுப் போட்டா! எனக்கும் ஒரு தங்கை இருந்தா... அவளும் இப்படித் தானே பாசமா சமைச்சுப் போடுவான்னு... ஒவ்வொரு முறையும் நினைச்சுப்பேன். அடடா... பேச்சு சுவாரஸ்யத் திலே டைம் ஆகறதைப் பார்க்கலே. ஃபேக் டரிக்குப் போகணும். அனுகிட்டே காட்டு. அவளுக்கு பிடிச்சிருந்தாதான் மத்ததெல்லாம். பேசி முடிச்சிட்டு பதிலை சொல்லு. வர்றேன் கதிர். அனு எங்கே... கல்யாணம்னதும் வெட்கத்திலே ஓடி ஒளிஞ்சுக்கிட்டாளா? வர்றேன் அனு!" இங்கிருந்தே குரல் கொடுத்து விட்டு சென்று விட்டான்.

கதிர், அனு இருந்த அறைக்குச் சென்றான்.

பட்டாம்பூச்சிகள் பறந்து திரிந்த அவள் கனவின் மீது எரியும் கொள்ளிக்கட்டைகள்

வீசப்பட்ட வலியில் கண்கள் வெள்ளமாய் பொங்கின.

அண்ணன் வரும் ஓசைக் கேட்டதும் சட்டென கண்களை துடைத்துக் கொண்டு திரும்பினாள்.

கதிருக்கு மனதைப் பிசைந்தது.

அவளின் ஒரு கை ஓசை அவனுக்குத் தெரியும் என்பது அனுவுக்கு தெரியாது. அவனும் இனி தெரிந்ததுப் போல் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

"அனு... இங்கே வைக்கிறேன்... அப்புறம் பார்த்து..."

"அவருக்கு பிடிச்சிருக்கு. உனக்கும் பிடிச்சிருந்தா... எனக்கும் சரிதாண்ணே!" என்றாள்.

காதலின் வலியை அவனும் உணர்ந்தவன் தானே?

அவள் தலையை மெல்ல தடவிக் கொடுத்து விட்டு வெளியேறினான்.

தனிமைக்காக காத்திருந்த அனு வெடித்தழுதாள்.

♥ ♥ ♥

மயக்கம் தெளிந்து எழுந்த பத்மாவதிக்கும் அது புதிய செய்தியாக இருந்தது.

'கார்த்திகேயன் டாக்டரா? என் உயிரைக் காப்பாற்றியதும் அவன்தானா? அதெப்படி? என் உயிரைப் பறித்து சொத்தையெல்லாம் அபகரிக்கத்தானே வந்திருக்கிறான்? அப்படியிருக்க... எப்படி என் உயிரைக் காப்பாற்றினான்? உண்மையிலேயே அவனுக்கு என் மீது பாசம் தானோ? நான் தான் தவறாக எண்ணுகிறேனோ?'

சற்றே இளகிய தன் மனதை சட்டென... பழையதெல்லாம் நினைவிற்கு வர மனதை இறுக்கிக் கொண்டாள்.

தலையில் போடப்பட்டிருந்த கட்டு, வலியைத் தந்தது. களைத்துப் போயிருந்தாள் பத்மாவதி. உட்கார விரும்பியதால்... அஸ்மிதா தலையணைகளை அடுக்கி முதுகுக்கு அரண் ஏற்படுத்தி, மெல்ல எழுப்பி உட்கார வைத்தாள்.

அவள் உடல் குறித்து பேசி முடித்துவிட்டு மெல்ல விஷயத்திற்கு வந்தாள் அஸ்மிதா.

"பாட்டி..."

"என்ன அம்மு... உன்னைப் பார்த்தாலே என் அவசர புத்திதான் ஞாபகத்துக்கு வருது. அந்த ரஞ்சித்துக்கு உன்னை தாரை வார்க்க நினைச்சேனே!"

"ப்ச்... அந்த விஷயம் வேண்டாம் பாட்டி! அதான் கார்த்திகேயன் என்னைக் காப்பாத்திட்டாரே. ரஞ்சித்தும் மனசு மாறி ஷோபனாவை ஏத்துக்கிட்டு வெளியேப் போய்ட்டார்!"

".......?!"

"கார்த்திகேயனுக்குதான் நாம நன்றி சொல்லனும்!"

"........?!"

"பாட்டி நான் ஒன்னு கேப்பேன்... உண்மைய சொல்லனும்!"

"என்னடா?" கண்கள் அச்சத்தில் விரிந்தது.

"கார்த்திகேயன் யார்?"

"அ... அவனைப்பத்தி... எ... என்கிட்டே கேட்டா? எனக்குத் தெரியாது!"

"பொய்... உனக்குத் தெரியும். அன்னைக்கு ரஞ்சித்கிட்டே... 'பெரியப்பா மாதிரி நீயும் துரோகம் பண்ணிட்டியே'ன்னு சொன்னே. அதுக்கு என்ன அர்த்தம்? எதேச்சையா ஒரு நாள் கார்த்திகேயனோட அறையிலே ஒரு போட்டோவைப் பார்த்தேன். நம்ம தாத்தாக் கூட ஒரு லேடி நின்னுக்கிட்டிருந்த போட்டோ அது! யாரந்த லேடி? அந்த போட்டோவை கார்த்திகேயன் ஏன் வச்சிருக்கனும்? மூனு டிகிரி வாங்கின ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்! கிளினிக் வச்சாலே லட்ச லட்சமா சம்பாதிக்கலாம். அப்படிப்பட்ட டாக்டர் உன் திட்டுக்கள், உதாசீனங்களை எல்லாம் பொறுத்துக்கிட்டு இங்கே சாதாரண வொர்க்கரா... பல சமயங்கள்ல டிரைவரா... ஏன் வேலை செய்யனும்? என்ன காரணம்?"

கேள்விகளை அடுக்கிக் கொண்டே போக, ஆயாசத்துடன் தலை சாய்த்துக் கொண்டவளின் கண்கள் கலங்கின.

"அஸ்மி... என்ன இது... இதுபோன்ற சமயத்துல பாட்டிய டிஸ்டர்ப் பண்ணலாமா? பாவம், துரோகத்தால அடிபட்ட பாட்டிய மேலும் பழசைக் கிளறி புண்ணாக்காதே! உன் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் தர்றேன்...வா!" என்று தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றாள் நீலிமா.

நடந்தவைகளை சொன்னாள்.

பல வருடங்களுக்கு முன்பு!

சாவித்திரி! பேரழகியான இவள் ராஜதுரையின் தேயிலை தோட்டத்தில் பணிபுரிந்தவள். கண்ணைப் பறிக்கும் அழகும், விண்ணை எட்டும் ஆசையுமாக வலம் வந்தவள்... ராஜதுரையின் உள்ளத்தையும் கவர்ந்தாள். இருவருக்கும் வயது வித்தியாசம் நிறைய!



வயதுக்கு வந்த மகள் நீலிமா இருக்க, பத்மாவதிக்குத் தெரியாமலே இந்தத் தொடர்பு வளர்ந்தது. பணக்காரியாகி விடவேண்டும் என்கிற பேராசை சாவித்திரிக்கு. வயது முதிர்ந்த தாத்தா தவிர, சொல்லிக் கொள்ள அந்த தோடர் இனத்தில் உறவினர் என்று யாருமில்லை. கோக்கால் அருகிலுள்ள தார்நாடு மந்து என்கிற ஊர்தான் அவள் வசிப்பிடம். ராஜதுரைக்கும் சாவித்திரிக்கும் ஏற்பட்ட தொடர்பில் கார்த்திகேயன் பிறக்கிறான். ஒரு சந்தர்ப்பத்தில் கணவனின் கள்ளத்தொடர்பு தெரியவர... நிலை குலைந்துப் போன பத்மாவதி, அன்றுடன் கணவரிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கிறாள். கார்த்திகேயனுக்கு ஏழு வயதாகும் போது சாவித்திரி மஞ்சள் காமாலையில் இறந்து விட... மகனை ஹாஸ்டலில் சேர்த்து படிக்க வைக்கிறார்.

வருடங்கள் பறக்கின்றன.

தார்நாடு மந்து... கல்விக்கூடம், மருத்துவ வசதிகள் அற்ற குக்கிராமம். அந்த ஊரின் டாக்டர் கைநாட்டு ஏகாம்பரம் தான். சாவித்திரி உட்பட எண்ணற்ற உயிர்கள் நோய்களுக்கு பலியாக... 'கார்த்திகேயன் மனதிற்குள் சபதம் ஏற்கிறான். தானொரு டாக்டராக உருவாகி... அந்த ஊர் மக்களை காக்க வேண்டும் என்று.

அதன் படியே டாக்டருக்கு படித்து முடிக்கிறான். மகளுக்கு திருமணம் முடிந்து பேத்தியையும் பார்த்துவிட்ட ராஜதுரை படுக்கையில் விழுகிறார். படித்து முடித்து தன் கிராமத்தில் நலப்பணிகளை செய்துக் கொண்டிருந்த கார்த்திகேயனுக்கு நியாயப்படி அவனுக்கு கிடைக்க வேண்டிய உரிமை கிடைக்க செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அவன் தந்தைதான் ராஜதுரை என்று யாருக்கும் தெரியாது. அந்த வகையில் சாவித்திரிக்கு கெட்ட பெயர்தான். தாய், தந்தை பாசத்திற்காக ஏங்குகிறான். மகனை ஒரு பணியாளைப் போல் மாளிகைக்கு அழைத்து வருகிறார். பத்மாவதி எதிர்க்கிறாள். "உங்களையே நான் ஏற்றுக் கொள்ளாதபோது என் மகனாக இவனை எப்படி ஏற்றுக் கொள்வேன்?" என்று.

தானொரு டாக்டர் என்பதை மறைத்து, பத்மாவதியிடம் கெஞ்சுகிறான்.

"உங்கள் நிழலில் ஒரு வேலைக்காரனாக இருக்கவாவது சம்மதியுங்கள்" என்று. பலத்த கெஞ்சல்கள், வற்புறுத்தலுக்கு பின் அரைமனதாய் சம்மதித்தாள்... ஒரு கண்டிஷனோடு. "எந்த சூழலிலும் அவன் யார் என்ற உண்மை அவன் வாயிலிருந்து வரக் கூடாதென்று!" சம்மதிக்கின்றனர்.

இறக்கும் தருவாயில் மனைவியிடம், "அவன் உனக்கு பிறக்கவில்லை என்றாலும், என் மகன், என் ரத்தம். அவனை விரட்டிடாதே பத்மா!" என்று. வேண்டா வெறுப்பாக தலையாட்டுகிறாள்.

ராஜதுரை இறந்துப் போகிறார். அத்தனை நிர்வாகமும் பத்மாவதியிடம். அவளுக்குத் துணையாக இருந்து செயல்படும் பொறுப்பு கார்த்திகேயனுக்கு. அவனை விரட்ட யாருக்கும் அதிகாரம் இல்லை என்பது ராஜதுரையின் சட்டம்.

பத்மாவதிக்கு அவனை பார்க்கும் போதெல்லாம் கணவனின் துரோகம்தான் நினைவிற்கு வரும். அவனைத் தீயாய் வெறுத்தாள்.

கார்த்திகேயனைப் பொருத்தவரை ஒரே லட்சியம்தான்! பத்மாவதி தன்னை மகனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவள் விரும்பாவிட்டாலும் உடனிருந்து... ஒரு பூப்போல் பார்த்துக் கொள்கிறான்.

தன்னை அழித்து... அத்தனை சொத்தையும் அபகரித்துக் கொள்ளவே வந்திருக்கிறான் என்பதை அழுத்தமாக மனதில் பதிய வைத்துக் கொண்ட பத்மாவதி... அவனை கிட்டே நெருங்க விடுவதில்லை.

## 17

உண்மை அனைத்தும் தெரிந்தபின் அஸ்மிதாவிற்கு அவன் மீது மரியாதை கூடிற்று.

அவனின் டாக்டர் முகம் வெளியில் தெரிந்த பின்பும், சிறிதளவுக் கூட மாற்றமின்றி பழையபடியே வலம் வந்தான் கார்த்திகேயன். எஸ்டேட்டிற்கு செல்வதும், தொழிற்சாலைகளுக்கு ஓடுவதும், ஞாயிறுகளில் ஊருக்கு செல்வதும், கூடவே அனுவின் திருமண ஏற்பாடுகளை முன்னின்று செய்வதிலுமாக, இயல்பாய், சுறுசுறுப்பாய் வளைய வந்தான்... ஒரு விஷயத்தைத் தவிர.

உறவுக்காரன் என்று புதிதாய் முளைத்த பார்வையோடு தன்னை நோக்கிய அஸ்மிதாவை கண்டு ஒதுங்கிப்போனான்.

அதிகமாய் தென்படாதவனை எப்போதும் எதிர்பார்க்கத் துவங்கியது விழிகள்.

'ஏன் அவனையே நினைக்கிறேன்?' என்று தன்னைத்தானே கேள்விக் கேட்டு கொண்ட வளுக்கு விடையும் கிடைத்தது.

ராஜதுரைக்கு மகனாகப் பிறந்தும் எதை யும் எதிர்பார்க்காத எளிமையுடன் வாழும் குணம்!

நாளுக்கு நாள் அவன் மீதான மரியாதை யும் அதிகரித்தது.

வந்த வேலை முடிந்தது. மூலிகை ஆராய்ச் சிப் பணியை நிறைவு செய்தவள்... அதை யுனிவர்சிடியில் சப்மிட் செய்வதற் காக கனடா புறப்பட்டாக வேண்டும். நாளும் குறிக்கப் பட்டு... கிளம்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பத்மாவதிக்கு பேத்தியை அனுப்ப மனசில்லை.

"ஆறு மாசத்துல மறுபடி இங்கேயே அனுப்பி வச்சிடறேன்ம்மா" என்று நீலிமா சமாதானப்படுத்தியும்... சமாதானமாக வில்லை.

"இல்லை... என்னை ஏமாத்தறீங்க. அம்மு மறுபடி இங்கே வரமாட்டா. அங்கேயே அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணிடுவீங்க!"

"ஏம்மா அப்படிச் சொல்றே?"

"அதான் ரஞ்சித் ஏமாத்திட்டானே?"

"இந்த ஊர்ல ரஞ்சித்தை தவிர வேற மாப்பிள்ளையே கிடைக்க மாட்டாங்களா, என்ன? நீயே பார்த்து சொல்லு. அஸ்மிக்கும் பிடிச்சிருந்தா முடிச்சிடலாம்!"

"ஆமாம் பாட்டி! எனக்கே இப்ப கனடா போகப் பிடிக்கலே. இங்கேயே செட்டிலாய் டணும்னு ஆசைப்படறேன். அதனால... நீயே அலையன்ஸ் பாரு. ஆனா, கல்யாணமான வனாப் பார்த்துடாதே! ம்?"

"என் ராஜாத்தி! இந்த வார்த்தைப் போதும்டி. ரஞ்சித்தை மனதார நம்பி மோசம் போய்ட்டேன். மறுபடி அந்த தப்பைப் பண்ணுவேனா? உனக்குப் பொருத்தமானவனா தேர்ந்தெடுத்து வைக்கிறேன். சீக்கிரம் வந்துடு அம்மு... இந்த கிழவிய தவிக்க விடாதே!"

"ஆறுமாசம் முடிஞ்சதும் 'டாண்'னு வந்து குதிப்பேன்... ஒக்கே?"

♥ ♥ ♥

அன்று நீலிமாவும், அஸ்மிதாவும் புறப்பட் டனர். புதிதாய் வேலைக்கு



அமர்த்தப்பட்ட டிரைவர் நீலமேகம் காரை துடைத்துக் காத்திருந்தார்.

சென்னைக்குச் சென்று... அங்கிருந்து மும்பை சென்று... அங்கிருந்து கனடா!

எல்லோரிடமும் விடைபெற்றனர்.

"வர்றேன் தம்பி!" என்றுரைத்த நீலிமாவை நெக்குருக கைகூப்பினான் கார்த்திகேயன்.

'நீங்களாவது என்னை தம்பியாய் ஏற்றுக் கொண்டீர்களே' என்ற நன்றியுடன்.

அஸ்மிதா அவனைப் பார்த்து தலையசைத்து விடை பெற்றாள்.

அவன் முகத்தைக் கண்டு திடுக்கிட்டான். நீண்ட நேர அழுகையின் படிமங்கள் முகத்தில்!

'பாட்டியை பிரிகிற வேதனையோ?'

'இருக்கலாம்!'

ஒற்றைப் புன்னகையில் விடை தந்தான்!

♥ ♥ ♥

**ரா**ஜதுரையின் நம்பிக்கைக்குகந்த குடும்ப வக்கீல் பலவேந்திரன் பத்மாவதியின் எதிரில் அமர்ந்திருந்தார். அந்த குடும்பத்து பிரச்சினைகளை முழுவதுமாக அறிந்த குடும்ப நண்பரும் கூட!

பத்மாவதி, தயாரித்து வந்திருந்த உயிலை மொத்தமாகப் படித்து முடித்து புன்னகைத்தாள்.

"எல்லாம் சரியாயிருக்கு! நான் சொன்ன மாதிரியே எல்லா சொத்தையும் அஸ்மிதா பெயருக்கு மாத்திட்டீங்க. சந்தோஷம் சார்!"

"இந்த உயிலுக்கு இப்ப என்னம்மா அவசரம்? எப்படி இருந்தாலும் உங்களுக்குப் பிறகு உங்க மகளுக்கும், பேத்திக்கும் தானே சேரப்போகுது?"

"உங்களுக்கு தெரியாததில்லே வக்கீல் சார்! அந்த கார்த்திகேயனை பத்தி உங்களுக்குத் தெரியாது. நல்லவன் மாதிரி வேஷம் போட்டுக்கிட்டு நடிக்கிறான். இங்கே எதுக்காக வந்து ஒட்டிக்கிட்டிருக்கான்? டாக்டருக்கு படிச்சிட்டு அந்த தொழிலைப் பார்க்காம இங்கே ஏன் வேலை செய்யணும்? எந்த வகையிலாவது சொத்தை அபகரிக்கலாம்னு தான்!"

"சேச்சே.... அந்த தம்பி அப்படிப்பட்டவரில்லேம்மா!"

"அவனைப் பத்தி உங்களுக்கென்னத் தெரியும்?"

"தெரிஞ்சதாலதான் சொல்றேன்!"

"என்ன?"

"சொல்லக் கூடாதுன்னு நினைச்சேன். சொல்லவும் கூடாதுன்னு உத்தரவு! அதையும் மீறி சொல்றேன்னா.... உங்க தப்பான அபிப்ராயத்தை மாத்திக்கணும்னுதான்! உங்க கணவர் சேர்த்து வச்ச சொத்துக்களோட மதிப்பு எவ்வளவுன்னு உங்களுக்கே தெரியாது. கார்த்திகேயனுக்கும் உங்கள் கணவர், கோயம் புத்தூர், கோத்தகிரி, கேரளாவுல வாங்கிப் போட்டிருக்கிற பண்ணை வீடுகளையும், நிலங்களையும் எழுதி வச்சார். அப்பவே அதோட மதிப்பு நூறு கோடி! இன்னைய தேதிக்கு அறுநூறு கோடி! விஷயம் தெரிஞ்சதுமே கார்த்திகேயன் செய்த முதல் வேலை என்னத் தெரியுமா? தனக்கு எழுதி வைத்த அத்தனை சொத்துக்களையும் அவர் அன்னைக்கே உங்க பேர்ல மாத்தி எழுதிட்டார். அதற்கான அத்தனை ஆதாரமும் என்கிட்ட இருக்கு. அவரை மாதிரி ஒரு நல்ல மனுஷனைப் பார்க்கிறது அபூர்வம்மா. நேரமாச்சு நான் புறப்படறேம்மா!"

பலவேந்திரன் புறப்பட்டுப் போன பிறகும் சிலையாய் அமர்ந்திருந்தாள் பத்மாவதி.

♥ ♥ ♥

**அ**தற்கடுத்து வந்த பத்தாவது நாள் அடுத்த ஆச்சர்யம் காத்திருந்தது.

நீலிமா திடீரென வந்திறங்கினாள்.

"அட... நீலி... நீயா... என்ன திடீர்னு... ஒரு போன் கூட பண்ணாம?"

"அஸ்மிதா இங்கே வந்தாளாம்மா?"

"அஸ்மிதாவா? என்னடி உளர்றே? அவதான் உன் கூட... என்னடி ஆச்சு... படபடங்குதே?" அதிர்ச்சியில் முகம் வெளிறியது.

"பயப்படாதேம்மா... அவ இங்கேதான் கிளம்பி வந்தா!"

"எதுக்கு வந்தா? என்ன பிரச்சினை? புரியும் படியா சொல்லேண்டி!" பரபரத்தார்.

"அவ இங்கேர்ந்து வந்ததிலேர்ந்தே சரியில்லேம்மா. யார்கிட்டேயும் சரியா பேசாம, சாப்பிடாம, தூங்காம எதையோ இழந்தவ மாதிரியே நடந்துக்கிட்டா. எனக்கு இங்கே இருக்க பிடிக்கலேம்மா... நான் பாட்டிக்கிட்டேயே போய்டறேன்னு பித்து பிடிச்சவ மாதிரி சொல்லிக்கிட்டிருந்தா. ரெண்டு நாள் முன்னாடி திடீர்னு ஏர்போர்ட்லேர்ந்து போன் பண்றா... நான் இந்தியாப் போறேன்னு!"

"உனக்கு போன் பண்ணி சொன்னா பதறிடுவேன்னுதான் நான் பண்ணலே! அதான் நானும் கிளம்பி வந்துட்டேன்!"

"அவ இங்கே வரலியேடி! ஐயோ... என் பேத்திக்கு என்னாச்சோ?" அழத் துவங்கினாள்.

"அம்மா!"

"........?!"

"அழறதை நிறுத்திட்டு என் கூடவா! தாய் அறியாத சூல் இல்லை. என் யூகம் சரியாயிருந்தா அவ அங்கே தான் இருக்கணும்!"

"எங்கே?"

## 18

**தா**ர்நாடு மந்து!

சாலையோரம் நட்டு வைக்கப்பட்டிருந்த கல்லில் எழுதப்பட்டிருந்த பெயரைப் படித்து விட்டு டிரைவர் அந்தப் பாதையில் வண்டியை செலுத்தினார்.

பத்மாவதி மனசு பதைக்க அமர்ந்திருந்தாள். நீலிமாவுக்கும் மனக்கிலேசம்தான்.

"அம்மா அங்கே பார்!" நீலிமா திடீரென கூவினாள்.

கார் சடர்ன் பிரேக் போட்டது.

"என்னது?"

"அந்த போர்டைப் பாரும்மா..."

பத்மாவதி அம்மாள் உயர்நிலைப் பள்ளிக் கூடம். நிறுவனர்: கார்த்திகேயன்.

அம்மாவும், பெண்ணும் ஒரு வரையொருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

இன்னும் செல்லச் செல்ல ஆச்சர்யங்கள் காத்திருந்தன.

பத்மாவதி அம்மாள் சமூகக்கூடம், பத்மாவதி அம்மாள் முதியோர் இல்லம், பத்மாவதி அம்மாள் மருத்துவமனை!

"என்னம்மா இதெல்லாம்?"

"எனக்கும் ஒன்னும் தெரியலியேடி!"

வழியில் முகத்தில் படித்தக் களை தெரிந்த ஒரு நடுத்தர வயது ஆணை நிறுத்தி, "கார்த்திகேயன் வீடு எங்கே இருக்கு?" என்றனர்.

"ஓ... கார்த்தி தம்பிய தேடி வந்தீங்களா? இன்னைக்கு ஞாயிற்றுக் கிழமையாச்சே? ஹாஸ்பிடல்லதான் இருப்பாரு! அவரோட சேவை மையத்துக்கு நிதிக் குடுக்க வந்தீங்களா?"

"சேவை மையமா? அப்படின்னா?"

"அட... உங்களுக்கு விவரம் தெரியாதுங்களா? கார்த்தி தம்பி இல்லேன்னா நாங்க இல்லே. வெளியூர்ல வெளிநாட்ல இருந்தெல்லாம் இருக்கிற நல்ல மனுஷங்க தர்ற நிதிய வச்சு இந்த ஊருக்கு நல்லது பண்ணிட்டிருக்கிற தெய்வம் அவர். அவர் முயற்சியாலதான் எங்க ஊருக்கு ஸ்கூலும், ஹாஸ்பிடலும் கிடைச்சிருக்கு. பல பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைச்சிருக்கு."

"இந்த பத்மாவதி யார்?" என்றாள் போர்டை காட்டி.

"கார்த்தி ஐயா தெய்வமா மதிக்கிற பெண்மணியாம். யாருன்னு எங்களுக்குத் தெரியாது. எங்களுக்குத் தெரிஞ்சு அவங்க அம்மா பேர் சாவித்திரி!"

"தகவலுக்கு நன்றிங்க. டிரைவர் வண்டிய ஹாஸ்பிடலுக்கு விடு!" என்றாள் நீலிமா.

பத்மாவதியோ வாயடைத்துப் போயிருந்தாள்.

கார்த்திகேயன் சத்தமேயில்லாமல் விளம்பரமில்லாமல் மிகப் பெரிய சமூக சேவை செய்துக் கொண்டிருக்கிறான்.

பத்மாவதியின் பெயருக்கு களங்கம் வரக் கூடாது என்பதால் தான் தன் ஊர்க்காரர்கள் யாரையாவது குன்னூரில் பார்த்து விட்டால், ஒளிந்து மறைந்து செல்வான்.

♥ ♥ ♥

**ஹா**ஸ்பிடலை அடைந்தனர்.

இருபது படுக்கைகளைக் கொண்ட வசதி! மூன்று மருத்துவர்களும், நான்கு நர்ஸ்களும் இருந்தனர். படுசுத்தமாய் இருந்தது. கார்த்திகேயன் வாரத்திற்கு ஒரு முறை வந்து செல்வான்.

கார்த்திகேயன் மாடியில் ரெஸ்ட் ரூமில் இருப்பதாக சொன்னார்கள்.

சென்றனர்.

அறைக்கதவு திறந்துதான் இருந்தது.

உள்ளிருந்து அஸ்மிதாவின் குரலும் கேட்டது.

கார்த்திகேயன் முதுகை காட்டியபடி நின்றிருக்க... அவனை நோக்கியபடி அஸ்மிதா.

"நீங்க பண்றது ரொம்ப தப்பு அஸ்மிதா! இங்கெல்லாம் நீங்க வந்திருக்கக் கூடாது!"

"என்னைப் புரிஞ்சுக்க மாட்டீங்களா கார்த்தி? நான் உங்களை இவ்வளவு தூரம் தேடி வந்தது எதுக்காக?"

"........?!"

"இத்தனை நாளா என் மனசு எனக்கேத் தெரியலே. புரியாத பிரியம்... பிரியும்போது புரிந்தது. கனடா போனப் பிறகு தான்... எதையோ இங்கேயே விட்டுட்டு வந்துட்டேன்னு புரிஞ்சது. அது... என் மனசு! என்னால உங்களைப் பிரிஞ்சு இருக்க முடியலே கார்த்தி. அந்த உணர்வுகளை எப்படி சொல்றதுன்னேத் தெரியலே! மழையைப் பார்த்ததும் முளைக்கிற காளான் மாதிரி... உங்களை புரிஞ்சுக்க ஆரம்பிச்சதும் காதல் முளைச்சிடுச்சி!"

"நான் உங்களை சலனப்படுத்தற மாதிரி எப்பவும் நடந்துக்கலையே! தேவையில்லாம ஒரு வார்த்தைக் கூட பேசினதில்லையே!"



"பேசலேதான்... பழகலேதான். ஆனா உங்க கண்கள்! அது சொல்லிச்சு... நீங்க என்னைக் காதலிக்கறதை!"

"பைத்தியக்காரத்தனமா பேசாதீங்க மேடம்! என் மனசுக்குள்ளே என்னைக்குமே நான் அந்த மாதிரி எல்லாம் நினைச்சதேயில்லை! என் தகுதி என்னன்னு எனக்குத் தெரியும். பத்மாவதி பவனத்துக்கு பாதுகாவலனா இருக்க மட்டும் தான் ஆசைப்பட்டேன். முதலாளியா ஆகணும்னு ஆசைப்படலே!"

"இல்லை... நீங்க பொய் சொல்றீங்க. உங்க மனசுல நான் இருக்கேன். அது எனக்கு தெரியும். நான் வளர்ந்த விதம், வாழ்ந்த வாழ்க்கை, லைஃப் ஸ்டைல், எதிர்பார்ப்பு எல்லாமே வேற! நான் ஆசைப்பட்டதெல்லாம் சொடக்கு போட்டு முடியறதுக்குள்ளே கிடைச்சது. ஆனா, இப்பக்கூட எனக்குத் தெரியலே... உங்களை நான் எப்ப காதலிக்க ஆரம்பிச்சேன்னு! ஆனா, ஆழமா நேசிக்கிறேன் கார்த்தி! உங்களைப் பார்க்கறதுக்காகவே கனடாவி லேர்ந்து நேரே இங்கேதான் வந்தேன். இங்கே வந்தப்பிறகுதான்.... உங்களுடைய அழகான இன்னொரு பக்கம் தெரிஞ்சது. என் பாட்டி பேர்ல சமூகக்கூடம், ஸ்கூல், ஹாஸ்பிடல்னு எத்தனை சோஷியல் வொர்க் பண்ணிட்டி ருக்கீங்க? உங்க மேல இன்னும் காதல் அதிகமாய்டுச்சு கார்த்தி. ஒரு அற்புதமான மனிதர் என் கணவரா வரணும்னு ஆசைப்பட றேன். அது உங்களைத் தவிர வேற யாரா இருக்க முடியும்?" அஸ்மிதாவின் குரல் நெகிழ்ந்தது.

"பாருங்க அஸ்மிதா... புரிஞ்சுக்குங்க. நல்ல பாரம்பரியத்துல பிறந்து வளர்ந்தவங்க நீங்க. அந்த பரம்பரைக்கு பங்கம் வரக் காரணமா நான் இருக்க மாட்டேன். உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும்னு எனக்கும் தெரியும். பத்மாவதி அம்மாவுக்கு என் அம்மாவும், அப்பாவும் செய்த துரோகமே போதும். என் ...ங்குக்கு நானும் செய்து அவங்களை ...யிரோட கொல்ல விரும்பலே! அவங்க ...ன்னை ஏத்துக்கலேன்னாலும் என் அம்மா அவங்கதான்! என்னைக்காவது என் மேல அன்பு வராதான்னுதான் நான் அங்கே இருக்கேன். எந்த சந்தர்ப்பத்திலேயும் அந்த ...யாட கண்கள்லேர்ந்து என் காரணமா ...ண்ணீர் வந்துடக் கூடாது. என் அம்மா ...டையில நுழைஞ்சதால பத்மாவதி அம்மா ...வாட வாழ்க்கை அமானுஷ்யமா ஆனது ...ாதும் அஸ்மிதா! நீங்க போய்டுங்க. உங்க பாட்டி உங்க மேல ரொம்ப ஆசை வச்சிருக் காங்க. சல்லடைப் போட்டு அலையன்ஸ் தேடிக்கிட்டிருக்காங்க. அவங்க ஆசையில கொள்ளி வச்சிடாதீங்க. நீங்க கனடாவிலேர்ந்து வந்தது அவங்களுக்கு தெரியாது. இங்கே வந்ததே தெரியாம... வந்த கால்டாக்ஸியி லேயே குன்னூர் போய்டுங்க. ப்ளீஸ் கிளம்புங்க!"

"பாட்டி மேல மட்டும்தான் உங்களுக்கு பாசமிருக்கா? என் மேல இல்லே?"

"விதண்டாவாதம் வேண்டாம்... கிளம் புங்க!"

"சரி கிளம்பறேன். ஒரே ஒரு உண்மையை சொல்லிடுங்க போய்டறேன்!"

"..........?!"

"உங்க மனசுல நான் இல்லே?"

"இல்லை!"

"பாட்டி மேல சத்தியமா சொல்லுங்க... நீங்க என்னை நேசிக்கலே...!"

"அஸ்மிதா... ப்ளீஸ்... திரும்பத் திரும்ப அதைப்பத்தியே ஏன் பேசறீங்க?"

"நீங்க சத்தியம் பண்ண மாட்டீங்க. அதுவும் பாட்டி மேல பொய் சத்தியம் பண்ற துணிச்சல் உங்களுக்கில்லே. இது போதும் கார்த்தி. இனிமேல் உங்களை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன். அதே சமயம் நான் வேற யாரையும் கல்யாணமும் பண்ணிக்க மாட்டேன்! நான் இந்தியாவுக்கு வந்ததுதான் பெரிய தப்பு! என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியாதுல்ல! தெரிஞ்சுக்குங்க. நான் மாடர்ன் கேர்ள்தான். பட், லைஃப்ல லவ் ஒரு முறைதான் வரணும். அது ஒரே நபரோட இறுதிவரை இருக்கணும் கறதுல உறுதியா இருக்கிறவ நான்! என் மனசை யாராலேயும் மாத்த முடியாது கார்த்தி. குட்பை...! இனி இந்தியாவுக்கு வரவே மாட்டேன்..." என்று கூறிவிட்டு புயலாய் வெளியேறியவள்... பேரதிர்ச்சியோடு ஸ்தம்பித் துப் போனாள்.

காரணம் நீலிமாவும், பத்மாவதியும்!

♥ ♥ ♥

கனத்த மௌனத்தை யார் கொல்வது என்று நால்வரும் தயங்கிக் கொண்டிருந்தனர்.

கார்த்திகேயன் சங்கடத்துடன் தலை கவிழ்ந்திருந்தான்.

அஸ்மிதா சற்று தைரியத்துடன் அமர்ந்தி ருந்தாள்.

நீலிமா பலத்த யோசனையில் ஆட்பட்டி ருந்தவள், உ ரனுக்கு சென்று போனில் கணவரி டம் பேசிவிட்டு மறுபடி வந்தமர்ந்தாள்.

பத்மாவதியோ கார்த்திகேயனையே பார்த் துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் கலங்கித் கொண்டிருந்தது.

"கார்த்திகேயா...!"

நம்ப முடியாதவனாய் ஏறிட்டு பத்மா வதியை பார்த்தான்.

'அழைத்தது அம்மாவா? என் பெயரையா சொல்லி அழைத்தார்கள்?'

"மே...ட...ம்!"

"வேண்டாம்ப்பா... இனிமேல் என்னை மேடம்னு கூப்பிட்டு நீ ஒதுங்கிப் போய் டாதே!"

"........?!"

"நான்தான் உன்னை இத்தனை வருஷமும் புரிஞ்சுக்காம இருந்துட்டேன். இங்கே வந்தப் பிறகுதான்... என் மேல உள்ள பாசத்தால ஒரு சாம்ராஜ்யத்தையே உருவாக்கியிருக்கேன்னு தெரிஞ்சது. ஒரு இடத்துலக் கூட உன்னைப் பெத்தவளோட பேரை வைக்கலியே... அவ்வளவு பாசமா உனக்கு?"

"..........?!"

"போதும்ப்பா... இப்படிப்பட்ட பிள்ளைய இந்த உலகத்து கண்களுக்கு மறைச்சு வச்சதெல்லாம்? தைரியமா, சந்தோஷமா சத்தம் போட்டு சொல்வேன்... கார்த்திகேயன் என் பிள்ளைன்னு!"

"அ...ம்...மா!"

"சொல்லுப்பா... வாய்நிறைய என்னை அம்மான்னு கூப்பிடுப்பா..." அவன் கைகளைப் பற்றி அழுதாள்.

"அழாதீங்கம்மா... எனக்கு இதுபோதும்மா! என்னை உங்க பிள்ளையா ஏத்துக்கிட் டீங்களே... இதை விட வேற என்னம்மா வேணும்?"

நீலிமாவும், அஸ்மிதாவும் உதடுகளில் புன்னகை உறைந்திருக்க... அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என் பரம்பரைக்கு எந்த பங்கமும் வந்திடக் கூடாதுன்னு நினைச்சேப் பார்... அது தான் கார்த்திகேயா இந்த பரம்பரையோட ரத்தம்! நீலி... நான் உன்கிட்ட ஒண்ணு கேட்பேன். அதுவும் என் பிள்ளைக்காக கேட்பேன்... தருவியா?"

"அதுக்கு முன்னால் நான் உங்ககிட்டே என் பொண்ணுக்காக ஒண்ணு கேட்பேன்மா... தருவியா?"

"என்ன கேட்கப் போறே?"

"உங்க மருமகன்கிட்டேயும் பேசிட் டேன்ம்மா. அவருக்கும் சம்மதம். எங்களுக்கு இருக்கறது ஒரே பொண்ணு... அவ விருப்பப் படி கல்யாணம் பண்றதுதான் எல்லாருக்கும் நல்லது. அதனால உங்க மகனை... என் தம்பி கார்த்திகேயனை என் பொண்ணுக்கு கல்யா ணம் பண்ண ஆசைப்படறேன். பிள்ளையத் தர சம்மதமா?"

பத்மாவதி மனம் விட்டுச் சிரித்தாள்.

"நான் என்ன நினைச்சேனோ அதையே நீயும் சொல்லிட்டே... ரொம்ப சந்தோஷம்டி நீலி!"

"எல்லாம் சரி... இந்த கல்யாணத்துல மாப்பிள்ளையோட சம்மதம் முக்கியமில் லையா? உங்க பிள்ளைக்கிட்ட கேட்டுச் சொல்லுங்க!"

"சொல்லு கார்த்தி... அக்கா கேக்கறா இல்லே!"

கார்த்திகேயன் வெட்கத்துடன் சிரித்து தலைக் கவிழ்ந்தான்.

"என்னம்மா... உன் பிள்ளை பதிலே சொல்லலே!"

அஸ்மிதா கார்த்திகேயனின் அருகில் சென்று கையை நீட்டினாள்.

"சும்மா சொல்லக் கூடாது. சத்தியம் பண்ணிச் சொல்லணும். என்னை உங்க பிள்ளை நேசிச்சாரா, இல்லையான்னு!" என்றபடி குறுகுறுவென அவனையே பார்த்தாள்.

பத்மாவதியும், நீலிமாவும் இங்கிதத்துடன் நழுவி வெளியே வந்தனர்.

"சொல்லு கார்த்தி.... டு யூ லவ் மீ?"

மெல்ல தன் கையை அவள் கையில் வைத்து மூடினான். கண்களில் இளக்கம்.

"ஆமாம் அஸ்மி... உயிருக்குயிரா!" என்றான் காதலாய்.

"இது போதும் கார்த்தி..." என்றவள் அவனை இறுக்கி அணைத்து மார்பில் முகத்தை வைத்து அழுத்திக் கொண்டாள்.

"ஏய்... அஸ்மி... விடு... அம்மா பார்க்கப் போறாங்க... விடு!" பதறினான்.

அவன் பதற்றத்தை ரசித்தவள் மேலும் இறுக்கினாள்.

"ஐயோ... விடுடா!" ஆனந்த அவஸ்தையுடன் நெளிந்தான்.

வெளியே... பனிமேகங்கள் காற்றில் குளிரை உற்பத்தி செய்துக் கொண்டிருந்தன.

உள்ளே... இரண்டு இளம் உள்ளங்களிலும் தான்!

**(முற்றும்)**